BILINGUAL FORTNIGHTLY

# ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 04 Issue - 92 25 Friday April 2008 ஐரோப்பாவில் ஆகக் கூடிய விலை 1 யூரோ

• நீங்கள் வீடு வாங்க, வியாபாரம் வாங்க கடன் தேவையா?
• வியாபார, ஆயுள்க் காப்புறுதிகள் செய்ய வேண்டுமா?
• உங்களுக்கு தேவையான Tax Advice, வியாபார ஆலோசனைகள் மற்றும் அனைத்துவகை Accountancy Servicesகளுக்கும் நாட வேண்டிய இடம்...

**Forward Consultants**
1, Lancelot Road, Wembley HA0 2AJ Tel: 0208 900 9052

## அரசியல்ல உதெல்லாம் சகஜமப்பா...



Photo: Senthuran

**CTN Travel Ltd.**
*(Near Lewisham College)*
WORLD WIDE TRAVEL AGENT
Discount rates for Europe, Canada, Madras, Singapore & Colombo
நம்பிக்கை, நாணயம், துரிதமான சேவை
Kuwait Airways £260 +Taxes - Madras, Sri Lankan £340 +Taxes - SriLanka, Cyprus £188 + Taxes
T: 020 8694 2914 F: 020 8694 0058 M: 07813 969 192, E-mail: sales@ctntravel.co.uk
CTN Travel

**BUYING or SELLING BUSINESS?**
Finance arranged for any type of business
Business Transfer & Commercial Finance Consultants
Vision
CALL t: 02087727991-2 f: 02087727993
890 Garratt Lane, Tooting, London SW17 0NB
NACFB

CFC
**Ceylon Favourite Catering**
Sri Lankan & South Indian 'Take Away'
We cater for all occasions, big or small.
Special offer
200 அப்பம் 6kg மேல், சொதி, சம்பல் - 500 grams £22
T: 020 8364 8500 M: 07984 016 021
92 East Barnet Road, New Barnet. EN4 8RQ

**ABBEY TRAINING.NET**
வகுப்புகள் NCPLH Certificate Course Life in the UK
Off Licence / Restaurant வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் Personal Licence & Premises Licence எடுத்து தருவோம்
Call: 020 8640 9900 / 07960 669 575
NESS & Co.
Immigration, Conveyancing, Licencing, Family Disputes & Others
Call: S.Thavanessan (**NESS**)
020 8665 2226 / 020 8640 5050 / 07956 913 164
38 London Road, Tooting SW17 9HP

**RAJA& CO SOLICITORS**
10 Upper Tooting Road, Tooting Bec London SW17 7PG
Tel: 020 8772 4900 Fax: 020 8682 9425
We provide following Legal Services:
Conveyancing:-
Buying and Selling
Houses Flats & Business
Criminal Cases
Civil Litigation
Family
Immigration
We hold Legal Aid Franchise in Immigration & Crime

**Mahaan Cuisine**
Sri Lankan & Indian Restaurant & 'Take-away'

Catered for all occasions, big or small.
100 மேல் சைவ சாப்பாடு from £1.75
அசைவ சாப்பாடு from £3.00.
Open: Mon-Fri. 6 pm - 11 pm, Sat. & Sun. 12 noon to 11 pm.
T: 020 8478 0789, 020 8252 2771 M: 07878 562 956
331 Ley Street, Ilford, Essex. IG1 4AA

ஞாயிறு தோறும் உடன்பங்கு ஆட்டிறைச்சி உட்பட சகல விதமான மரக்கறி வகைகள் பழவகைகள் அனைத்திற்கும் . . .

அனைத்துப் பொருட்களும் மிக மலிவு விலையில்
KATPAGAM CASH & CARRY
T: 020 8694 8810 F: 020 8311 9304
36 Loampit Hill, Lewisham, London. SE13 7SW

PROFESSIONAL WEBSITES FROM £199.99
FREE BUSINESS STATIONARY WITH ALL WEBSITE PACKAGES
Image Design Studio
0871 474 0644

**Ganga Restaurant**
THE KITCHEN OF KERALA

Fully Licensed & Air-Conditioned
Sea Food Specialist
கேரளா உணவகம்
சுவை மணம் குணம்
T: 020 8594 9998
M: 07943 220 288


SRI SOOBANA JEWELLERS
Tel: 020 8900 9009
123 Ealing Road, Wembley
Opening Hours
10am-7pm All 7 days
www.srisoobana-jewellers.com

## ஈசியாய் வாசிக்க ஒரு பேப்பர்


Ranges of dishes for your wide choice is
'The High Point'
'WELCOME SUMMER' SPECIAL OFFERS
'EAT-IN' CUSTOMERS LESS 20% ON YOUR FOOD BILL!
Chicken Briyani £3.70
Mutton Briyani £4.00
Prawn or Seafood £4.30
Chicken / Mutton Kothu £3.50
Prawn / Seafood Kothu £4.30
Mutton Roll 55p
Veg. Roll 45p
3 Vadai £1.00
'TAKE-AWAY' CUSTOMERS
SPECIAL PRICES ON SPECIAL MENU
Token for Free Half Pint Kingfisher Beer
FULLY LICENSED
EAT IN & TAKE-AWAY.
OUTDOOR CATERING
LARGE OR SMALL!
SPICE GROVE
The Finest Srilankan & Indian Restaurant
FUNCTION HALL WITH 150 SEATS
OPENING 11.00 AM TO 12.00 MID-NIGHT
T: 020 8690 1313
M: 07853 425 261
406-408 LEWISHAM HIGH STREET, LONDON, SE13 6LJ
(NEAR LEWISHAM HOSPITAL)
வந்து பாருங்கள், சுவைத்து மகிழுங்கள்,


நான் விரும்பும் ஒரே ஒரு
பணப் பரிமாற்றுச் சேவை
MCG
FAST CASH
SEND TODAY - COLLECT TODAY
வினாடிகளில் இலங்கையில் பணம்
We also offer NRFC/RFC Account Credits in GBP/USD
உங்கள் பணத்தை இலங்கையில்
600 க்கும் மேட்பட்ட கொமர்ஷல், ஹட்டன்
நஷனல் மற்றும் இலங்கை வங்கிகளில்
உடனடியாகப்பெற்றுக்கொள்ளலாம்.
Transfer Fees From only £5
BOC
BANK OF CEYLON
HNB
HSBC
SampathBank
PEOPLE'S BANK
நீங்கள் ஐக்கிய இராச்சியத்தில் எப்பகுதியில் இருந்தாலும்
எங்களைத்தேடி வர வேண்டியதில்லை!
எந்தவொறு BARCLAYS வங்கிக்கிளையில் பணத்தை
வைப்புச்செய்து விட்டு எங்களை அழையுங்கள்.
/C NAME - C.E.C LTD A/C NO - 70713945 SORT CODE- 20-36-47 BRANCH- HANOVER SQ
For more information in Tamil call Suresh on
020 8886 4488
Fastcash Financial Services Ltd.
125-127 Bramley Road, Oakwood, London, N14 4UT
www.cecltd.biz
*Terms and Conditions Apply. Call us for details.


CCTV
ALARMS &
ACCESS CONTROL
CCTV with remote access from any where in the world
Monitored intruder alarm systems
Alarm with dialers, which can connect to your phone
Simple door entry systems with number punching
or Card swipe PC based door entry systems with...
smart proxy readers to keep records
Vehicle tracking (Life on your PC)
For all your
Security & Safety
Solutions
Call: 07932 735573 / 01895 443 617
01895 440 666
NAVA SYSTEMS
For more details see our main advert inside or
visit our store at: Rainbow Industrial Estate
Trout Road West Drayton UB7 7XT


CCTV
Access Control
Alarms
10 Reasones why
our CCTV systems
are different to others
1. We only use the best quality equipment available.
2. Our recorders can be hidden away from staff and public.
3. No remote controls or buttons are required to operate the system.
4. Operate remotely with a special wireless mouse directly on to the screen.
5. True dual system, with two independent screens, one for you and one for your staff.
6. Your business can be viewed life and played back remotely from any where in the world.
7. We guarantee one month recording for you.
8. We also have available special till-tapping equipments, hidden cameras and microphones
9. You can also visit our branch and choose your equipment and we will install it for you.
10. We will provide the best after sale support.
NAVA SYSTEMS
Call: 07932 735573 / 01895 443 617
01895 440 666
For more details see our main advert inside or
visit our store at: Rainbow Industrial Estate
Trout Road West Drayton UB7 7XT




## (சுப்)பிராமணியசயமி

நளினியை பிரியங்கா காந்தி சிறையில் சந்தித்தது குறித்து (சுப்)பிராமணியசாமி காட்டும் அக்கறை சில சந்தேகங்களைக் கிளப்புகிறது.

ராஜிவ் காந்தியின் மரணம் குறித்து அவரது குடும்பத்தவர்களுக்கு சில சந்தேகங்கள் இருப்பதும் அந்தச் சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ள அவர்கள் முயல்வதும் அமரிக்க ஏஜண்டான சாமியை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருப்பது இந்தக் கொலையில் அமரிக்கர்களுக்கும் அவர்களது ஏஜண்டுகளுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா என்ற நீண்ட கால சந்தேகத்தை மீண்டும் வலுப்பிக்கிறது.

— ஐங்கரன்

## ஒரு பேப்பர் ஊடாக

சிறிலங்கா எம்பசியும் இநதியன் எம்பசியும் இங்குள்ள நாடுகளில் நிறைய தில்லுமுல்லு வேலைகளைச் செய்கின்றன. அவற்றில் முக்கியமானது மீடியாக்களுக்கு நிறையப் பணம் கொடுத்து அவற்றை ஊக்குவிப்பதாகும்.

முக்கியமாக றேடியோ இலவசப் பேப்பர்கள் என்பவற்றையே எம்பசிகள் பயன்படுத்துகின்றன. முக்கியமாக இலவச பேப்பர் அடிப்பதற்கு காசு அவ்வளவு செலவாகாது. அதனால் புற்றீசல் போல் பல இலவசப் பேப்பர்கள் வருகின்றன. அப்படியான பேப்பர்கள் போராட்டத்தையும் போராளிகளையும் அவற்றுக்கு ஆதரவு வழங்குவோரையும் கேவலமாகச் சித்தரிக்கின்றன. தமிழ் மக்கள் அத்தகைய பேப்பர்களையிட்டு கவனமாக இருக்குமாறு ஒரு பேப்பர் ஊடாக எச்சரிக்கிறேன்.

— க.ரங்கநாதன்

## சரியில்லை

சித்திரா தொடர் தொடர்பாக வித்தகன் நெஞ்சு பொறுக்குதில்லையே பகுதியிலும் சில வாசகர்கள் பூராயம் பகுதியிலும் எழுதிய விடயங்களை பார்த்த போது கவலையாக இருந்தது.

முதன் முறையாக எமது தமிழர்கள் ஒரு தொடர் நாடகத்தை தயாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அதில் சில தவறுகள் இருப்பது உண்மை.

ஆனால் அதற்காக அவர்களது முதல் முயற்சியை கடுமையாக விமர்சிப்பது சரியானதாகப் படவில்லை.

அந்த தொடர் நாடகத்தின் கமரா உள்ளிட்ட தொழிநுட்பம் இந்தியத் தொலைக்காட்சித் தொடருக்கு இணையாக உள்ளது. அது மட்டுமன்றி நடிகர்களும் சிறப்பாக நடிக்கிறார்கள். இப்படிப் பல நல்ல விடயங்கள் இருக்கின்றன. அவற்றை கவனத்தில் எடுக்க மாட்டீர்களா

— சிந்துஜா

## என்னையா விளக்கம்

ஐயா ஒரு பேப்பர் காரரே

கடைசியாக வெளிவந்த இதழில் இருந்த அந்த இரண்டு சிறு குழந்தைகளுக்கும் திறீ பெட் றூம் ஹவுசிற்கும் என்னையா சம்பந்தம். தயவு செய்து கொஞ்சம் விளங்கப்படுத்தினால் என்னைப் போன்ற பாமரர்களுக்கு உதவியாக இருக்கும்

— கந்தசாமி

## சுதந்திரம் பற்றிப் பேசும் சுத்துமாத்துப் பேர்வழிகள்

தேவ புத்திரனின் கருத்துச் சுதந்திரம் எதுவரை என்ற கட்டுரை நடுநிலை என்ற போர்வைக்குள் செயற்படும் சில உள்நோக்கக்காரர்களின் தேவைகளையும் அதற்காக அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளையும் சிறப்பாக வெளிக்காட்டியது

— சிவா

## சந்தேகம்

ஒரு பேப்பர் விளையாட்டுச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லையே. என்ன காரணம்? ஐரோப்பாவில் பல அணிகள் உதைபந்தாட்டத்தில் ஈடுபடுகின்றன. இந்தியாவில் இப்பொழுது ட்வென்ரி- 20 கிறிக்கெற் பொட்டிகள் நடைபெறுகின்றன. இந்த ஆண்டு சீனாவில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற இருக்கின்றன. இந்த வருசம் தான் ஐரோப்பிய கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெற இருக்கிறது. ஒரு பேப்பர் ரின் பார்வையில் இவை பற்றியெல்லாம் அறிய ஆவலாக உள்ளேன். விரைவில் ஒரு பேப்பர் ரில் விளையாட்டுச் செய்திகளைப் பார்ப்பேன் என நம்புகிறேன். அப்படி வராவிட்டால் ஒரு பேப்பர் ரில் எனக்கொரு சந்தேகம். வேளா வேளைக்குத் திண்டு போட்டுத் திமிரெடுக்கத் தான் ஒரு பேப்பர் ரை நடத்திறியளோ?

— தினேஸ்குமார்

## திருகுதாளம்

அம்மாமாரின் திருகுதாளங்களை வெளிக்கொண்டு வரும் விதமாய் சிறி அவர்கள் எழுதியிருந்த செருப்புப் பூசை கட்டுரையை வாசித்த போது கலாச்சாரத்தில் உயர்ந்த இனம் என்று பெருமை பேசிக் கொள்ள தமிழரால் முடியுமா என்ற சந்தேகத்தை என்னுள் ஏற்படுத்தி விட்டது.

உண்மையை வெளிக்கொணர எப்போதும் முன்நிற்கும் ஒரு பேப்பர் ருக்கு வாழ்த்துக்கள்.

— சிவகரன்

## கோடி புண்ணியம்

ஐயா உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும். குறட்டை விடும் துணைகளுக்குப் பக்கத்திலை தூங்கும் ஆக்களுக்கு காதிலை செருகிக் கொள்ள காதடைப்பான் வந்திருக்குது எண்ட செய்தியைப் வாசிச்ச போது எனக்குச் சாப விமோசனம் கிடைச்ச மாதிரியிருந்தது.

— குகன்

## பித்தலாட்டமா?

மற்றுமொரு மனித உரிமை செயற்பாட்டாளரின் மூச்சை சிறிலங்கா அரசு நிறுத்தி விட்டது. மனித உரிமைகளுக்காகவும் அல்லல் படும் தமிழ் மக்களுக்காகவும் தொடர்ந்து செயற்பட்டும் குரல் கொடுத்தும் வந்த கருணாரட்ணம் அடிகளாரின் மரணச் செய்தி பெருங் கவலையை ஏற்படுத்தி விட்டது.

ஆனால் இந்த அநியாயப்படுகொலை குறித்து சர்வதேசம் கண்ணை மூடிக் கொண்டே இருக்கிறது.

மனித உரிமைகள் குறித்தும் பயங்கரவாதம் குறித்தும் இவர்கள் பேசுவதும் எழுதுவதும் வெறும் பித்தலாட்டாம் தானா

— சங்கரன்

## பாட புத்தகமா?

வர வர ஒரு பேப்பர் ஆய்வுக் கட்டுரைகளை சமர்பிக்கிற இடமாகப் போய் விட்டது. அவர்தம் மதங்களும் என்று ஒரு வரலாற்றுக் கட்டுரை, வரலாற்றுத் திரிபுடன் அக்பர் என்று இன்னுமொரு வரலாற்றுக் கட்டுரை அணிகள் அறிவோம் என்று ஒரு இலக்கிய வகுப்பு, புரோட்டன்கள் இலத்திரன்கள் பற்றி ஒரு இரசாயன வகுப்பு அப்பப்பா தலையே வெடிக்கிறது.

தயவு செய்து நிலாக்சா வாசிப்பதற்கு எதையாவது பிரசுரியுங்கள். இல்லாவிட்டால் ஒரு பேப்பர் ஐ நிற்பாட்டி விடுங்கள்.

— ஹரி

## காணவில்லை

உங்கடை கவிதைப் பகுதியிலை ரசிச்சு வாசிக்கக் கூடிய கவிதைகள். குறைவு.
அந்த வகையிலை நல்ல கவிதைகளைத் தாற த.சு. மணியம் போன்ற கவிஞர்களையும் காணவில்லையே

— சாந்தி

## லாசப்பலில் லைலா

எல்லாருக்கும் வணக்கம்.

பிரான்சிலையும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலையும் நாட்டுப் பற்றாளர் நினைவுநாள் நடந்தது. பிரான்சிலை நடந்த நிகழ்வுகளை எங்கடை நெடுமாறன் ஐயா இந்தியாவிலை இருந்து வந்து கலந்து கொண்டிருந்தார். அவரின்ரை வயதையும் அவரின்ரை உடல்நலத்தையும் பொருட்படுத்தாமல் அவர் இந்தியாவிலை ஊர்ஊராய் மட்டுமில்லை நாடு நாடாயும் ஓடித்திரிஞ்சு தன்ரை இனத்துக்காகவும் தமிழ் ஈழத்துக்காகவும் செய்யிற சேவையளைப் பாத்தால் உண்மையிலை மகிழ்ச்சியிலை என்ன சொல்லுறதெண்டே தெரியேல்லை.

தொடர்ச்சியாய் சில இந்திய அரசியல்வாதியளாலையும் அதிகாரியளாலையும் ஈழத்தமிழர்கள் நம்பவைச்சு குனிய வைச்சு முதிகிலை குத்தின காயங்கள் எல்லாம் நெடுமாறன் ஐயா போல சில தமிழ் உணர்வாளர்கள் தொடந்தும் ஈழத் தமிழருக்கு காட்டுற ஆதரவும் அன்பும்தான் அந்தக் காயங்களுக்கு போடுற மருந்து மாதிரி. அதே நேரம் தாய் தமிழகத்திலை இருந்து தொடந்தும் ஈழத்தமிழனுக்காக குரல் கொடுத்து போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிற எல்லா தமிழ் உணர்வாளர்களுக்கு என்றும் நாங்கள் நன்றிக் கடமைப்பட்டிருக்கிறம்.

சரி அடுத்ததாய் எங்கடை சில பேருக்கு எங்கை என்ன செய்யிறதெண்டே தெரியாது இப்பிடித்தான் போன கிழமை பிரான்சிலை அகதிகளுக்கான மீள்பரிசீலனை செய்யிற இடத்திலை (கொமிசன்) அகதிகளுக்காக அனுமதி கேட்டிருந்த சில எங்கடையாக்களை விசாரிக்க கூப்பிட்டிருந்வங்கள்.

அங்கை போயிருந்த இரண்டு சோறுகளுக்கிடையிலை(தமிழர்) ஏற்கனவே ஏதோ சண்டையாம். அங்கை கண்ட இடத்திலை அடிபடத் தொடங்க அங்கை நிண்ட பாதுகாப்பு ஊழியர்கள் அவையளை வெளியேத்தினது மட்டுமில்லை அவையளின்ரை அகதி அனுமதி பற்றி விசாரிக்காமலேயே அவையின்ரை அனுமதியையும் தள்ளுபடி செய்திட்டாங்களாம்.

எனக்கென்னவோ அவையளை பிடிச்சு கட்டுநாயக்காவுக்கு கட்டி அனுப்பியிருந்தால் இன்னமும் நல்லாயிருந்திருக்கும் எண்டு நினைக்கிறன்.

சரி அடுத்த பேப்பரிலை சந்திக்கிறன் நன்றி.

- லைலா

## எழுச்சி மேதினம்

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆதரவிலான எழுச்சி மேதினம்

காலம் : 01- 05- 2008 காலை 9 மணி முதல்

இடம் : Republique ( M° - 5,3,8)





இனிய தமிழ்-சிங்கள புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்

Madras Cochin Colombo

KUWAIT AIRWAYS £260 + taxes

KUWAIT AIRWAYS £270 + taxes

SriLankan £340 + taxes

Holiday Airல் விமானச்சீட்டு வாங்கும் உங்களுக்கு Fastcash மூலம் இலங்கைக்கும், உலகநாடுகளுக்கும் இலவசப்பணப்பரிமாற்றம்!

*Terms and Conditions Apply

MCG Mike Cooke Group | IATA

020 8882 2626

www.holidayair.com

125-127 Bramley Road, Oakwood, London, N14 4UT

ஒரு பேப்பர்
ORU PAPER

FRIDAY, APRIL 25, 2008, ISSUE 92

## பயங்கரவாதிகளாக்கப்படும் தமிழர்கள்

லண்டன் மேயர் திரு. கென் லிவிங்ஸ்ரன் அவர்கள் கடந்த வாரம் பிரித்தானிய தமிழர் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கூட்டமொன்றில் கலந்து கொண்டார். இச்சம்பவத்தை மேற்கோள் காட்டி அவர் பயங்கரவாத அமைப்பு ஒன்றின் முன்னணி அமைப்புடன் தொடர்புகளைக் கொண்டுள்ளார் என லண்டனிலிருந்து வெளிவரும் வலதுசாரி நிலைப்பாடு கொண்ட Evening Standard என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய தமிழர் அமைப்பு என்பது அங்குள்ள தமிழர் அமைப்புகளின் கூட்டமைப்பு. பல்வேறு துறைகளிலும் முன்னணி வகிக்கும் தமிழர்களைக் கொண்டு, சட்டவரம்பிற்குள், சனநாயக வழியில் செயற்பட்டுவரும் இவ்வமைப்பினர், ஏற்கனவே பிரித்தானிய பிரதமர் உட்பட பல முக்கிய அரசியல் பிரமுகர்களை சந்தித்து பேசியிருக்கிறார்கள். இந்த உண்மைகள் எதனையும் கருத்தில் கொள்ளாமல், அந்த அமைப்பை தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் முன்னணி அமைப்பு என இச்செய்தியில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது

இச்செய்திக் குறிப்பினை எழுதிய அண்ட்ரு கிலிகன் என்ற பத்திரிகையாளர் தனது குற்றச்சாட்டுகளுக்கு சாட்சியாக லண்டனிலுள்ள சிறிலங்கா தூதுவர் திருமதி. செனுகா செனவிரத்னவை மேற்கோள் காட்டியுள்ளார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக செயற்படும் விரல் விட்டு எண்ணக்கூடிய சிலரைத் தவிர மற்றைய அனைத்து தமிழர்களையும், அமைப்புகளையும் விடுதலைப்புலிகளாகவே பார்க்கப் பழகிவிட்ட சிறிலங்கா அரசு ஒரு தமிழர் அமைப்பின் மீது இவ்விதம் குற்றம் சுமத்துவது வழமையான ஒரு விடயமே. ஆனால் சிறிலங்கா தூதுவரின் கருத்துக்களை மறுவிசாரணை எதுவுமில்லாமல் ஒரு ஊடகவியலாளர் ஏற்றுக்கொண்டு, ஒரு சமூகத்தின் மீது அவதூறு மேற்கொள்வது பலத்த கண்டனத்துக்குரியது.

லண்டன் மேயர் தேர்தலில் திரு. கென் லிவிங்ஸ்ரன் அவர்களை தோற்கடிக்கச் செய்யும் நோக்கில் இச்செய்தியை அண்ட்ரு கிலிகன் எழுதியிருப்பதனை, லண்டன் மேயர் தேர்தல் தொடர்பாக அவரது முன்னைய கட்டுரைகளிலிருந்து விளங்கிக் கொள்ள முடிகிறது. அதுபோல் பிபிசி நிறுவனத்தில் பணிபுரிந்து தவறான செய்தியை வெளியிட்டமைக்காக பதவி நீக்கம் செய்யப்பட்ட அவர் ஊடக நேர்மையுடன் செயற்படுவார் என எதிர்பார்க்க முடியாது. இருப்பினும் சில சர்வதேச ஊடகங்கள், சமூக நீதியை கருத்தில் கொள்ளாமல், ஒரு குறிப்பிட்ட தரப்பினரின் பிரசாரத்துக்கு துணைபோவது, பல்லின சமூகங்கள் வாழும் நாடுகளில் இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தை குலைக்கும் முயற்சியாகவும், இனவெறியின் வெளிப்பாடாகவும் கருத வேண்டியுள்ளது.

## ஒரு பேப்பர்

*வணக்கம்!*

*இந்த இதழ் ஒரு வாரம் தாமதமாக ஏப்பிரல் மாதத்தின் நான்காவது வெள்ளியன்று வருகிறது. லண்டனில் எங்கள் வழமையான பதிப்பகத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக கடந்தவாரம் பேப்பரை வெளியிட முடியவில்லை அதற்காக முதலில் மன்னிப்புக் கோருகிறோம்.*

*அண்மையில் ரொறொன்ரோவுக்கு வந்திருந்த அணுவிஞ்ஞானியும் இந்தியாவின் முன்னாள் சனாதிபதியுமான அப்துல் கலாம் **ஒரு பேப்பர்** ரும் கையுமாக நின்றதாக கண்டவர்கள் சொன்னார்கள். உண்மைதான் அந்த பேப்பர் **ஒரு பேப்பர்** தான் என்றும் சொன்னார்கள். தீவிரமாய் விசாரித்ததில் விசயம் உண்மைதான் எனத் தெரியவந்துள்ளது. அதனாலை ஆனானப்பட்ட சனாதிபதியே படிக்கிற பேப்பரை ஓசியாய் குடுக்கிறதோ எண்டு மல்லாந்து படுத்துக் கொண்டு யோசிக்கிறம்.*

*எமது சமூகத்தில் நடைபெறும் சில தில்லு முல்லுகளை அடிக்கடி பிரசுரித்து வருகிறோம். இருந்தாலும் விடயம் உண்மையா, தனிப்பட்ட கோபதாபங்களை **ஒரு பேப்பர்** ரில் எழுதுகிறார்களோ என ஆராய்ந்த பின்னரே பிரசுரத்துக்கு எடுத்துக் கொள்கிறோம். நாங்கள் வெளியிடும் தகவல்களில் தவறிருப்பின் சம்பந்தப்பட்டவர்கள் விளக்கமளிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம். ஆனால் அவர்களோ தமது பக்க நியாயத்தை தெரிவிப்பதனை தவிர்த்து, நாங்கள் இல்லாததையும் பொல்லாததையும் எழுதுவதாக முறைப்பாடு செய்கிறார்கள். சிலரோ தாங்கள் கோர்ட்டுக் போகப் போகிறோம் என அறிக்கை விடாத குறையாக கூறித் திரிகிறார்கள். நாங்கள் தொடர்ந்து இவர்களை அம்பலப்படுத்துவோம் என்பதை மட்டும் உங்களுக்கு கூறி வைக்கிறோம்.*

*ஐரோப்பாவிலும், கனடாவிலும் எமது மக்கள் மத்தியில் புதிது புதிதாக மூடநம்பிக்கைகள் பரவி வருகிறது. அவை மக்களிடையே ஏற்படுத்தும் பாதகங்கள் பற்றிய விபரங்களை எழுதுமாறு உங்களை வேண்டுகிறோம். ஒரு சமூகப்பத்திரிகை என்ற வகையில், சமூக அநீதிகளுக்கு குரல் கொடுக்க வேண்டிய கடமை **ஒரு பேப்பர்** ருக்கு உள்ளது.*

*எமக்கு ஆக்கங்களை அனுப்புவோர் எமது மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்ப முடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். படங்களை wordபோன்ற fileகளில் இணைக்காமல் தனி file ஆக அனுப்பி வையுங்கள். அட்டைப் படத்தில் பிரசுரிக்கக் கூடிய படங்களையும் அனுப்பி வைக்கலாம்.*

*வர்த்தகர்கள், குறிப்பாக தமிழ் வர்த்தகர்கள் தரும் ஆதரவிலும், **ஒரு பேப்பர்** குழுவின் சளைக்காத உழைப்பிலுமே **ஒரு பேப்பர்** தடையின்றி வெளிவருகிறது. இதில் நீங்கள் காட்டும் அன்பும், அபிமானமும் குறைத்து மதிப்பிட முடியாது. என்ன அந்தர் கணக்கில் பனிக்கட்டியை தலையில் வைக்கிறியள் என்ன விசயம் எண்டு நீங்கள் நினைக்கலாம். இல்லை உழைப்பாளர் தினம் வருகிறது உங்களையும் நினைக்கிறோம்.*

*அடுத்த ஒரு பேப்பர் மே 9ல் வெளியிடுவம்.*

***ஒரு பேப்பர்** காரன்கள்+காரிகள்*

EDITORIAL

# Without Guilt…

*Dear World,*

You may not be aware of who we really are and what we really do. But then we like it that way and try our best to keep it that way. We believe that your ignorance is our bliss. We think ignorance is an important factor in decision making for both of us, you the World and us, the Government of Sri Lanka (GOSL). Hence we keep you where you are and you help us keep our citizens where they are- in perpetual nirvana soaked in war, poverty, ill health, poor governance and human rights abuses.

During the early hours of the 23rd of March 2008 thousands of young men and women of our proud nation tried to kill each other in an area of outstanding natural beauty. In an area of blue lagoons and lush palm tree lined white sandy beaches. Here more than a thousand of these young Sri Lankan citizens got killed or injured. We did not inform you, the World about this blood soaked day. In fact we claimed that this was a day of enormous victory for our Sinhalese people without an iota of guilt. At the same time your free and well funded media institutions did not try to find out about what happened to these young citizens in the northern killing fields either. They were more interested in finding out how our share market here in Colombo performing. Guilt free news reporting, of course!

"Without Guilt" is the ethos of the Government of Sri Lankan. We recommend "without Guilt" for every thing, human rights abuses, war crimes included. For example "Garments without Guilt" for our apparel industry even though our entire economy, polity and governance are soaked in human rights abuses.

We have tried our best for almost forty years to create conditions so our children could take part in our "killing without guilt" campaign even though we recommend the soundbite "Children have no business in our business" as an ethos for our export industry.

> We make our young men and women kill each other in cold blood, especially on our cultural days like our New Years Day.

We source our petroleum from the enlightened and super democratic Iran. We buy our artillery shells from recently "elected" Mugabe's Zimbabwe. We buy small arms from the "humane" Generals of Burma. We are sending our "experts in abductions & disappearances of civilians" for further training to Iran's Quds Force (Jerusalem Brigade) which is famous for abducting fifteen young sailors from HMS Cornwall, a British naval ship on March 23, 2007. We portray these activities of us as ethical sourcing and sustainable development practices to you, the World. We say these result in the empowerment of our people. We are sure you agree.

We bought ten thousand high explosive rockets last month from a democratic European Union member. This week, in one day, we used more than thousand of these to blast our own citizens and their property, fauna and flora. We simply scorched them and their earth. We would like you to view this as sustainable eco-friendly development activity. We sincerely hope these sustainable eco-friendly solutions have made the 'Made in Sri Lanka' label synonymous with quality, reliability and social and environmental accountability.

We make our young men and women kill each other in cold blood, especially on our cultural days like our New Years Day. If Indians know how to mix cricket and popular entertainment by creating Indian Premier League we know how to mix war and traditional celebrations. This is what we call as "celebrations without guilt" and we recommend this for you, the World.

We send our women to Middle East and other places to work as modern slaves. They send their tear soaked Dollars to us and we pay our arms dealers. This is what we call "slavery without guilt".

We allow our Navy to indiscriminately kill our poor fishing folk up North so the seas off our paradise island will not be over fished. This is what we call looking after our seas without guilt. We want millions of your people to come and enjoy the fruits of our Navy's labour without guilt.

We have been keeping thousands of young Tamil women and men in our prisons for months without formal charges, because they look suspicious. At the same time being in prison means free food and shelter for these young citizens. You are all making a big fuss about the current food crisis in the developing world. Some of you even call this a silent Tsunami. Thus you all will agree that by imprisoning these suspicious looking people they do not suffer the silent Tsunami. This is what we call as "imprisoning without guilt".

Since we got rid of the European Colonialists our mission and the seven or so pillars of our Government have been the making of Sri Lanka:

1. The number one place in the world for disappearances of innocents

2. The most dangerous place to work as a journalist

3. Provider of absolute impunity and unaccountability for our armed forces

4. The number one place for non-governmental organisation (NGO) aid worker killing

5. The most efficient place for abducting or killing of human right workers

6. Prompt delivery of poverty and war to millions

7. Place where consent and election results are manufactured by violence and intimidation

We hope the modern nation state we have built has enabled us to position ourselves as the ultimate democracy in Asia. We hope you will continue to give us the necessary diplomatic, financial, military, and technical support without guilt; especially tax concessions by the European Union under the GSP + scheme.

Thank you,

*Yours guilt free*

**GOSL**

# ஈரானுடனான புதிய நட்புறவு இலங்கைக்குத் தெம்பு தருமா?

உதயன்

## ஆசிரியர் தலையங்கம்

அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதி நிஜாத்தை வரவேற்பதற்காக இலங்கை அரசு தடல்புடலான ஏற்பாடுகளைச் செய்துவரும் இச்சமயத்தில் ஈரானிய அதிபரின் இந்த விஜயம் அமெரிக்காவிற்குப் பெரும் அதிருப்தியையும் எரிச்சலையும் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஈரான் அதிபரை இலங்கைக்கு அழைத்துப் பெரும் வரவேற்பு அளித்து, அந்நாட்டுடனான தனது உறவை வலுப்படுத்திக் கொள்வதை வெளிப்படுத்திக் கொள்ள இலங்கை முயல்கின்றது.

ஆனால் இந்த வரவேற்பு ஏற்பாடு அமெரிக்காவையும் மேற்குலகையும் கடும் விசனத்துக்குள்ளும் சீற்றத்துக்குள்ளும் ஆழ்த்தியிருப்பதாகத் தகவல்கள் கசிந்திருக்கின்றன.

ஈரான் தொடர்பில் இலங்கை அரசு கடைப்பிடித்து வரும் அதி தாராள நட்புறவுக் கொள்கைப்போக்குச் சம்பந்தமான தனது அதிருப்தியைத் தனது நாட்டில் உள்ள இலங்கைத் தூதுவரிடம் அமெரிக்கா உத்தியோகபூர்வமாக வெளியிடும் என்றும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே சில தினங்களுக்கு முன்னர் இரண்டுநாள் பயணமாக இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்காவின் தெற்கு மத்திய ஆசிய விவகாரங்களுக்கான சிரேஷ்ட பிரதி உதவிச் செயலாளர் டொனால்ட் காம்ப், இவ்விவகாரம் குறித்தும் இலங்கை அரச உயர் மட்டத்துடன் பேசி, அமெரிக்காவின் அதிருப்தியை நேரடியாக வெளிப்படுத்தியிருந்தார் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

'இனம் இனத்தைச் சேரும்' என்பார்கள். இப்போது ஈரானுடன் கொஞ்சிக் குலாவி உறவை விருத்தி செய்யும் மஹ்ந்த அரசின் போக்கு இந்தப் பழமொழியைத்தான் நினைவுபடுத்துகின்றது.

தம்முடைய தவறான செயற்போக்கினால் சர்வதேசக் கண்டனங்களையும், அதிருப்திகளையும் ஏன் சர்வதேசத் தடைகள், கட்டுப்பாடுகள் என்பவற்றையும் கூட எதிர் கொள்ள வேண்டிய ஒரே இக்கட்டில் சிக்கியிருக்கும் தோழமை சக்திகளாக ஈரான் அரசும் இலங்கை அரசும் உருவெடுத்துள்ளன. இப்படி சர்வதேச சமூகத்தால் குறிப்பாக அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் அதிருப்திக்கு உள்ளாகும் ஒரே அணியில் இருப்பதால் அவை தமக்குள் உறவை இறுக்கிக்கொள்ள முயல்கின்றன போலும்.

ஏற்கனவே இலங்கைக்கான ஆயுத தளபாட விநியோகங்களை அமெரிக்கா மட்டுப்படுத்தி அறிவித்து விட்டது. இலங்கைக்கான பொருளாதார உதவிகளையும் அது கணிசமாகக் குறைத்துள்ளது. அதேவேளை ஈரானுடனான இலங்கையின் புத்துறவைக் காரணம் காட்டி இலங்கைக்கு ஆயுதத் தளபாட வசதிகளையும் உதவிகளையும் வழங்குவதை இஸ்ரேல் இடைநிறுத்தி விட்டது. இதன் காரணமாக, இதுவரை புலிகளுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தில் தனக்குக் காலம் காலமாக ஆயுத, தளபாட வசதிகளையும் உதவிகளையும் தொடர்ந்து வழங்கிவந்த இஸ்ரேலின் நல்லுறவை இலங்கை இழக்கப் போகின்றது என்பது தெளிவாகிவிட்டது.

இதேசமயம், இதுவரை காலமும் நாட்டுக்குப் பெரும் அந்நிய செலாவணியையும், ஏற்றுமதி வருமானத்தையும், உள்ளூர் தொழில் வாய்ப்புகளையும் தாராளமாக ஏற்படுத்தித்தந்த ஐரோப்பிய நாடுகளின் ஏற்றுமதிச் சலுகை வசதியை அடுத்துவரும் மாதங்களோடு இலங்கை இழக்கப் போவதும் உறுதியாகிவிட்டது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்க மற்றும் ஐ.நா. சபையின் வர்த்தகத் தடைகள் உட்படப் பல்முனைத் தடைகள் கருக்கொண்டு உருக்கொண்டு வருகையில், அதுபோன்ற தடைகளை இலங்கையும் எதிர்கொள்ளும் சூழல் உருவாகியுள்ளது.

இந்தப் பின்புலத்தில்தான் இலங்கை ஈரான் புதிய நட்புணர்வு மலர்ந்திருக்கின்றது.

ஒருதலைப்பட்சமாக அணு ஆயுதங்களை உற்பத்திசெய்யும் திமிர்ப் போக்கு, இஸ்ரேலை அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் தீவிரம் போன்றவை ஈரானுக்கு எதிரான சர்வதேச நிலைப்பாட்டை உருவாக்கியிருக்கின்றன.

அதேபோல, ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளைப் புறந்தள்ளி, அவர்களின் இருப்பையே அழித்தொழிக்கும் பௌத்த சிங்களப் பேரினவாதச் சிந்தனையோடு, கொடூர மனித உரிமைமீறல்களுக்கு வழிகோலும் இலங்கை அரசுத் தலைமையின் திமிர்ப் போக்குப் போர்த் தீவிரமும் இலங்கைக்கு எதிரான சர்வதேச எரிச்சலுக்கு வழிசெய்துள்ளன.

இவ்வாறு ஈரானிய ஜனாதிபதி மஹ்மூத் அஹ்மதியாவின் அரச நிர்வாகமும், இலங்கை ஜனாதிபதி மஹ்ந்த ராஜபக்ஷவின் அரச நிர்வாகமும் ஒரே மாதிரியாக சர்வதேச எரிச்சலுக்கு உள்ளானாலும் கூட இலங்கையின் நிலைமை மோசமானது.

உலகில் எரிபொருள் உற்பத்தி நாடுகளின் முன்னணி வரிசையில் இருக்கும் நான்காவது நாடு ஈரான். தாராள எரிபொருள், எரிவாயு மூலவளம் புதைந்து கிடக்கும் தேசம். கனியவளமும் தாராளம். அத்தகைய நாடு ஒன்று அமெரிக்கா போன்ற வல்லரசுகளைப் பகைத்துக் கொண்டு, ஐ.நா.போன்ற உலக நாடுகளின் கூட்டமைப்பு விதிக்கும் சர்வதேசத் தடைகளைத் துச்சமாக மதித்துப் புறக்கணித்து, உதாசீனம் செய்தபடி, ஒருதலைப்பட்சமாகத் தான் எடுத்த தீர்மானத்தின் பிரகாரம் தங்கு தடையின்றி அணு ஆயுத உற்பத்தியில் ஈடுபட முடியும்.

ஆனால், தேயிலை, இறப்பர், தைத்த ஆடைகள் மற்றும் பணிப்பெண்கள் சேவை போன்றவற்றை மேற்குலகுக்கு வழங்குவதன் மூலமே அந்நிய செலாவணியைத் திரட்டவேண்டிய இக்கட்டில் சிக்கியிருக்கும் இலங்கையால் இலகுவாக மேற்குலகைப் புறக்கணித்து விடமுடியாது. அப்படிப் புறக்கணித்து உதாசீனம் செய்ய முயலும் மஹ்ந்தர் அரசின் போக்கு இலங்கைக்கு விபரீத விளைவுகளை ஏற்படுத்தக்கூடியது.

ஆனால், இந்த யதார்த்தமும் உண்மையும் புரியாமல் ஈரான் போன்ற சர்ச்சைக்குரிய நாடுகளின் ஆதரவை மட்டும் வைத்துக்கொண்டு எந்தச் சவாலையும் சமாளிக்க முடியும் என்ற துணிச்சலோடு காய்களை நகர்த்துகின்றது மஹ்ந்தரின் அரசுத் தலைமை.

மேற்குலகின் வலுவைக் கவனத்தில் கொள்ளாமல் ஈரான், பாகிஸ்தான், சீனா போன்ற சர்ச்சைக்குரிய சக்திகளின் ஆதரவை நம்பி, அதில் தங்கி, தமது விபரீத முயற்சியை முன்னெடுக்கின்றது இலங்கையின் இந்த அரசு. இது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கும் எத்தனம் என்பது புரியவரும்போது மீள முடியாமல் தவிக்கும் இக்கட்டை அது உணர்ந்துகொள்ளும்.

அதுவரை, இத்தகைய புத்துறவும், புதுநட்பும் இலங்கை அரசுத் தலைமைக்குக் கரும்பாய்த்தான் இனிக்கும். அதன் விளைவுகளை அனுபவிக்கும்போது அது வேம்பாய்க் கசப்பது புரியவரும்.

அறு அறு
என்றெழுகின்ற
அனற்படைக்குள்
அணு வெடித்து
எழுகின்ற சக்தியாக
மறுதீர்க்கும் பலமாக
வீரம் தூக்கி
மத்யானை போல்
செல்வோம்
மண்மேல் ஆணை

Editorial: lankadissent.com

# Born with blood and steel to die with the ballot



This is the period the Provincial Council elections scheduled for the East takes politicians and political parties on an 'exposure trip'.' This would show who are principled and who are not. The government by now is left with no nudity to cover itself. It has already decided to align with the para military group of Pillayan. Gone are the days when the high ups in government denied even knowing "Pillayan". Gone are the days they denied any connivance with Pillayan, when accused by the international community and HR organizations for working with this para military group. What more can be said about this government ?

Yet there is reason to discuss the role of the JVP at this PC elections. It was the JVP that moulded the Sinhala life of this government leading to this bloody conflict. And it is this Sinhalisation of the South that has taken them to the PC elections in the East and leaves them with a party crisis.

> Somawansa the veteran leader of the JVP went on record to say the Pillayan group has to be disarmed to hold free and fair elections

The issue of the 13th Amendment to the Constitution surfaced a few weeks before the Eastern PC elections were scheduled. The JVP with all its bosses on board went against the full implementation of the 13th Amendment. They not only forgot that it is law of the land, they also forgot that they are elected Councillors in the PCs for over a decade. This when reminded, the JVP said they contested to prove their democratic presence and not to strengthen the PC. The reason for contesting not withstanding, they did not understand that their very entry into PCs after opposing them through a savage insurgency, added a wider acceptance to PCs. They are perhaps too immature to understand that.

The Eastern PC elections has now brought out something more than their immaturity. Somawansa the veteran leader of the JVP went on record to say the Pillayan group has to be disarmed to hold free and fair elections. His statement was given political credence by the JVP TU boss, Lalkantha. It seemed the party had taken the decision that Pillayan should be disarmed for them to contest the elections. That in fact is how a political party behaves. It has a responsibility that other fronts like the "Patriotic National Movement" (PNM) does not have. The PNM in fact was floated by the JVP and its Propaganda Secretary Weerawansa was placed to lead it. And Weerawansa addressing a media briefing of this PNM says Pillayan should not be disarmed. He accepts this para military group works with the security forces and accused those who call for its disarming as those who want to leave Pillayan prey to the LTTE.

This leaves those who speak on behalf of the party, calling for disarming of Pillayan and those who lead patriotic movements wanting Pillayan to live with arms. A fundamental contradiction in policy and principles within the one and the same JVP and in its politburo.

Such are the contradictions that comes out more glaringly when the JVP nominates candidates for the Eastern PC elections. They would be opposing the full implementation of the 13th Amendment while accepting it to contest PCs. All these contradictions and divisions perhaps would make the JVP understand that it is far more difficult to be in politics democratically than wielding guns and bombs to run wild. That the discipline forced on the party with arms in hand to keep it together, is not discipline that keeps a party together in democracy. In democracy that discipline would break up the party and that seems to be the evolving fate of the JVP, as it happened then with older 'left' parties.

ஒரு பேப்பர் ORU PAPER

# ஒரு பேப்பர்
ORU PAPER

**எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!**

ஆசிரியர் குழு:
லண்டன்
சேயோன் - அ.இரவி
மணி - அகிலன்

கனடா
தயா - பொன்.விவேகானந்தன்

பாரிஸ்
சிறி

ஜேர்மனி
சபேசன் - சாந்தி

சுவிஸ்
ரேமன் - சந்துரு

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
பாலா

விளம்பரம்
கௌரி - சிந்து

அச்சு
குமார் (ஜெர்மனி)

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-ராஜு-கரன்



உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
பாரீஸ் 01 7289 3165
சுவிஸ் 043 500 0277

தொலைநகல் (Fax)
020 7043 4312

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3LJ
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com


*'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month. The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.*

# அடியுங்கோ அண்ணா

துசாரா பீரிஸ் என்ற சிங்களத் திரைப்பட இயக்குனர், எங்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் பெயரில் ஒரு சிங்களத் திரைப்படம் எடுத்து அதனைப் பிரதி செய்வதற்காக தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறார். ஈழத்தமிழர் போராட்டத்தை முற்று முழுதாக கொச்சைப்படுத்துகிற திரைப் படம் அது. தமிழ் நாட்டிலுள்ள தமிழ் இன உணர் வாளர்கள் சும்மா விடுவார்களா? பீரிசுக்கு 'முறை யாக'க் கொடுத்து அனுப்பி இருக்கிறார்கள். (அடிகொடுத்த, ஆத்திரப்பட்ட, ஆவேசப்பட்ட அனைவருக்கும் உணர்வுள்ள ஈழத்தமிழர்கள் சார்பாக என் மகிழ்வும் நன்றியும்.)

இந்தச் செய்தி ஏற்கனவே எல்லோரும் அறிந்தது தான். நான் எழுத வருவது இது தொடர்பாக வேறொன்று. சென்ற வார குமுதம் வார இதழில் 'ஞாநி' என்ற பத்திரிகையாளர் தனது 'ஓ பக்கங்கள்' என்ற கட்டுரையில் சுப. வீரபாண்டியன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கி றார். அக்கடிதம் மேற்படி சம்பவம் குறித்ததுதான். 'புத்திஜீவி'களின் வழமையான வாய்ப்பாடுகளின் படி கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் என்று ஒப்பாரி வைத்திருக்கிறார்.

செயல்பாடுகளில்லாத புத்திஜீவிகள் எப்பொழு துமே மக்கள் உணர்வுகளிற்கும், மனித குல விடுதலைக்கும் விரோதிகளாகவே இருப்பார்கள். இதை அறிந்து செயற்படுபவரும் உளர். அறி யாமல் செய்வோரும் உளர். ஒடுக்குமுறை அர சின் புலனாய்வுப் பிரிவுகளும் இத்தகையோரைத் தான் குறி வைத்து தம் வசம் இழுக்கின்றன. காசுக்காகவும், பதவிக்காகவும், சுகபோகங்களுக் காகவும், அறிந்தும், அறியாதும், உளவுப்பிரிவு கள் பின்னே இவர்கள் படையெடுக்கின்றனர்.

போகட்டும், அவர்களை விடு. அந்த அறிவு ஜீவிகள் பற்றி நமக்கென்ன அக்கறை? மக்களை நேசித்தோரும், மக்கள் உணர்வுகளை மதித் தோரும் மண் மீது பற்று கொண்டோரும் இருக்கி றார்கள், இயங்குகிறார்கள், வாழ்கிறார்கள், வெல் கிறார்கள், அது போதும் எமக்கு. அதற்கப்பால் வேறு சிந்தனை எதற்கு?

அப்படிச் சொல்லக் கூடாது. அனைத்து வழி களிலும் நாம் பலமாகவும் வளமாகவும் இருக்க வேண்டும். பதில் சொல்லக் கூடிய திறனாகவும் இருக்க வேண்டும். இந்த 'ஞாநி' போன்ற பிராமணி யத் தரவளிகளுக்கு 'சுபவீ' மீது ஏன் கோபம் வருகிறது? தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்துகிற படைப்பொன்றை தமிழர் நிலத்திலேயே பிரதி செய்ய ஒரு மனிதனே யல்லாத மாற்றான் வருகிறபோது, ஞாநி, யமுனா ராஜேந்திரன், ரதன் போன்றோர் என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள்? கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் என்கிற பெயரில் வாயைப் பொத்திக் கொண்டு இருக்க வேண்டுமென்றா எதிர்பார்க்கிறார்கள்?

## சற்று மாறுதலுக்காக

எழுதுவது: **சேயோன்**

'ஞாநி'க்குப் பிரச்சினை என்னவென்றால் 'சுபவீ' தமிழ் உணர்வாளராக இருப்பது. அவர்க ளுடைய பிராமணியத்துவத்துக்கு தமிழ் உணர்வு சிக்கலானது. தங்களுடைய பிராமணியத்துக்கு அவர்கள் மார்க்சீய முலாம் பூசி தம்மை வெளிப் படுத்துவார்கள். இவ்வாறு மார்க்சீய முலாம் பூசி வெளிப்படுபவர்களாக சிலரைக் காட்ட லாம். ஞாநி, இந்து ராம் போன்றவர்கள் இவர்கள். இந்து வெறியர்களாக பிராமணி யத்தை வெளிப்படுத்துபவர்களாக சோ, சுப்பிரமணியசாமி, ஜெயலலிதா போன்றோரைக் குறிப்பிடலாம்.

எப்படியோ இவர்கள் ஒரு நேர்கோட்டில் சந்திப்பார்கள். இவர்களுக்குப் பொது எதிர்ப்பாக அல்லது பொது எதிரியாக ஒன்று இருக்கும். அது தமிழ்த்தேசியம். தமிழ் இன உணர்வு, திராவிட எழுச்சி இந்த எதிர்ப்பை அவர்கள் வெளிப்படுத்துவதற்காகப் பயன் படுத்தும் சொற்கள்தான் கருத்துரிமை, கருத்துச் சுதந்திரம் ஜனநாயகம் நடுநிலைமை தனிநபர் சுதந்திரம் இன்னும் இப்படி அற்புதமான சொல்லாடல்கள் இருக்கின்றன.

இருக்கட்டும், என்னுடைய அடுத்த கேள்வி என்னவென்றால் சிங்கள அரசு தமிழர் தேசங் களில் அட்டூழியம் புரிகின்றனவே. இவர்கள் அவை பற்றி ஒன்றும் பறையக் காணோமே! செஞ் சோலை வளாகத்தில் பாய்ந்த குண்டில் பிஞ்சுக் குழந்தைகள் அறுபதின்மர் அழிந்தார்களே! 'ஞாநி' அப்போது எங்கு போனார்? அவாளுடைய ஆத்துக்குப்போய் அறுசுவை உண்டி புசித்துக் கொண்டிருந்தாரோ? அதுபற்றி ஏதும் அவருடைய வார்த்தையிலிருந்து எழவில்லையே! துசாரா விற்கு விழுந்த அடி கண்டு பதறுகிறாரே! அந்த அடி அவருக்கும் எங்கேயும் பட்டுவிட்டதோ?

மார்க்சீயம் ஒன்று சொல்லும். அது பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம். ஓம் 'சர்வாதிகாரம்' என்று தான் சொல்கிறது. பாட்டாளிவர்க்க ஜனநாயம் என்று அது சொல்லவில்லை. கருத்துச் சுதந்திரம், தனிமனித சுதந்திரம் என்று எதுவும் பேசவில்லை. மார்க்சீயத்திற்குத் தெளிவாகத் தெரியும். ஜன நாயகச் சுதந்திரம் என்ற பெயரில் மானுட விரோதிகள் வருவார்கள், நஞ்சினை நெஞ்சில் வைத்து நாவினில் அன்பு வைத்து வருவார்கள். பெரியார் கூட இந்த 'ஜனநாயகத்தை'யும் இந்த 'சுதந்திரத்தை'யும் மறுத்தவராகவே காணப் படுகிறார்.

'ஞாநி' ஒன்று சொல்கிறார். துசாரா பீரிஸ் தன்னு டைய கருத்தைக் கூறுவதற்காக ஒரு திரைப்படம் எடுத்திருக்கிறார். அவருடைய கருத்தை மறுத்து நீங்களும் ஒரு திரைப்படம் எடுக்கலாம்தானே? இந்தக் கருத்தே ஒரு மகா அபத்தம். கருத்துச் சுதந்திரம் என்கிற பெயரில் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தி வருவதை நாம் அனுமதிக்க முடியாது. உணர்வுள்ள எவரும் அனுமதிக்க மாட்டார்.

ஈழத்தில் விடுதலைப்போர் நிகழ்கிறது. அதனை அமெரிக்கா, இந்தியா, சீனா என்ற மிகப்பெரிய வல்லரசு நாடுகள் எதிர்க்கின்றன. இவை சிங்கள அரசுக்குப் பொருளாதார, ஆயுத உதவிகள் வழங்குகின்றன. சிங்கள அரசு துசாரா பீரிசுக்கு நிதி வழங்கி 'பிரபாகரன்' திரைப்படம் எடுக்க உதவி செய்கிறது. ஈழத்தின் சுதந்திரப் போரை கொச்சைப்படுத்தி இன்னும் பல திரைப்படங்கள் வரத்தான் போகின்றன. அவ்வாறு வருகையில் தமிழ் இன உணர்வாளர்கள் என்ன செய்ய வேண் டும் என்று ஞாநி எதிர்பார்க்கிறார்?

ஈழப்போரைக் கைவிட்டுவிட்டு, அதற்கான ஆதரவுப் பிரச்சாரத்தை விட்டுவிட்டு பதில் சொல் வதற்காக திரைப்படங்களைத் தயாரித்துக் கொண்டு இருக்க வேண்டுமென்று எதிர்பார்க் கிறாரா? இப்படி எவ்வளவு காலத்துக்கு எவ்வளவு திரைப்படங்களைத் தயாரிக்கலாம்? துசாரா என்ற துட்டன் வருவான் பிறகு பிசாரா என்ற பித்தன் வருவான் எல்லோருக்கும் பதில் சொல்ல படங்கள் தயாரிப்பதா நம்வேலை?

சுப.வீ. அண்ணா! மற்றும் உங்களைச் சுற்றி உள்ள யாவருக்கும் ஈழத்தமிழர் நாம் சொல்கி றோம். அடியுங்கோண்ணா. அதுக்கு மிஞ்சி ஏதும் என்றால் நாங்களும் வருவம். அடியுங்கோண்ணா. இப்படி ஆரும் ஏதும் கதைச்சால் அவையளுக்கும் குடுங்கோண்ணா.

# நிலையாமை

## வள்ளுவர் காட்டும் வழி

எழுதுவது: **இராம. கே. நாதன்**

வாழ்விலாதும் அதற்கு ஆதாரமாக இருப்ப வையான பொருட்களினதும் நிலையாத தன்மை யைக் கூறுவதே நிலையாமை எனும் இவ்வத்தி யாயம் ஆகும். நிலையில்லாதனவற்றை நிலையா னவை என நம்பும் குணம் வெறுக்கப்படத்தக்கது. வாழ்வின் தன்மையை நன்கு அறிந்து கொள்ளாத மூடர்களே மனிதர்களையும் பொருட்களையும் அவற்றின் வெளித்தோற்றத்திலிருந்து அல்லது அவற்றின் தேவைகளிலிருந்து அவை நிலையா னவை என நம்புவர். அப்படியான நோக்கம் ஒரு குறுகிய பார்வை என கொள்ளுதல் அவசியம். அப்படி நிலையில்லாதவற்றை நிலையென நம்பும் மூடர்களுடைய அறியாமை வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியதொன்றாகும். (குறள் 331).

நிலையற்றவைகளில் முதன்மையானது ஒரு வனது செல்வம் ஆகும். கிராமங்களில் நடை பெறும் கூத்து போன்ற களியாட்டங்களுக்கு சிறிது சிறிதாகக் கூட்டம் சேருவது போன்று செல்வம் ஒருவனுக்குச் சிறிது சிறிதாகவே சேரும். ஆனால் அது போகும் போது கூத்துக் கொட்டகையிலிருந்து கூட்டம் விரைவாகக் கரைவது போன்று கரைந்து விடும். (குறள் 332). (இக் குறளிலிருந்து தமிழ் மண்ணில் இரண்டாயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்பே கூத்து, நாடகம் போன்ற கலைகள் வளர்ந்தி ருந்தன என அறியக்கூடியதாக இருக்கிறது.)

எனவே இவ்வாறு விரைவில் கரைந்துவிடக்கூடிய நிலையில்லாத செல்வத்தை அது தானாகக் கரைந்து போய் விடுவதற்கு முன்பே பயனுள்ள செயல்களுக்காக அவற்றை உபயோகப்படுத் திக்கொள்ளல் அவசியமாகும். (குறள் 333). இக் கருத்தும் இதற்கு முந்தைய கருத்தும் செல்வத்தின் நிலையற்ற தன்மையையும் அதைச் சேமித்து வைத்திருப்பதில் ஒரு பயனும் இல்லை என்பதையும் வலியுறுத்துகின்றது.

மனித வாழ்வில் ஒரு நாள் என்பது திரும்பத் திரும்பத் தோன்றும் ஒரு நிலையான நியதிபோல் தோன்றினாலும் இந்த நாளே ஒருவனது வாழ்நாளை சிறிது சிறிதாக அறுக்கும் வாள் என்பதை உணராது இருக்கின்றனர். ஒவ்வொரு நாளின் வரவும் ஒருவனது வாழ்நாளைச் சிறிது சிறிதாகச் சிதைக்கின்ற ஒரு கருவியே. (குறள் 334).

வாழ்வு நிலையற்றது. உயிர் உடலைவிட்டுப் பிரியுமுன் விரைந்து நற்காரியங்களைச் செய்தல் வேண்டும். உயிர் உடலை விட்டுப் பிரிவதற்கு அறிகுறியாக நாவின் சுழற்சி நின்று விடும். விக்கல் தோன்றும். ஆகவே அந்த நிலை எய்த முன்பதாகவே எப்போது தருணம் கிடைக்குமோ அவ் வேளைகளிலேயே சமூகத்திற்குப் பயனுள்ள நற்பணிகளைச் செய்தல் வேண்டும். பின்பு செய்ய லாம் என பிற்போட்டால் அது காலம் கடந்த செயல் ஆக மாறிவிடும். (குறள் 335)

எவ்வளவு பெரிய தலைவராக இருப்பினும், பெரிய ஞானியாக, பெரிய அறிவாளியாக இருப் பினும், அவர்கள் எப்போது தமது வாழ்வு முடிவ டையும் என அறியாதாவர்களாகவே இருப்பர். ஏனெனில் நேற்று இருந்தவர் இன்று இல்லை யென்னும் நிரந்தரமற்ற நிலையிலேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அத்தகைய நிலையற்ற நிலைப்பாட்டினை உடையதுதான் இந்த உலகம். (குறள் 336 )

இப்படியான நிலையற்ற தன்மையையுடைய மனிதர்கள் தமது உண்மையான நிலையை உணராது பலபல திட்டங்கள் தீட்டுவதும், மனக் கனவுகளைக் கொண்டவர்களுமாக வாழ்கின்ற னர். அவர்களுடைய எண்ணங்கள் நிறைவேறு வதற்கு முன்பதாகவே அவர்களுடைய வாழ்வு முடிவடைந்து விடலாம் என்பதை உணராத வர்களாக இருக்கின்றனர். (குறள் 337)

தான் வாழ்ந்து வெளிவந்த முட்டையின் கோதுதனை உதறித் தள்ளிவிட்டு ஒரு பறவைக் குஞ்சு பறந்து விடுகின்றதோ. அதுபோன்றதே உடலுக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பாகும். உயிருள்ளவரைதான் உடல் பேணப்படுகிறது. உடலைவிட்டு உயிர்பிரிந்தபின் உடல் கோது போன்ற நிலையை அடைந்து விடுகின்றது. அதன்பின் உடல் உதாசீனப் படுத்தப்படுகிறது. எனவே இவ்வுடல் விரைவில் பறந்துவிடப் போகின்ற உயிருக்கு ஒரு தற்காலிகமான கூடென்பதை உணர்தல் வேண்டும். (குறள் 338)

உறக்கமும், விழிப்பும் மாறிமாறி ஒருவருடைய வாழ்க்கையில் நிகழ்வது போன்று, இறப்பும் பிறப் பும் காலச்சக்கரத்தில் மாறிமாறி வருபவையே. இவற்றில் என்றும் மாறுதல் ஏற்படப்போவதில்லை. இறப்பை, உறக்கத்தைப் போலவும், பிறப்பை, விழித்தல் போலவும் இவை உலக இயக்கத்தின் நியதி எனவும் ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். (குறள் 339)

உயிர் என்பது வீடு இல்லாத ஒரு நாடோடி போன் றது. தற்காலிகமாக ஒரு உடலைத் தனது வீடாகக் கொள்கிறது. அந்த வீட்டில் நீண்ட நாட்களாகத் தங்கியிருப்பதில்லை. மிகக்குறுகிய காலத்தில் அந்த வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறது. அதன் பின் அந்த வீடு பாழடைந்து விடுகிறது. உயிர் மாத்திரமே அழியாத தன்மையுடையதாக இருக் கிறது. அனைத்துப் பொருட்கள் யாவையும் அழிந்து விடக்கூடியன. நிரந்தரமற்றவையே. (குறள் 340)

இந்த அத்தியாயத்தில் உடலின், செல்வத்தின், பொருட்களின் நிலையாத தன்மையும், சந்தர்ப்பம் உள்ள போதே நல்ல காரியங்களை காலம் தாழ்த் தாது செய்திடல் அவசியம் என்பதையும், அடுத்த நொடியில்கூட தாம் உயிருடன் இருப்போம் என அறியாதவர்கள், நீண்ட காலத்திட்டங்கள் தீட்டு வதையும், மனக்கோட்டைகள் கட்டுவதையும் அவர்களது வாழ்க்கையின் உண்மைநிலையை உணராத அறியாமையே எனவும் வகுத்துக் கூறப்பட்டுள்ளது.

# வரலாற்றில் ஓடிய அதே வழியில் ...

**அரசியல் அலசல்**

**வி.சபேசன் (ஒரு பேப்பர் - ஜெர்மனி)**

முகமாலையில் மீண்டும் சிங்களப் படை பெரும் தோல்வி ஒன்றை சந்தித்திருக்கிறது. 2000ஆம் ஆண்டில் ஆனையிறவை கைப்பற்றும் நோக்கோடு நடத்தப்பட்ட தீச்சுவாலை நடவடிக்கை சிறிலங்காப் படையினருக்கு பேரழிவைக் கொடுத்தது. இந்த நடவடிக்கையில் 600 படையினர் கொல்லப்பட்டு 2500 பேர் காயமடைந்தனர்.

அதன் பிறகு 2006 ஒக்டோபரில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட முன்னேற்ற நடவடிக்கையும் படுதோல்வியில் முடிந்தது. இதில் 300 படையினர் கொல்லப்பட்டும் 800இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். 2007 நவம்பரில் நடத்தப்பட்ட ஊடுருவல் நடவடிக்கையும் முறியடிக்கப்பட்டது. இதில் 50 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டு பல படையினர் காயமடைந்தனர்.

இதற்கு இடையில் விடுதலைப் புலிகள் 2006 ஓகஸ்டில் நடத்திய வலிந்த தாக்குதலில் 400 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டு 1000 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சென்ற புதன்கிழமை (23/04/08) நடத்தப்பட்ட பாரிய படை நடவடிக்கையும் சிறிலங்காப் படையினருக்கு மரண அடியாக முடிந்திருக்கிறது. இதில் 175இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட 500 வரையிலான படையினர் காயமடைந்துள்ளனர்.

மொத்தத்தில் முகமாலைக் களத்தில் நடந்த ஐந்து சண்டைகளில் ஏறக்குறைய 1500 படையினர் கொல்லப்பட்டும், 5000 வரையிலான படையினர் காயமடைந்தும் உள்ளனர். முகமாலை போரரங்கு சிறிலங்காப் படையினரின் சவக்குழியாக இருக்கிறது.

சிறிலங்கா அரசு ஒரு விடயத்தில் மிக அவதானமாக இருந்தது. கிழக்கில் நிலங்களை ஆக்கிரமித்ததன் பின்பு சிறிலங்கா அரசின் பக்கம் சாய்ந்து விட்டதாக கருதப்பட்ட படைவலுச் சமநிலை எக் காரணம் கொண்டும் மீண்டும் விடுதலைப் புலிகளுக்கு சார்பாக மாறி விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தது. அதனால்தான் மன்னாரில் பெயர் அறிவிக்கப்படாத படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

பல மாதங்களாகச் சண்டையிட்டு கிழக்கை ஆக்கிரமித்ததன் பின்னர் சிறிலங்காப் படைகளின் கை ஓங்கி விட்டதாகவும், விடுதலைப் புலிகள் பலவீனமடைந்து விட்டதாகவும் உலகை நம்ப வைப்பதில் சிறிலங்கா அரசு வெற்றி பெற்றிருந்தது. 2006 ஒக்டோபரில் நடந்த முகமாலைச் சமர் சிறிலங்காப் படையினருக்கு பெரும் அழிவில் முடிந்த போதும் கூட, கிழக்கில் கிடைத்த வெற்றிகளை சிறிலங்கா அரசு தன்னுடைய பரப்புரைக்கு பயன்படுத்திக் கொண்டது.

அதன் பிறகு வான்புலிகளின் தாக்குதல்கள் சண்டையில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியது. அப்பொழுதும் விடுதலைப் புலிகளால் இனி மரபுச் சண்டைகளை செய்ய முடியாது என்றும் சிறிலங்காப் படையினர் விரைவில் வன்னியையும் கைப்பற்றி விடுவார்கள் என்றும் சிறிலங்கா அரசு தொடர்ந்தும் பரப்புரை செய்து வந்தது. இதை நம்பிக்கொண்டு ஒட்டுக்குழுக்களும், அவைகளின் ஊடகங்களும் இதையே எழுதி வந்தன.

ஆயினும் சிறிலங்கா அரசுக்கு உள்ளுக்குள்ளே ஒரு அச்சம் இருக்கத்தான் செய்தது. வன்னி மீது ஒரு பாரிய நடவடிக்கையை மேற்கொண்டு, அது தோல்வியில் முடிந்தால் நிலைமை தலைகீழாக மாறி விடும் என்பது சிறிலங்கா அரசுக்கு தெரிந்திருந்தது. அதனால் எந்த ஒரு பெயரையும் வைக்காது மன்னாரில் ஒரு படை நடவடிக்கையை ஆரம்பித்தது.

மன்னாரில் சில நூறு படையினரை ஈடுபடுத்தி மெது மெதுவாக முன்னேறி சில வாரங்களில் மடுவை கைப்பற்றி விட முடியும் என்று சிறிலங்கா அரசு கணக்குப் போட்டது. அது முடியாது போகவே சில ஆயிரம் படையினரை உள்ளடக்கிய அணிகளை சண்டையில் இறக்கி பல முனையில் முன்னேற முயன்றது. சிறிய நடவடிக்கைகளே இடம் பெறுவதாக வெளியில் சொல்லிக் கொண்டு பாரிய அளவில் சண்டையை நடத்திப்பார்த்தது. எதுவும் பலன் தரவில்லை.

கடந்த ஒரு வருடமாக மன்னாரில் சிறிலங்கா படையினர் தேங்கிப் போய் நிற்பதைப் பார்த்து, உலகம் உண்மையான கள நிலைமையை உணரத் தொடங்கியது. சிங்கள மக்களும் தமது அரசு தமக்கு பொய் சொல்கிறது என்பதை உணரத் தொடங்கினர்.

இந்த நிலையில் சில வாரங்களுக்கு முன்னர் மிகப் பாரிய நடவடிக்கையை மேற்கொண்டு சிறிலங்காப் படையினர் மடுவை நெருங்கினர். மடுவுக்குள் நுழைந்து மடுத் தேவாலயத்தில் ஒரு வெற்றி விழாவை நடத்தி விட சிறிலங்கா அரசு திட்டமிட்டிருந்தது. கிறிஸ்தவரான ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே அந்த வெற்றி விழாவுக்கு தலைமை தாங்குவதற்கான திட்டங்களும் வகுக்கப்பட்டிருந்தன.

கடைசியில் கிறிஸ்தவ ஆயர்கள் மேற்கொண்ட முடிவால் மடுவை கைப்பற்றுவது சிறிலங்கா அரசுக்கு அர்த்தம் அற்ற ஒன்றாகி விட்டது. மடு மாதாவின் உருவச்சிலையை கிறிஸ்தவ மத குருமார் பாதுகாப்பான இடத்திற்கு எடுத்துச் சென்று விட்டனர். சிறிலங்காப் படையினரின் எறிகணை வீச்சுக்களால் மடு தேவாலயம் சேதங்களை சந்தித்த நிலையில் அவர்கள் இந்த முடிவை எடுத்தனர்.

வரலாற்றில் காணாத போரை நடத்தப் போவதாக சொல்லி விட்டு, ஏற்கனவே வரலாற்றில் நான்கு முறை கண்டது போன்று பெரும் இழப்பைச் சந்தித்து, படையினரின் உடல்களையும் ஆயுதங்களையும் இழந்து, ஏற்கனவே ஓடிய அதே வழியால் சிங்களம் ஓடி விட்டது.

இந்த நிலையில் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயும் ஒரு குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். மடுமாதாவும் இல்லை, விழா நாயகனும் இல்லை என்று ஆனதன் பிற்பாடு மடுவை கைப்பற்றுவதில் சிறிலங்கா அரசுக்கு எந்த பிரயோசனமும் இல்லாமல் போய்விட்டது. அத்துடன் மடு தேவாலயத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவில் சிறிலங்காப் படையினரை மறித்து வைத்திருக்கும் விடுதலைப் புலிகளை தாண்டி வரவும் சிறிலங்காப் படையினரால் முடியவில்லை.

மன்னாரிலும் மணலாறிலும் சிறிய சிறிய முன்னகர்வு முயற்சிகளை தொடர்ந்து சிறிலங்காப் படைகள் மேற்கொண்டு வந்தாலும், அவைகள் எவ்வித வெற்றியையும் அளிக்கவில்லை. அனைத்து முனைகளிலும் விடுதலைப் புலிகள் கடும் எதிர்ப்பைக் கொடுப்பது சிறிலங்கா அரசுக்கு பெரும் ஆச்சரியமாகவும் இருக்கிறது.

மன்னாரிலும் மணலாறிலும் விடுதலைப் புலிகள் காட்டி வரும் கடும் எதிர்ப்பினைக் கொண்டு, விடுதலைப் புலிகளின் முக்கிய படையணிகள் அங்குதான் நிலைகொண்டுள்ளன என்று நம்பி சிறிலங்கா அரசு கணக்கு போட்டிருக்கக் கூடும். அதன் அடிப்படையில் முகமாலையில் ஒரு பாரிய நடவடிக்கையை மேற்கொண்டு அங்கு வெற்றி பெறலாம் என்று சிறிலங்கா அரசு கருதியிருக்கக் கூடும்.

வழமைக்கு மாறாக சிறிலங்காவின் படைத் தளபதிகள் முகமாலையில் பெரும் நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக முன்னறிவித்தல் செய்தனர். சிறிலங்காவின் படைத் தளபதி கூட ஈழப் போர் வரலாற்றில் இல்லாத வகையில் ஒரு பெரும் போரை முகமாலை முன்னரங்கில் மேற்கொள்ளப் போவதாக கூறினார்.

ஆனால் சிறிலங்காப் படையினரிடம் வாய் வீரத்தை தவிர வேறொன்றும் இல்லை என்பது மீண்டும் நிரூபணம் ஆகிவிட்டது. வரலாற்றில் காணாத போரை நடத்தப் போவதாக சொல்லி விட்டு, ஏற்கனவே வரலாற்றில் நான்கு முறை கண்டது போன்று பெரும் இழப்பைச் சந்தித்து, படையினரின் உடல்களையும் ஆயுதங்களையும் இழந்து, ஏற்கனவே ஓடிய அதே வழியால் சிங்களம் ஓடி விட்டது.

ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளேயும் ஒரு குண்டு வெடிப்பில் கொல்லப் பட்டார். மடுமாதாவும் இல்லை, விழா நாயகனும் இல்லை என்று ஆனதன் பிற்பாடு மடுவை கைப்பற்றுவதில் சிறிலங்கா அரசுக்கு எந்த பிரயோசனமும் இல்லாமல் போய்விட்டது.

கடந்த செவ்வாய்க் கிழமை சிறிலங்காவின் படைத் தளபதி சரத் பொன்சேகா யாழ் குடாவிற்கு விஜயம் செய்திருந்தார். அன்றே சிறிலங்காப் படையினர் முன்னகர்வு முயற்சி ஒன்றை மேற்கொண்டனர். விடுதலைப் புலிகளின் பதில் தாக்குதலில் ஒரு டாங்கி முற்றாக அழிந்து போனது. அத்துடன் தமது முயற்சியை அன்றைக்கு சிறிலங்காப் படையினர் கைவிட்டனர். அதன் பிறகு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் எழுதுமட்டுவாளில் இருந்து சிறிலங்காப் படையினரின் இரண்டு ஆட்லறித் தளங்கள் அழிந்து போயின.

ஆயினும் நடக்கப் போகும் விபரீதத்தை உணராது சிறிலங்காப் படையினர் அடுத்த நாள் தமது பாரிய படை நடவடிக்கையை ஆரம்பித்தினர். முன்னகர்ந்து சிறிலங்காப் படையினரை 500 மீற்றர்கள் தூரத்திற்கு முன்னேறுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதித்தனர். சரியான தருணம் வந்தவுடன் விடுதலைப் புலிகள் எதிர்த் தாக்குதலை ஆரம்பித்தனர்.

விடுதலைப் புலிகளின் எறிகணைத் தாக்குதலிலும், கண்ணி வெடிகளிலும், பொறிக் கிடங்குகளிலும் சிக்கி சிறிலங்காப் படை பேரழிவைச் சந்தித்தது. விடுதலைப் புலிகளின் சிறப்புப் படையணியான சார்ளஸ் அன்ரனிப் படையணியும் முறியடிப்புத் தாக்குதலில் ஈடுபட்டது. விடுதலைப் புலிகளின் முறியடிப்புத் தாக்குதலை வடபோர்முனை கட்டளைத் தளபதியான கேணல் தீபன் வழிநடத்தினார்.

உறுதியான தகவல்களின் படி 176 படையினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டனர். 500 வரையிலானோர் காயமடைந்தனர். அதில் 300 பேர் வரையிலானோர் மீண்டும் களத்திற்கு திரும்ப முடியாதபடி காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். 4 யுத்த டாங்கிகள் அழிக்கப்பட்டு, இரண்டு சேதமாக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

சிறிலங்கா அரசு புதிதாக உருவாக்கியிருந்த கவசப் படையணியை பெரிதும் நம்பியிருந்தது. ஆனால் 2006ஆம் ஆண்டில் சந்தித்ததைப் போலவே இம் முறையும் கவசப் படையணி பெரும் சேதத்தை சந்தித்திருக்கிறது.

விடுதலைப் புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள் என்று சிறிலங்கா அரசு செய்து வந்த பிரச்சாரம் உண்மையல்ல என்பது இந்தச் சண்டையோடு வெட்ட வெளிச்சம் ஆகிவிட்டது. விடுதலைப் புலிகள் பெரும் பலத்தோடு இருக்கிறார்கள் என்பதை உலகத்திற்கு இந்தச் சண்டை உணர்த்தி விட்டது. முகமாலை ஊடான சிறிலங்காப் படையின் முன்னகர்வு என்பது சாத்தியம் அற்ற ஒன்று என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னாரிலும் மணலாறிலும் விடுதலைப் புலிகள் ஒரு ஆண்டாக நடத்தி வருகின்ற சண்டைகளும், முகமாலையில் நடந்த முறியடிப்புத் தாக்குதலும் ஒரு விடயத்தை தெளிவாகச் சொல்கின்றன. விரைவில் ஈழப் போரின் வரலாற்றில் காணாத அளவுக்கு ஒரு பெரும் போர் நடைபெறப் போகிறது. ஆனால் அதை நடத்தப் போவது சிறிலங்கா அரசு அல்ல.

நரித்தனம்
வீழும்போது
நகைத்தவர்
ஓடும்போது
சரித்திர ஏடு
நம்மை
சரிவரக் கணிக்கும்
பாரும்

ஒரு பேப்பர்

# பெண்களின் சாதனைகளை எங்கள் தேசியத் தலைவர் மழுங்கடிக்கிறாரா?



## சாத்திரி

*(ஒரு பேப்பருக்காக)*

தலைப்பைப் பார்த்ததும் சாத்திரிக்கு என்ன நடந்தது மாற்றுக் கருத்தாளர் என்கிற பெயரிலை கொஞ்சம் வாங்கிக் கொண்டு மற்றப் பக்கம் தாவிவிட்டாரா? அல்லது ஏதோ பரபரப்பிற்காக இப்பிடியொரு தலைப்பை வைச்சாரா எண்டு தலையைப் பிய்க்க வேண்டாம். நடந்தது இதுதான்.

கடந்த 30.03.08 அன்று ஜெர்மனியில் உள்ள சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியம் ஜெர்மனியில் கற்றிங்கன் நகரில் ஒரு புத்தக அறிமுக விழா ஒன்றினை நடாத்த ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்தப் புத்தகத்தின் பெயர் நெருப்புப் பூக்கள். புத்தகத்தினை எழுதியிருந்தவர் மட்டு மாவட்டத்தின் கல்லடி றொபேட் என்பவர். இவர் சுமார் எட்டு ஆண்டுகளிற்கு மேலாக சிறீலங்காவின் வெலிக்கடைச் சிறையில் வாடுகின்ற ஈழத்தமிழர்களின் விடுதலையை நேசிக்கின்ற ஒரு போராளிக்கலைஞன். இவரது கவிதைத் தொகுப்பே இந்த புத்தகமாகும்.

ஆயுள் தண்டனை பெற்று தனது காலத்தினை சிறையிலேயே கழித்தபடி வாழ் நாளில் விடுதலையாவேனா அல்லது தன்வாழ்வு சிறையிலேயே முடிந்து போகுமா என்கிற கேள்விகளிற்கு விடை தெரியாத பொழுதுகளிலும் தன் உணர்வுகளை கவிதையாய் வடித்து அதனை ஒரு புத்தகமாக்கி அந்தப் புத்தகத்தினை உலகெங்கும் வாழும் தமிழர்களிடமும் கொண்டு போய் சேர்த்து அதில் வருகின்ற பணத்தினை ஈழத்தில் உள்ள செஞ்சோலை சிறுவர்களின் எதிர் காலத்திற்கு உதவியாக்குவதே அவரது நோக்கமாகும்.

இதனைப் படிப்பவர்கள் அனைவரிற்கும் அந்தக் கல்லடி றொபேட் என்பரை பற்றியும் அவரது உயரிய நோக்கமும் புரிந்திருக்கும். இந்தப் புத்தகத்தினை வெளியீடு செய்வதற்கு புலம் பெயர் தேசத்தில் முயற்சிகளை சிலர் எடுத்திருந்த போதும் இதே சர்வதேச புலம் பெயர் எழுத்தாளர் ஒன்றியத்தின் அமைப்பினைச் சேர்ந்த சிலர் முட்டுக் கட்டைகளைப் போட்டு தடுத்துக் கொண்டிருந்தனால் இந்தப் புத்தகம் கால தாமதமாகி கடைசியாய் சுவிஸ் நாட்டில் வேறொரு அமைப்பினரால் வெளியீடு செய்யப்பட்டது.

**தங்களை தமிழ் சமுதாயத்தின் முக்கிய நபர்களாகவும் தமிழ் சமூகத்தின் வழி காட்டிகளாகவும் புத்திமான்களாகவும் அடையாளப் படுத்திக் கொள்ள விரும்புபவர்கள் பட்டிமன்றம் என்ற பெயரில் குப்பைத் தொட்டி மன்றமொன்றை அரங்கேற்றி முடித்தனர்.**

அதே புத்தகத்திற்குத்தான் புத்தகத்தினை வெளியிட முட்டுக்கட்டை போட்ட அமைப்பினரே ஜெர்மனியில் அறிமுக நிகழ்வினை செய்திருந்திருந்தனர்.

அந்த அமைப்பின் தலைவர் ஏலையா முருகதாசன் அவர்கள் விடுமுறையில் வேறு நாட்டிற்கு போகவேண்டி இருந்ததால் உபதலைவரான திருமதி விக்னா பாக்கியநாதன் தலைமை தாங்கினார். இவரது பட்டங்கள் (பி.ஏ. மற்றும் கவிதாயினி). இவர் கலைவிளக்கு என்கிற பத்திரிகையின் ஆசிரியர் மட்டுமல்ல ஜெர்மனியில் தமிழாலயம் பாடசாலையின் ஆசிரியராகவும் இருக்கிறார். பாடசாலைப் பிள்ளைகளிற்காக இலக்கணப் புத்தகங்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறார். இவரது தலைமையிலேயே அனைத்து ஏற்பாடுகளும் நடந்தது.

புத்தக வெளியீட்டு நாளன்று வேறு இரண்டு புத்தகங்களின்செருகல்களுடன் மூன்று புத்தகங்களின் அறிமுக விழாவாக நடந்தது.சரி இனித் தான் இந்தக் கட்டுரையின் தலைப்பு சம்பந்தமான விடயம்.

இந்த நிகழ்வில் ஒரு பகுதியாக சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியத்தின் சார்பில் உரைக்களம் அதாவது பட்டிமன்றம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.அந்தப் பட்டி மன்றத்தின் தலைப்பு பெண்களின் சாதனைகள் மதிக்கப்படுகின்றதா அல்லது மழுங்கடிக்கப்படுகின்றதா என்பதே.

இந்த நிகழ்விற்கு தலைமை தாங்கியும் அதனை ஒழுங்கு படுத்தியும் இருந்தவர் அந்த அமைப்பின் உறுப்பினரும் அந்த அமைப்பின் ஊடகத் தொடர்பாளருமான திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் என்பவர். இவரது பட்டங்கள் (ஊடகவியலாளர் மற்றும் கவிதா ஞானவரிதி என்பன.)

ஊடகவியலாளர் என்பதெல்லாம் பட்டமா இவர்களின் பட்டங்கள் பற்றிய விபரங்கள் இந்தக் கட்டுரைக்கு எதற்காக என்று நீங்கள் யோசிக்கலாம் கட்டுரையின் இறுதியில் அது உங்களிற்கு புரியும்.

இந்தப்பட்டிமன்றத்தின் இறுதியில் கருத்துக் கூறிய பட்டிமன்றத்தின் நடுவரான திருமதி கோசல்யா சொர்ணலிங்கம் அவர்கள் எங்கள் தேசியத் தலைவர் அவர்களே மாமனிதர் என்கிற கௌரவத்தினை வழங்கும் பொழுது மனிதர் என்று ஆண்களை கௌரவிக்குமுகமாகவே வழங்குகிறாராரே தவிர மாமனிசி என்று பெண்கள் சார்பாக கௌரவிக்கப் படவிலை என்று கருத்தினைக் கூறினார்.

அப்படியானால் பெண்கள் சாதனைகளை எமது தேசியத் தலைவர் மழுங்கடிக்கின்றார் என்று கோசல்யா சொர்ணலிங்கம் சொல்கின்றாரா என்று பார்வையாளர் வரிசையிலிருந்த பலர் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ள சிலர் தலையிலடித்துக் கொண்டனர்.

(தொடர்ச்சி 10ம் பக்கத்தில்)


# அகதி நிலை ஆரம்ப முதல் இறுதி விண்ணப்பம்

- அகதி நிலை தடுப்புக்காவல்/பிணை விடுவிப்பு/மேன்முறையீடு
- ஐக்கிய இராச்சிய/உள்வரவு அனுமதி/விசா விண்ணப்பம்
- தொழில் முறை மற்றும் மாணவர் விசா விண்ணப்பம்
- ஐக்கிய இராச்சிய பிரஜாவுரிமை/தேசியம்
- வதிவிட உரிமை/நீண்டகாலம் தங்கியுள்ளோர் விண்ணப்பம்
- வேலை செய்யும் விடுமுறை விண்ணப்பம்;
- உயர்தரத் திறமை குடிவரவுத் திட்டம்
- ஐரோப்பிய ஒன்றியம்/ ஐரோப்பிய ஒன்றியம் பொருளாதாரப் பிரதேச, சுவிஸ் நாட்டு குடும்ப அங்கத்தவர் பதிவு.
- தங்கியுள்ளோர்/உறவினர் விடுமுறை/வதிவிட விண்ணப்பம்
- விசா நீடிப்பு

பல் வேறுபட்ட குடிவரவு தொடர்பான விடயங்களில் பல வெற்றிகரமான சேவையினை ஆற்றிவரும் எமது நிறுவனம், தனது சேவையை புதிய இடத்தில் ஆரம்பிக்கிறது. உங்களது பிரச்சினைகளை இலகுவாக இனம்கண்டு, சரியானதும், விரைவானதுமான தீர்வுகான நாடுங்கள்.

**Gerald & Co.**
*Professional Immigration & Legal Consultants*
www.brit-immigration.org.uk

## Asylum Applications/ Fresh applications, Advice on UK Asylum/interview procedures.

- Entry Clearance/Visa applications
- Leave to remain applications
- FLRO, SET(O), SET(F)
- Certificate of Approval (COA) Marriage
- Student Visa Applications
- EU/EAA Applications
- EEA Registration Certificates
- Setting up Business/Visa
- Working Holiday Maker Visas
- Asylum Applications
- Detention & Bail
- Appeal Matters
- Reconsideration Appeals
- Humanatarian Protection / Discretionary leave
- HSMP Visas/Work permit visa
- Visa extensions - in country
- Spouse & Dependent relative visas
- Nationality/Citizenship.

**Gerald & Co.**
Contact:
Mrs Suresh
OISC registered Immigration Advisor

T: 020 8646 4800 F: 020 8665 2399 M: 07932 790 650
E: gs@brit-immigration.org.uk
64 London Road, Morden, Surrey, SM4 5BE

# சிங்களத்தின் சீனக் காதலும் இந்திய ஊடலும்

க.வே.பாலகுமாரன்
*(விடுதலைப் புலிகள் ஏட்டில்)*

மிகக் குரூரமானதொரு கபடம் நிறைந்த அரசியல் பொம்மலாட்டமொன்று மீண்டும் சிங்களத்தில் அரங்கேறுகின்றது. இப்பொம்ம லாட்டத்தினை நிகழ்த்துபவர்கள் ஜே.வி.பி.யின ராக இருந்தாலும் ஆட்டுவிப்பவர் யார்? என்பதே எமது கேள்வி.

இக் கபட நாடகத்தின் கருப்பொருள் இந்திய எதிர்ப்பு சென்ற பெப்ரவரி மாதம் பதினெட்டாம் நாள் அனுராதபுரத்தில் இந்திய விரிவாக்கத்திற் கெதிரான தமது பெருமெடுப்பிலான எதிர்ப்பி யக்கத்தை ஜே.வி.பி. தொடங்கியது. அங்கு முழங்கித் தள்ளிய சோமவன்சர் தொடர்ந்தும் இந்தியத் தலையீடு அதிகரித்தால் இந்தியப் பொருட்களை புறக்கணிக்குமாறு மக்களை வேண்டுவோமென அச்சுறுத்தினார்.

13 ஆவது திருத்தம், இடைக்கால சபை என்ப தெல்லாம் இந்திய விரிவாதிக்கத்திற்கு வழி யமைக்கவே இவற்றினைக் கடுமையாக எதிர்ப் போம் என்றார்.

இப்பொழுது ஜே.வி.பி.யினர், மீண்டும் றோவின் தலையீடு, இந்தியப் பணித்துறை ஆட்சியாளரின் அடாவடித்தனம், பெரிய ண்ணன் நினைப்பு, தென்னாசியாவைத் தமது கொல்லையாக நினைக்கும் போக்கு என விளாசுகின்றனர்.

இவையெல்லாம் எமக்குப் பின்னோக்கி ஓட் டப்படும் திரைப்படமொன்றின் காட்சிகளா கின்றன. 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி.யினர் தமது உறுப்பினர்களுக்கு எடுத்த ஐந்து பாடங்களுள் ஒன்று இந்திய விரிவாதிக்கம். இன்று, அன்று அதைக் கற்பித்தோரில் உயிரோடு இருப்பவர் சோமவன்சர் மட்டுமே. அது போலவே 1987-88 களில் இந்தியாவை மிக இழிவாகப் பேசி இந்திய ஏகாதிபத்தியத்தின் சுரண்டலுக்கு இடம் கொடோமென்றும் ஏகாதி பத்தியத்தின் காவல் நாய்களே தமிழர் இயக்கங் களென்றும் இலங்கை - இந்திய உடன்பாடு அடிமைச்சாசனமென்று அலறியதும் தெரிந்ததே. இப்பொழுதும் அதே தான் நிகழ்கின்றது.

அதிரடி அறிக்கைகளுக்கும் அரசியல் அதிர் வேட்டுக்களுக்கும் ஜே.வி.பி.யினரிடம் எப்பொ ழுதும் பற்றாக்குறையிருந்தது கிடையாது. என் றாலும் அவர்களது இந்த அதிர்வேட்டு வெறும் அரசியல் நாடகமா? அல்லது சிங்களத்தின் ஆழமான மனநிலையின் வெளிப்பாடா? இது பற்றி எவரும் மேலோட்டமான முடிவிற்கு உடனடியாக வர முடியாது.

இருண்மை நிறைந்த மருமங்கள் புதைந்த ஐதீகங்களால் வனையப்பட்ட சிங்களத்தாரின் அடிமனத்தில் சில ஆழமான வெறுப்பு நோய்க் கூறுகள் உறைந்திருக்கின்றன. அதிலே வெளிநாட்டவர் மீதான வெறுப்பு நோயும் ஒன்று.

சோமவன்சர் அனுராதபுரத்தில் பேசிய பொழுது 'யார் எங்கள் எதிரி?' என வினா வெழுப்பித் தானே விடையும் தந்தார். முதலில் நோர்வே பிறகு பிரசல்ஸ் (ஐரோப் பிய ஒன்றியம்), வோசிங்டன், ரோக்கியோ, மேற்கு ஐரோப்பியநாடுகள். இவர்கள் எங்களுக் கெதிராக நேரடியாக செயற்படுபவர்கள். ஆனால் இங்கே இன்னொருபகை மறைந்திருக் கின்றது. அதுதான் புதுதில்லி என்றார்.

எனவே இங்கே விடுபட்டிருக்கின்ற நாடு சீனா மட்டுமே. இங்குள்ள துயரம் அல்லது விபரீதம் என்னவென்றால் ரோக்கியோவோ வோசிங்டனோ, புதுதில்லியோ பெய்ஜிங்கோ ஏதோவொரு விதத்தில் சிங்களத்திற்கு ஒன்றில் நிதியுதவிகளை அல்லது இராணுவ உதவிகளை அல்லது இரண்டையுமே பெருமளவில் வழங்கிவருபவை தான்.

அதேவேளை ஏதோ ஒப்பிற்கு சிங்களத்தின் மனித உரிமை மீறல் எல்லை கடந்துவிட்ட நிலை யில் வேறு வழியின்றிக் கடுமையான கண்டன ங்களையும் மெலிதான சில தடைகளையுமிட்டு ஏனோதானோவென செயற்படுபவை.

ஆனால் இதனைக் கூட பெய்ஜிங் செய்ய ஆயத்தமாகவில்லை. ஆகவே இவ்வகையில் தான் சீனா வேறுபடுகின்றது. ஆனால் சீனா இங்குதான் என்றில்லை. எங்கும் இதே கதை தான். மியான்மாரில், கென்யாவில், சூடானில் இன்றும் பல நாடுகளில் இதுவே அவர்கள் கதை. என்றாலும் சூடானில் தார்பூர் பகுதி மனித அவலத்தைப் புறந்தள்ளிச் சீனா சூடானுக்கு வழங்கிய உதவி அனைத்து நாடுகளின் கண்டனத்திற்குள்ளாகிச் சீனா சங்கடப்பட்டு, ஏன்? அவமானப்பட்ட நிலையிற் தனது நிலைப் பாடு குறித்து மீளாய்வு செய்யத் தள்ளப் பட்டுள்ளது. எனவே எம் மக்களும் என்றோ வொரு நாள் சீனா மட்டுமல்ல ஏனைய நாடு களும் வரலாற்று நீதியின் முன் தலைகுனிய நேரிடும். இதனால் தத்தம் போக்கினை மாற்ற நேரிடும் என்று திடமாக நம்புகின்றார்கள்.

எனவே இத்தகைய சீனத் தொடர்பு குறித்து சற்று பின்னோக்கிப் பார்த்தால் இன்றைய நிலையைப் புரிய அது உதவிடும். இற்றை வரை சிங்களத்தில் எக்கட்சி ஆண்டாலும் அது எவ்வித கொள்கையைக் கொண்டிருந்தாலும் அது பற்றிச் சீனா அலட்டிக் கொள்ளாமல் உறவு கொள்ள ஆயத்தமாகவே இருந்துள்ளது.

எனினும் இப்பொழுது ஜே.வி.பி.யோடு கூட நெருக்கம் கொள்கின்றது. அது பதவிக்கு வருவதை விரும்புகிறது எனக் கூறப்படுகின்றது. சீனாவோடு தமது உறவு 2000 ஆண்டுகட்கு முற்பட்டதென சிங்களத்தார் பெருமையடித்துக் கொள்கின்றார்கள்.

முதன்முறையாக ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் தான் சீன உறவிற்கான அடிக்கல் நாட்டப் பட்டது. புதிய நாடாக அப்போது தான் தோற்றம் பெற்ற சீனாவை 1950 களில் சிங்களம் அங்கீகரித்தது.

1952 இல் ஆர் ஆர் உடன்பாடெனப்படும் அரிசி இறப்பர் உடன்பாடு கைச்சாத்தாகியது. 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சி யின் பொழுது அதனை அடக்க ஆயுதங்களை அள்ளி வழங்கியது. இதை ஜே.வி.பி. மறந் தாலும் வரலாறு மறக்காது. பின் ஜே.ஆர் காலத்தில் 1983 இன் பின் விடுதலைப் போர் முனைப்புப் பெறத் தொடங்கவே. முதன் முறையாக நொறின்கோ (Norinco) எனப்படும் வட சீனத் தொழிற் கூட்டுத்தாபனத்தோடு ஆயு தக் கொள்வனவு உடன்பாடு செய்யப்பட்டது.

அன்று தொட்டு நொறின்கோ இங்கு ஆயுதக் களஞ்சியங்களைப் பேணத் தொடங்கியது. இவ்விராணுவ உதவிகளில் சீனாவால் முதலில் தமக்கு வழங்கப்பட்ட ரி-56 இலகு சுடுகலன் புலிக்கெதிரான தமது போரிடும் ஆற்ற லைப் பெருமளவு அதிகரித்ததாகச் சிங்கள இராணுவம் நன்றியோடு கூறிக்கொள்கின்றது.

ருசிய ஏ.கே 47 இன் சீனப் பதிப்பான இச் சுடுகலன் பாரம் குறைந்தது. பயன்படுத்த இலகுவானது. அதுவரை சிங்களம் பிரித்தானிய என்பீல்ட் குழுமத்தின் இரண்டாம் உலகப் போரின் பின்னாகப் பயன்பாட்டிலிருந்த எஸ்.எல்.ஆர் சுடுகலன்களையே பயன்படுத்தி வந்தது.

சிறீமா காலத்தில் 1973 இல் பண்டாரநாயக்கா நினைவு மாநாட்டு மண்டபம், 1980 களில் ஜே.ஆர் காலத்தில் உயர் நீதிமன்ற வளாகக் கட்டடம், இப்பொழுது சீன மக்சிம் வங்கி வழி அம்பாந்தோட்டை துறைமுகம் உட்பட வளர்ச் சித் திட்டங்களுக்கு பாரிய நிதியுதவி Y8,Y12,Y22 வான் கலங்கள் வழங்கியது. அந்தக்காலம் இப்போது (மிக் 29 வான் கலங்களை வாங்க வக்கற்ற சிங்களத்திற்கு) F-7G வான்கலம். இவ்வாறாக சீனா படிப்படியாக சிங்களத்தின் முதன்மை ஆயுத விற்பனையாளராக, கொடையாளராக, பொருண்மிய உதவியாளராகத் தோற்றம் பெற்றுவிட்டது.

அண்மையில் நியுயோர்க் ரைம்ஸ் ஏட்டிற்குத் தான் வழங்கிய செவ்வியில் பாலித கோகண பின்வருமாறு கூறினார். சிறிலங்காவின் பழமையான மரபுவழி கொடையாளரான கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன் எல்லோருமே இப்போது ஒரு மூலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். எமக்கு கீழைத்தேய உதவி குறிப்பாக சீனா போன்றவை அந்த இடத்தைப் பெறுகின்றன.

சென்ற வருடத்தில் சீன உதவி ஐந்து மடங் காக, ஏறத்தாழ ஒரு பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்து யப்பானை விட கூடுதல் உதவி வழங்கும் நாடாக சீனா மாறியுள் ளது. இப்பொழுது சீனா எமது நாட்டில் ஒரு புதிய துறைமுகம், நெடுஞ்சாலை, இருமின்னுற் பத்தி நிலையங்கள் என்பனவற்றை அமைத்துத் தருகின்றது என்றார் அவர்.

எனவே இப்பொழுது சீனக் காதல் புதிய கட்டமொன்றுக்குள் நுழைகின்றது. இதற்கேற்ப ஜே.வி.பி.யினர் செயற்படுவதும் அதற்கு மறைமுகமாக மகிந்தர் ஆதரவு வழங்குவதும் புலப்படும் விடயங்கள். எனவே இப்பொழுது ஒரு புதிய வாய்ப்பாட்டு மாற்றம் ஏற்பட்டு விட்டதாகக் கருதப்படுகின்றது.

20 வருடங்களுக்கு முன் இந்தியாவே இப் பகுதியில் ஒரேயொரு மேலாதிக்க நாடு. ஆனால் இப்பொழுது சீனா தன் நுட்பம் மிகுந்த செயற்பாடுகளால் இந்தியாவின் கொல்லைக் குள் புகுந்துவிட்டது. சிங்கப்பூர் பல்கலைக்கழக சர்வதேச உறவுகளுக்கான பேராசிரியர் ராஜா மோகன் பின்வருமாறு குறிப்பிடுகிறார் 'சீனா இப்பொழுது இந்திய அயல் நாடுகளில் வீதிகள், துறைமுகங்கள் போன்றவற்றைக் கட்டி அவற்றினைத் தொடர்புபடுத்தித் தொடர்பு வட்டமொன்றை உருவாக்கி வருகின்றது.

இந்து சமுத்திரத்தின் கடற்பாதை அதன் வளங்கள் யாவற்றின் மீதும் சீனா கண் வைத்துள்ளது'. மனித உரிமை காப்பு அமைப்பின் தென்னாசிய ஆய்வாளர் மீனாட்சி கங்குலி சொல்கிறார் 'சிறிய நாடுகளெல்லாம் இப்பொழுது சீனா பக்கம் சாய்கின்றன. இதன் மூலம் இந்தியாவின் பிராந்திய நலன் தொடர்பிலான அதன் கொள்கையில் அழுத்தம் கொடுக்கவும் மனித உரிமை விடயத்தில் இந்தியாவை வாயடைக்கவும் இதனை அவர்கள் பயன்படுத்துகிறார்கள்' இப்பொழுது இந்தியா கவலைப்படத் தொடங்கியுள்ளது.

இப்பொழுது இந்தியா தனது வெளியுறவுக் கொள்கை தொடர்பில் இந்தியாவால் ஒரு தெளிவான போக்கினை எப்போதும் வெளிப்படுத்த முடியாமலிருப்பது இப்பொழுது உணரப்படுகின்றது. தனது நலன்கள் அதற்குத் துணைபோகிறவர் என்கிற விடயங்களில் அதன் போக்கு பல தடுமாற்றங்களைக் கொண்டதாகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக முதலில் மியான்மார் இப்பொழுது சிறிலங்கா சான்றாவதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

1990 களில் மியான்மாரில் சனநாயகம் மீள வேண்டுமெனக் குரல் கொடுத்த இந்தியா, இப்போது இராணுவ ஆட்சிக் குழுவின் பக்கம் சாய்ந்துள்ளது. இங்கோ இமாலய குத்துக் கரணத்தை அடித்துள்ளது. கோகண தொடர் ந்து தன் செவ்வியில் சொல்கிறார் 'இந்தியாவின் உதவியும் அதிகரிக்கின்றது. இவ்வருடம் 500 மில்லியன் டொலரை ஈட்டும் அனல்மின் நிலையம், கைத்தொழில், பூங்காக்கள், தொலைத் தொடர்புத்துறை போன்ற வற்றில் முதலிட இந்திய நிறுவனங்களை அழைத் துள்ளோம்' காங்கேசன் சீமெந்து ஆலையை மீள இயக்க பிர்லா குழுமம் முயல்வதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்திய நலன்களுக்கு என்றும் தடையாக இருக்கக் கூடாதென்பது தமிழ் மக்கள் நிலைப்பாடு. இதனைப் பயன்படுத்தி தன்மீது அவநம்பிக்கையும் ஐயுறவும் கொண்ட சிங்களத் தரப்பை வழிக்குக் கொண்டு வர இந்தியா முயன்றது. இதனால் தமிழ் மக்கள் நலன்கள் என்பது இந்திய நலன்களுக்கு வாய்ப்பானது என்கின்ற சமன்பாடு சிங்களத்தில் உருவானது. இதுவே சீனா, பாகிஸ்தான் நிலையும் இதன் வழி தமிழ் மக்கள் வாழ்வில் தீ அள்ளிப் போடப்படுகின்றது. ஒரு தொடர்ச்சியான விவேகமிக்க இராசதந்திர வெளியுறவுக் கொள்கையை வகுக்க முடியாமல் இந்தியா தடுமாறுவதால் இந்நிலை. 1970 களிலிருந்து ஒவ்வொரு பத்தாண்டுகளாக வகுத்துப் பார்த்தால் இது புரியும்.

2002 ஆம் ஆண்டு அமைதி முயற்சிகளைக் குழப்ப ஜே.வி.பி, சந்திரிகா போன்றோர் பயன்படுத்தப்பட்டதாகக் கொழும்பில் முன்னர் செய்திகள் அடிபட்டன. ஆனால் சீனா இதனை எவ்விதம் கையாள்கின்றது?

*(தொடர்ச்சி 10ம் பக்கத்தில்)*

SRI ATHIPARASAKTHI ASTROLOGY CENTRE



Specialist in all kinds of Astrology
Face Reading & Palm Reading

1ST FLOOR 49 HIGH STREET
EAST HAM, LONDON, E6 1SH
(NEAR PRIMARK STORE)

Opening Hours: 10a.m – 7 p.m 7 Days a week



Call:



S.P. SRIRAM GURJI
AADIVASI MUKKIYA

on 07918 808 855 / 07506 933 790

இந்தியாவில் இருந்து முதன் முறையாக வருகை தந்துள்ள **ஆதிவாசி எஸ்.பி.சிறீராம்** குருஜி அவர்கள் கானகத்தில் கடும் விரதம் இருந்து கடும் பயிற்சி செய்து 10 வருடங்கள் ஜோதிடம், வாஸ்து, குரு மந்திரங்கள் மூலம் பில்லி சூனிய நிவரத்தி ஆகிய வைகள் கற்று இந்தியாவில் பல பிரபலங்களுக்கு ஜோதிடம் பார்த்து அவர்கள் பெரிய பதவியை அடைந்துள்ளார்கள்.

ஆதிபராசக்தி அருள் கொண்டு கைரேகை மூலமும் முகநாடி மூலமும் துல்லியமாக நடந்தவை நடக்கின்றவை நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார். துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, காதல், கைரேகை, திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், விசா, லாட்டரி, தொழில், வியாபாரம், லட்சுமீகர விடயம், கண் திருஷ்டி, கோட், வழக்குகள், வாகனப் பொருத்தம், தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும்.

ஆயுர்வேத மருந்துகள் வழங்கப்படும். கல்லீரல், ஆஸ்த்மா, குடல் புண், நீரிழிவு மற்றும் அனைத்து நோய்களுக்கும் மருந்து வழங்கப்படும்.



முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் அவர்களுக்கு சோதிடம் சொன்ன போது

S.P. SRIRAM GURJI
AADIVASI MUKKIYA
Spoken languages: Tamil, Telugu, Hindi, kannada & English.

# பெண்களின் சாதனைகளை ....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

அந்த ஏற்பாட்டினைச் செய்த அமைப்பினர் பலரும் மௌனமாகவே இருந்தது மட்டுமல்ல அந்த நிகழ்விற்கு தலமை தாங்கிய திருமதி விக்னா பாக்கிய நாதனும் எதுவும் பேசாமல் மௌனமாகிய வேளையில் பிரான்சில் இருந்து அந்த நிகழ்விற்கு சென்றிருந்த கி.பி.அரவிந்தன் ஒலிவாங்கியை வாங்கி மாமனிதன் ஆண்பால் மாமனிசி பெண்பால் மாமனிதர் பலர்பால் என்று குழந்தைகளிற்கு பால் விளக்கம் கொடுப்பதைப்போல 5ம் வகுப்பு இலக்கணத்தை விளங்கப்படுத்திய பின்னரும் குழந்தையைப் போலவேதான் சொன்து சரியென்று கௌசல்யா சொர்ணலிங்கம் அடம் பிடித்துக் கொண்டிருந்தார். அது மட்டுமல்ல நடந்த தவறிற்காக சம்பந்தப்பட்டவரோ அல்லது சம்பந்தப்பட்ட அமைப்போ வருத்தமோ கவலையையோ தெரிவிக்கவில்லை. அப்பொழுதுதான் புரிந்தது அவர்களிற்கு இலக்கணப் பிழை இல்லை தலைக்கனப் பிழையென்று.

முக்கியமானதொரு நிகழ்வில் தங்களை தமிழ் சமுதாயத்தின் முக்கிய நபர்களாகவும் தமிழ் சமூகத்தின் வழி காட்டிகளாகவும் புத்திமான்களாகவும் அடையாளப் படுத்திக் கொண்டிருந்த இவர்களது கேலிக் கூத்துக்களை பட்டிமன்றம் என்கிற பெயரில் குப்பைத்தொட்டி மன்றமாக்கி மேடையேற்றி முடிந்தபின்னர். அந்த நிகழ்வுபற்றிய இந்தக் கட்டுரையை எழுத நினைத்து அந்த அமைப்பின் தலைவர் ஏலையா முருகதாசன் அவர்கள் விடுமுறையை கழித்து வீடு திரும்பும் வரை காத்திருந்தேன்.

ஏனெனில் முன்னரும் நான் இந்த சர்வதேச புலம்பெயர் எழுத்தாளர் ஒன்றியத்தின் சில குறைபாடுகளை சுட்டிக்காட்டி விமர்சித்து ஒரு கட்டுரையை ஒரு பேப்பரில் எழுதியிருந்தேன்.

அந்தக் கட்டுரை வெளிவந்ததும் தங்கள் அமைப்பினைபற்றி எழுதமுன்னர் தங்கள் பக்கத்து கருத்தக்களையும் கேட்டிருக்க வேண்டும் என்று அந்த அமைப்பினர் என்மீது குற்றச்சாட்டை வைத்திருந்தனர்.

எனவேதான் அன் தலைவர் வீடு திரும்பியதும் அவரிடம் இந்த நிகழ்வில் நடந்த குளறுபடிகளிற்கு என்ன விளக்கம் அல்லது நடந்த சம்பவத்திற்கு நீங்கள் உங்கள் அமைப்பு சார்பாக என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறீர்கள் என்று கேட்டேன்.

தங்கள் அமைப்பு உறுப்பினர்களை அழைத்து கலந்தாலோசித்து சொல்வதாக சொன்னவர். நான் மீண்டும் அவரைத் தொடர்பு கொண்ட பொழுது தான் அனைவரையும் அழைத்ததாகவும் ஆனால்அந்த நிகழ்வுடன் சம்பந்தப்பட்டவர்கள் யாரும் வரவில்லையென தனது இயலாமையினை தெரிவித்தார்.

அப்படியானால் நடந்த சம்பவத்திற்கு நீங்கள் எவ்வித நடவடிக்கையோ அல்லது உங்கள் அமைப்பு சார்பில் ஏதாவது அறிக்கையோ விடாது மௌனமாக இருப்பதால் பெண்களின் சாதனைகளை எங்கள் தேசியத்தலைவர் மழுங்கடிக்கிறார் என்கிற கூற்றினை உங்கள் அமைப்பு எற்றுக்கொள்கிறதா என்று கேட்டேன்.

அதற்கு அவர் தடுமாறியபடி மழுப்பலாக சம்பந்தமில்லாத விடயங்களையே பேசினார். சரி அடுத்த ஒரு பேப்பரிற்கு இது பற்றிய கட்டுரையை எழுதுகின்றேன் அதற்கு முன்னர் ஏதாவது நடவடிக்கையெடுத்தால் அல்லது ஏதாவது சொல்ல விரும்பினால் எனக்கு அனுப்பிவையுங்கள் என்றதும். தங்கள் அமைப்பு சார்பாக ஒரு அறிக்கையை வேறொருவரின்பெயரைச் சொல்லி அவர் அனுப்பி வைப்பார் என்றார்.

நானும் மீண்டும் முருங்கை ஏறிய வேதாளம் போல அவர் சொன்னவரிற்கு தொலைபேசியடித்து விபரம் கேட்கவும் அவர் இன்னொருவரின் பெயரைச் சொல்லி அவர் அனுப்புவார் என்றார்.

இப்படியே ஒருவர் மற்றவரின் பெயரை சொல்ல நானும் அவர்களிற்கெல்லாம் மாறி மாறி தொலைபேசியடித்து விபரம் கேட்டு அதற்கு மேலும் என்னால் முருங்கை ஏற முடியவில்லை. அதற்கு மேல் யாரையும் தொடர்பு கொள்ளவில்லை.

இரண்டு நாட்கள் கழித்து அந்த ஒன்றியம் சார்பில் ஒருவர் எனக்கு தொலைபேசியடித்து அன்று நிகழ்வில் நடந்த பட்டிமன்றத்திற்கு கோசல்யா சொர்ணலிங்கம் அவர்கள்தான் முழுப்பொறுப்பு. தங்கள் அமைப்பிற்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை எனவே அந்த சம்பவத்திற்கு பொறுப்பை எற்றுக் கொள்ளவேண்டும் என்றும் அவரை அந்த அமைப்பில் இருந்து நீக்குவதாகவும் கடிதம் அனுப்புகின்றோம் என்றார்.

ஒருவர் தேவைப்படும்பொழுது மட்டும் பன்னீர் தெளித்து பட்டாடை போர்த்தி படத்திற்கு முகம்காட்டி மகிழும் இவர்கள் ஏதாவது பிரச்சனையென்று வரும் பொழுது மட்டும் அவரிற்கே மஞ்சள் தண்ணி தெளித்து ஒரு மாலையைப்போட்டு பலியாடாக்கி விட்டு மற்றவர்கள் தப்பித்து விடுவது ஒரு சுயநலமற்ற பொதுநோக்குடைய ஒரு அமைப்பிற்கு சிறப்பாகாது.

இனிவரும் காலங்களில் இவர்கள் வேண்டுமானால் ஏதாவது கவிதை கதைப்புத்கங்கள் வெளியிடுவது பட்டங்கள் சூட்டி மகிழ்வது பொன்னாடை போர்த்திப்படம் எடுத்துக் கொள்வது என்று அவர்கள் பாட்டிற்கு எதையாவது செய்யட்டும் யாரும் கேட்கப் போவதில்லை.

ஆனால் எங்கள் அமைப்பு ஈழத்தமிழர் போராட்ட அமைப்பின் உபஅமைப்பு என்று புலுடா விட்டபடி ஈழப்போராட்டத்தையும் தமிழர் தேசியத்தையும் நீங்கள்உங்கள் வசதிக்கேற்ப மற்றவர் காதில் வைத்து அழகு பார்த்து மகிழ அது பூ அல்ல.

பல்லாயிரம் மக்களினதும் போராளிகளினதும் தியாகத்தில் வளர்த்த நெருப்பு அதில் உங்கள் மேதாவித்தனங்களை காட்டி தயவு செய்து குளிர் காய நினைக்காதீர்கள்.

# சிங்களத்தின்...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

தனது ஸ்ரீலங்காவின் உடைவு என்கிற நூலில் ஏ.யே வில்சன் பின்வருமாறு எழுதியுள்ளார். '1979 இன் இறுதி வாக்கில் தன்னை இரவுணவிற்கு சீனத் தூதர் அழைத்திருந்தார். அங்கு நான் அவரிடம் தமிழர் தனிநாட்டு வேண்டுகை பற்றி சீன நிலைப்பாடென்னவென்பது பற்றிக் கேட்டேன். அதற்கு அவர் தமது ஆபிரிக்க நட்பு நாடுகளுடனும் வளைகுடா எண்ணெய் வள நாடுகளுக்குமான நல்லுறவினை இது பாதிக்கும் சோவியத்தின் இரையாகும் என்றார்'.

இதுதான் இன்றைய நிலை, தமிழர் நலன்கள் என்பது இன்று சீனத் தரப்பிற்கும் இந்தியத் தரப்பிற்கும் தமது நலன்களை முன்னெடுக்க ஒரு ஏவுதளம். சர்வதேசத்திற்கும் இங்கு தனது மூக்கை நுழைக்க தமிழர் மீதான மனித உரிமை மீறல் ஒரு வாய்ப்பு. எல்லோர் நலன்களும் தமிழர் நலன்களுக்கு முன்னெடுக்கப்படும் விடுதலைப் போரின் அச்சிலே சூழல்கின்றது.

இத்தனை பாதகமான நிலைமைகளுக்கு மத்தியிலும் வீறுடன் நடத்தப்படும் விடுதலைப் போர் உலகின் முதன்மைக் கவனத்திலுமுள்ளது. இவையாவையும் வரலாற்றன்னை மிகுந்த அக்கறையுடன் கவனித்துக் கணக்கிலெடுத்து வருகின்றார். இன மானமிகு பொன் கணேசமூர்த்தியின் வரிகளை மீண்டும் நினைவுறுகின்றோம்.

'சலிக்காமல் நடக்கும் சக்தியினை அருளும்
செல்லும் வழிகளைச் செம்மைப்படுத்தி
வையும்
பாய்ச்சல் நிகழ்கையிலே பக்கத்துத்
துணையிருந்து
காற்றுச் சங்கூதும்'.


இங்கிலாந்தில் இருக்கும் தமிழர்கள் அனைவரும் சொந்தமாக வீடு வைத்திருப்பதற்கு எம்மால் முடிந்த உதவிகளை செய்வதே எமது நோக்கம்

Local Community Housing
**Financial services**

Are you **having Problems** getting a **mortgage** (Morgage Declined? **We can help.**

£3000 உடன் வீடு வாங்க அழையுங்கள்

The Mortgage Specialist On
**Mr. Prabaharan**
Mob: 07956 914 735
Email: thirubaharan@hotmail.com

- No Income Proof
- CCJs* Default Up To 95%
- Loan / Mortgage Arrears
- 100% Mortgage Available
- Self Certificate Available (up to 90%) LTV
- Self Employed or Employed
- Discharge Bankrupts
- Council RTB 100% (inc. adverse)
- Buy to Let or Let to Buy
- Buy to Let Foreign Nationals
- Commercial Mortgage Arranged
- Secure Loans
- Pricipal Offer Within 24hrs (subject to status)
- All Type Of Property Insurance Available



For an Immidiate decision **Call**
Tel: **020 8980 2121** Mob: **07956 914 735** Fax: **020 8980 8966**
153/159 Bow Road, London E3 2SE

LOCAL COMMUNITY HOUSING GROUP
Serving the Community

Your home is at risk if you do not keep up payment on a mortgage or other loan secured on it

# சூடு பிடிக்கும் லண்டன் மேயர் தேர்தல் உங்கள் தெரிவு எப்படி?



திரு. கென் லிவிங்ஸ்ரன்



திரு. பொறிஸ் ஜோன்சன்



திரு.ஜேம்ஸ் அலி

**சே.தேவபுத்திரன்**
*(ஒரு பேப்பருக்காக)*

நான்கு வருடங்களுக்கு ஒரு முறை வரும் லண்டன் மேயருக்கான தேர்தல் மே முதலாம் திகதி நடைபெறவுள்ளது. அதேநாளில் லண்டன் பேரவைக்கான (London Assembly ) தேர்தலும் நடைபெறவிருக்கிறது. இச்சபைக்கு 14 உறுப்பினர்கள் போட்டி மூலம் தெரிவு செய்யப்படுவார்கள் மேலதிகமாக 11 பேர் கட்சிகளுக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் விகிதாசார முறைப்படி தெரிவாகுவார்கள்.

கவுன்சில் இலெக்சன் என அழைக்கப்படும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் இதனைப் போட்டு குழப்ப வேண்டியதில்லை. இது தனித்து பாரிய லண்டனில் மட்டுமே நடைபெறும் தேர்தல். பெரும்பாக லண்டன் பிரதேசத்தில் வாழும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் இத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமை உள்ளது.

இத்தேர்தலில் வாக்களிக்க நீங்கள் செல்லும் போது, 3 வாக்குச் சீட்டுக்கள் உங்களுக்கு வழங்கப்படும். ஒன்று லண்டன் மேயர் தெரிவுக்கானது இச்சீட்டில் உங்கள் விருப்பின் படி முதலாவது தெரிவையும் இரண்டாவது தெரிவையும் செய்ய முடியும். நீங்கள் விரும்பின் உங்களது முதலாவது, இரண்டாவது விருப்புத் தெரிவினை ஒருவருக்கே வழங்க முடியும். மற்றயது உங்கள் பகுதியை பிரநிதித்துவப்படுத்துவதற்காக ஒரு உறுப்பினரை தெரிவு செய்வதற்காகவும் மூன்றாவது, கட்சி அடிப்படையில் மேலதிக பிரநிதிகளை தெரிவு செய்வதற்காகவும் இருக்கும்.

அடுத்துவரும் நான்கு வருடகாலத்திற்கு உங்கள் பகுதியின் பொதுவசதிகள் போன்றவற்றை தீர்மானிக்கப்போகும் ஒருவரை தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள் என்பதை நீங்கள் கருத்தில் எடுத்தால், நீங்கள் உங்கள் வாக்குரிமையை நிலைநாட்டவேண்டும் என்பதை உணர்ந்து கொள்வீர்கள். மேயர் தேர்தலிலும் லண்டன் பேரவைக்கான தேர்தலிலும் போட்டியிடுபவர்களும் தங்களது நிலைப்பாட்டினை விளக்கி பிரசுரங்களை வெளியிட்டுள்ளார்கள். அவர்களது கொள்கை திட்டங்களையும் அலசிப் பார்த்து உங்கள் வாக்குகளை அளியுங்கள்.

மேயர் தேர்தலில் தற்போதைய மேயரும், தொழில் கட்சி வேட்பாளருமாகிய கென் லிவிங்ஸ்ரன், கொன்சவேர்ட்டிவ் கட்சியின் சார்பில் ஒக்ஸ்போர்ட் பிரதேசத்தில் உள்ள ஹென்லி தொகுதி பாரளுமன்ற உறுப்பினர் பொறிஸ் ஜோன்சன், லிபரல் டிமொக்கிறட்டிக் கட்சியின் சார்பில் பிறயன் படிக் என பத்து வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இருப்பினும் கென் லிவிங்ஸ்ரனுக்கும் பொறிஸ் ஜோன்சனுக்குமிடையிலேயே பலத்த போட்டி நிலவி வருகிறது. தேர்தலுக்கு இன்னும் சில தினங்களே இருக்கின்ற நிலையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட அபிப்பிராய வாக்களிப்புகளில் சிலவற்றில் கென் முன்னிற்க சிலவற்றில் பொறிஸ் முன்னிற்கிறார்.

மேயர் தேர்தலில் ஏனைய கட்சி வேட்பாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் வெற்றி பெறுவதற்கான சாத்தியம் அறவே இல்லை என்றே கூறலாம். இதனை அவ்வேட்பாளர்களே அறிந்திருப்பார்கள். இருப்பினும் இத்தேர்தலில் போட்டியிடும் பசுமைக் கட்சி (Green Party) பிரித்தானிய தேசியவாதக்கட்சி (BNP) போன்றவை பெறப்போகும் வாக்குகள் லண்டன் வாசிகளின் மனவுணர்வுகளை பிரதிபலிப்பதாக அமையப்போகிறது. ஒரு புறம் லண்டனில் பெருகி வரும் வெளிநாட்டு குடியேற்றவாசிகளின் எண்ணிக்கை இந்தத் தேர்தலில் செல்வாக்கினை செலுத்தவிருக்கையில் மறுபுறம் பிஎன்பி கட்சிக்கு வழங்கும் வாக்குகள் அவர்களுக்கு உள்ளூர்வாசிகள் மத்தியில் ஏற்பட்டு வரும் எதிர்ப்பின் வெளிப்பாடாக இருக்கும். அதுபோலவேபசுமைக்கட்சிக்கு வழங்கப்படும் வாக்குகள், சுற்று சூழல் பாதுகாப்பு விவகாரங்களில் மக்களின் அக்கறையை வெளிப்படுத்தும்.

பொது போக்குவரத்து, வாகன நெரிசலை தவிர்ப்பதற்காக அறவிடப்படும் வரி, வன்முறைகளைக் கட்டுப்படுத்துதல் என்பவற்றை முன்வைத்தே முன்னணி வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். இதில் எவரது கொள்கை மக்களால் வரவேற்கப்படுகிறதோ அவரே வெற்றி வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் வேட்பாளரின் நம்பகத்தன்மை, வெவ்வேறு சமூகங்களில் அவருக்கு உள்ள செல்வாக்கு போன்ற தனி நபர் தொடர்பான விடயங்களும் வெற்றியை தீர்மானிக்கப் போகிறது.

தற்போதைய மேயர் கென் லிவிங்ஸ்ரன் லண்டன் மாநகருடன் நெருங்கிய தொடர்புடையவர். இடதுசாரி கொள்கைகளையுடைய அவர் சிவப்பு கென் என அழைக்கப்படுகிறார். லண்டனில் பிறந்து வளர்ந்த அவர் இன-மத வேறுபாடின்றி பல்வேறு சமூகங்களைச் சேர்ந்தவர்களிடம் சகஜகமாக பழகிவருபவர்.

அண்மைக்காலமாக லண்டனில் குறிப்பிடத்தக்களவு முன்னேறி வரும் பொதுப் போக்குவரத்து கென் லிவிங்ஸ்ரனின் திட்டங்களின் அடிப்படையில் அமைந்தவையே. 2012ல் ஒலிம்பிக் போட்டிகளை நடாத்துவதற்கு லண்டன் மாநகரம் தெரிவானதில் கென் லிவிங்ஸரனின் பங்குமிருந்தது. கொன்சவேர்ட்டிவ் கட்சியின் சிம்ம சொப்பனமாகத் திகழும் கென் இளைய தலைமுறையினரின் அபிமானத்தை பெற்றவர். பசுமைக்கட்சி உட்பட முற்போக்கு சிந்தனையுடையோர் கென் மேயராக வருவதையே விரும்புகிறார்கள்.

கடந்த 11வருடங்களாக ஆட்சியிலிருக்கும் தொழிற்கட்சியின் சரிந்துள்ள செல்வாக்கு, லண்டன் மேயரின் அதிகாரத்தின் கீழ் வரும் லண்டன் அபிவிருத்தி முகவர் நிறுவனத்தின் இடம்பெற்ற சில அதிகார சீர்கேடுகள், லண்டன் நகர கட்டுமானத்தில் உள்ள குறைபாடுகள் என்பன கென் லிவிங்ஸ்ரனின் செல்வாக்கிலும் தளர்வை ஏற்படுத்தியுள்ளது. தான் பதவிக்கு வந்தால் தொடர்ந்து லண்டன் நகர பொது போக்குவரத்து சேவையை சீரமைப்பு செய்வதாகவும், வீட்டு வசதி, பாதுகாப்பு போன்ற விடயங்களில் அக்கறையுடன் செயற்படவிருப்பதாகவும் கென் உறுதிவழங்கி வருகிறார்.

ஒரு ஊடகவியலாளராக, நகைச்சுவை நடிகராக தனது வாழ்க்கையை ஆரம்பித்து அரசியலில் நுளைந்துள்ள கொன்சவேர்ட்டிவ் கட்சி வேட்பாளர் பொறிஸ் ஜோன்சன், கென் லிவிங்ஸ்ரனின் கொள்கைகளை விமர்சித்து களத்தில் இறங்கியுள்ளார். அவருக்கு வலதுசாரிகள், தொழிலதிபர்கள் போன்றவர்களின் ஆதரவுள்ளது. கென் லிவிங்ஸ்ரன் அறிமுகப்படுத்திய வாகன நெரிசலை கட்டுப்படுத்துவதற்காக அறவிடப்படும் வரி விடயத்தில் அதிகம் அக்கறை காட்டும் பொறிஸ் கட்டணக் குறைப்பு செய்வதாக உறுதியளித்துள்ளார்.

வலதுசாரி கருத்துடைய ஊடகங்கள், குறிப்பாக றொதர்மெயர் குடும்பத்தின் Daily Mail, Evening Standard போன்றவை பொறிஸ் ஜோன்சனை வெளிப்படையாக ஆதரித்து வருகின்றனர். இது தொடர்பில் பல கட்டுரைகளை Evening Standard பத்திரிகையில் எழுதி வரும் அண்று கிலிகன் என்பவர், அண்மையில் கென் லிவிங்ஸரனை பிரித்தானிய தமிழர் அமைப்பினர் சந்தித்ததை சுட்டிக்காட்டி லிவிங்ஸரன் பயங்கரவாதிகளுடன் உறவு வைத்திருப்பதாக குற்றஞ் சாட்டியுள்ளார். முன்னர் பிபிசியில் பணிபுரிந்த கிலிகன் ஈராக் விவகாரத்தில் டொக்ரர் கெலி பற்றிய பொய்யான செய்தியறிக்கையை வெளியிட்டதனால் பதவியிழந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

லண்டன் பேரவைக்கான தேர்தலில் ரதி அழகரத்தினம் என்ற தமிழ்ப் பெண் Mitcham and Morden வட்டகையில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிடுகிறார். கடந்த தேர்தலில் போட்டியிட்டு 186 வாக்குகளை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் பெருமளவில் வாழும் Brent and Harrow வட்டகையில் தொழிற்கட்சி சார்பில் முன்பு ஹறோ உள்ளூராட்சி சபைத்தலைவராக இருந்த நவீன் சா மற்றும் லிபரல் டிமொக்கிரட் சார்பில் பிறென்ற் உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஜேம்ஸ் அலி ஆகியோரும் போட்டியிடுகிறார்கள். இவ்விருவரும் தமிழ் மக்களுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். தமிழ் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்து வருபவர்கள். தமிழ் சமூகத்தினருக்கும் தனக்கு நீண்டகாலமாக தொடர்புள்ளதாகக் குறிப்பிடும் ஜேம்ஸ் அலி, தான் தெரிவு செய்யப்படுமிடத்தில் மாநகர காவல் துறையினர் மத்தியில் தமிழ் மக்கள் பற்றியுள்ள ஐயப்பாடுகளை போக்கும் நடவடிக்கையில் ஈடுபடவிருப்பதாக ஒரு பேப்பருக்கு வழங்கியுள்ள செவ்வியில் தெரிவித்திருக்கிறார்.

சட்டத்தரணியான ஜேம்ஸ் அலி தமிழ் மக்களுக்கு தமிழீழம் ஒன்றுதான் நிரந்தரத் தீர்வாக அமையும் என தான் நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

லண்டன் நகருக்கு சேவைபுரியக்கூடிய மேயரையும், உறுப்பினர்களையும் தெரிவு செய்வதோடு அவர்கள் தமிழ் சமூகத்திற்கும் உதவுபவர்களா என்பதையும் கவனத்தில் எடுத்து வாக்களியுங்கள்.



"God Bless All"

ஸ்ரீ ஆஞ்சநேய ஜோதிட நிலையம்

ஜோதிஸ் பண்டித் சுப்பிரமணிய சாஸ்திரி

342(A) High Street North, Manor Park, London E12 6PH.

Tel: 07943 154 425

(Note: All matters will be kept confidently)

Opening Hours; 8.00 am - 9.00pm - 7days

கைரேகை சாமுந்திரிகா இலக்கணம் சாதகம் பிறப்பியல் நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்த காலம் நிகழ்காலம் எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாக கணித்து வழங்குவார்.

கல்வி வேலை வியாபாரம் காதல் கணவன் மனைவி ஒற்றுமை திருமணப் பிரச்சனை தீர தொழில் முடக்கம் உத்தியோகத்து தடை நீங்க குழந்தை பாக்கியம் இல்லாமை தாம்பத்தியக் கோளாறு அதிஸ்டக் கற்கள் கோர்ட் பிரச்சனை உடல் நலக்குறைவு லாட்டரி அதிஸ்டம் பில்லி சூனியம் மந்திரம் செய்வினை ஜனவசிகம் செய்வினையால் பாதிப்படைந்தவர்களுக்கு பரிகாரம் வழங்கப்படும்.



அனைத்து விதமான தோசங்களுக்கும் லக்சுமி பூசை மூலம் பரிகாரம் வழங்கப்படும்.

திருமணப் பொருத்தம் குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.

பிறந்த குழந்தைகளுக்கு சாதகம் இலவசமாகக் கணித்துக் கொடுக்கப்படும்.

குழந்தைகளுக்கு பாலகிரக இயந்திரம் இலவசமாகத் தரப்படும்.

ஒருமுறை சந்தியுங்கள்.

SPOKEN LANGUAGES: TAMIL, HINDI, ENGLISH & OTHER LANGUAGES.

# Comments on views expressed by DBS Jeyaraj on the assination of his kinsman Jeyaraj Fernandopulle



**By Charles Somasundrum**

I happened on an article by D.B.S. Jeyaraj commenting on the assassination of his kinsman also known as Jeyaraj. I must confess that till such time as I read this article I was under the impression that the 'journalist' Jeyaraj was a Tamil from Jaffna who, like certain other Jaffna Tamils had 'burnt' their roots and cast their lot with the Sinhalas. I believe that this article by the journalist Jeyaraj to be the first occasion that, to my knowledge, that he has openly acknowledged his 'Chetty' origin.

This article of journalist Jeyaraj is more in the nature of a eulogy for his dead kinsman where, understandably, he praises the dead minister sparing no words in the process. We learn, and I quote extracts, that the 'The Parliamentarian was fearless about death'; was 'incredibly brave and praiseworthy'; 'He seemed to have made his peace with God then'; 'The quiet bravery of Jeyaraj(the minister)…';'His fearless criticism of the LTTE'; 'He spoke Sinhala, Tamil and English and was able to deliver excellent speeches in all three languages.'; 'clarity of conviction'; 'He was devastatingly critical of opponents in Parliament…';'… became close to the Rajapakse dynasty and defended its interests stoutly.'. He was also known by his journalist kinsman as the 'Rajapakse Rotwiler'.

This is amazing! There was this wonderful man in the Sri Lankan cabinet and had been in it for quite some time, but no one ever knew what an exceptional person he was!

The journalist Jeyaraj, attempts to function, in the article, as prosecuting counsel; judge; jury and hangman – all in one. He has unilaterally decided that his kinsman was assassinated by a 'Black Tiger' suicide assassin. Despite the fact, that the assassination took place in the heart of Sinhala country 19 miles from Colombo and amongst a crowd supportive of Jeyaraj (the minister). For one of a triumvirate of the three most powerful ministers close to the President, according to his kinsman, his security guards have failed miserably. It would appear that the security for this minister was transferred from the MSD (Ministerial Security Division) a specially trained security division to the STF (Special Task Force) at the request of the DIG (Deputy Inspector General (Police)) as recently as February of this year. I seem to remember that a UNP MP, Mr Maheswaran, was assassinated very recently, shortly after his personal security force was reduced to two from eight personnel. The journalist Jeyaraj has decided however, that his kinsman was assassinated by the LTTE.

There have been other high profile assassinations in the past where initial attempts were made by the government and security forces to blame the LTTE. There was the assassination of President Ranasinghe Premadasa; that of a presidential candidate Gamani Dissanayake; the Foreign Minister Kadirgamar; the assistant secretary of the government's Peace Secretariat Loganathan; MPs Ponampalam, Maheswaran; and many more. The assassinations of the Tamil individuals, with the exception of the Foreign Minister Kadirgamar, were all 'swept under the carpet' and nothing was heard of the assassins or the assassination. When in the past, the LTTE have been accused in government press releases and in the local media, without a shred of evidence, of being responsible for murders and assassinations, the news stories died a natural death in due course for want of evidence but - not before the 'seeds of doubt' had been sown in the public mind. This is exactly what the Sinhala government want. The government's case against the Tamil nation is based on falsehood and innuendo and incidents like this sad assassination, help them.

Going back to journalist Jeyaraj's article, he states at one stage , as follows 'Intelligence reports warned him (Minister Jeyaraj) that the LTTE were out to get him but Jeyaraj refused to curtail his movements'. This is a strange state of affairs. It would seem that the 'Intelligence Services' share their innermost secrets with every Tom, Dick and Harry! Or perhaps, the journalist Jeyaraj is, apart from being a journalist an undercover intelligence officer?

> There have been other high profile assassinations in the past where initial attempts were made by the government and security forces to blame the LTTE.

I am afraid that the journalist's story is full of holes. The journalist claims, without any justifying evidence, that the Chetty community in the island date from 'even before the advent of Vijaya'. This is certainly news not only to Tamils but to the journalist's Sinhala friends as well. He goes on to claim that the five historic Iswarams on the island namely, Muneeswaram; Koneswaram; Thiruketheswaram; Naguleswaram and Rameswaram (the five true Iswarams) were built by 'Chetty Saivites'. I think journalist Jeyerajah needs to re read his Sri Lankan/Eelam history. He also claims that a former President, J R Jayawardene, had Chetty ancestry. That is not so. Jayawardene's apical ancestor was a Muslim trader from South India who married a local woman bearing the name Jayawardene. The trader went back to India leaving behind his wife and a son the only offspring. The boy took his mother's name.

As for the origin of the Chetty community in the island, I would suggest that the journalist read an interesting book by A T S Paul on the 'Colombo Chetty Community'. Paul says 'The advent of the Colombo Chetty community from Nagapatnam India is well documented from 1663 A.D. during the reign of king Rajasingha II of Kandy and the governorship of the Dutch, Ryckloff Van Goens. With the arrival of the Westerners in search of the riches of the East, the Chettys of India used the opportunity to further their trade'.

Most of the Chetty place and street names date from no earlier than the late 18th and early 19th centuries. No doubt Jeyarajah Fernando Pulle was a brilliant student and a successful lawyer with a lucrative practice. It is sad that he died in such a tragic manner. The attempt of the journalist to place the blame on the Eelam Tamil freedom movement or on its revered leader is certainly without foundation. His attempt is very similar to his attempt to try to claim Chetty origin in Sri Lankan before Vijaya or claim Chetty credit for the five historic Iswarams.

I do not claim to know the inner workings of the freedom movement of the Eelam Tamils apart from what I obtain from my reading and occasional seminars or conferences. I am sure however, that the freedom movement would not have wasted a valuable 'Black Tiger' life on the late minister. The minister in question was not a Jaffna Tamil but a Colombo Chetty who had little in common with the indigenous Eelam Tamils. The Chetty community had, through a government favourable to them, had their ethnic group treated as different from Jaffna Tamils. The journalist himself says that after the 1981 Pogrom, the Chettys who were fearful of their future had approached the then President J R Jayawardene to have the Chetty community recognised as a separate ethnic group. To quote from the article 'They were recognised as a distinct ethnic group ratified by the Registrar General's Department, the notice of which was published in the Observer newspaper of the 17th October 1984 in the 'incomplete' 2001 census, the Colombo Chetties were classified independently.'

Sorry Mr Journalist Jeyaraj. You will need to look closer home to find the person or persons responsible for the death of your kinsman. While you are at it, you might also wish to look more carefully at the fact that Basil Rajapakse the brother of the President now fills your dead kinsman's place in cabinet. Apparently, this was a position he had craved after, for quite some time. All Eelam Tamils are sorry at the tragic death of your kinsman. I too wish to extend my deepest sympathy.


துர்க்கா பவானி ஜோதிடாலயம்



Ohm Durga Bhavani Jyothishyalayam
**Pandit Raju Guruji**

**Kumar Food & Wine**
150 Grangewood Street (Opp. Katherine Rd.)
London E6 1HD

பண்டிட் ராஜ் குருஜி

Tel: **07918 808 798**

இந்தியாவில் இருந்து முதன் முறை வருகை தந்துள்ள பண்டிட் ராஜூ குருஜி அவர்கள் கைரேகை மூலம் முகநாடி மூலம் துல்லியமாக நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை பற்றிய விபரங்களைக் கூறுவார்.

துல்லியமாகக் கணித்துப் பார்க்கப்படும் விடயங்கள் கணவன் மனைவி ஒற்றுமை, விசா பிரச்சினை, உடல் நலம், திருமண யோகம், வாஸ்து சாஸ்திரம், தொழில், வியாபாரம், லட்சுமீகர வீடயம், கண் திருஷ்டி, கோட் வழக்குகள், வாகனப் பொருத்தம்,

தமிழ், இந்தி, ஆங்கிலம், தெலுங்கு மொழிகளில் சாஸ்திரம் சொல்லப்படும். பிறந்த பிள்ளைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.

Reveals and resolves life's problems like love, job, money & health.

Know your Future with Divya Shakti. Make your Life Meaningful.



Just call

Mob: **07918 808 798**
**07508 181 213**

Spoken languages: Tamil, Telugu, Hindi, & English.

Opening Hours: **9.00 am-7.00pm**-7days

# SRI LANKA: Turning to China, Iran for Funds

By Feizal Samath
(INTER PRESS SERVICE)

Sri Lanka's government, under pressure over human rights violations, is abandoning support from traditional but rights-sensitive partners like the United States and Europe and turning to countries like China and Iran to finance its infrastructure projects.

Relations between the country's traditional partners and the government turned frosty in recent months as the U.S., the EU and international human rights groups raise concern over growing rights violations, including the harassment of journalists.

Recently World Bank officials were told by a senior functionary of the treasury: "We don't need your money (with all those strings)."

Foreign affairs analysts and economists say President Mahinda Rajapakse nationalist government is relying on 'outside' support because foreign aid in the form of grants and concessional loans comes with strings attached -- which the government does not want to accept.

Last year, the International Monetary Fund (IMF) pulled out of Sri Lanka and has no programmes in this country while the Bank recently completed a series of consultations with civil society groups, including farmers and journalists, seeking input for a new three-year country strategy. The real reason however, according to a civil society activist, was to "use us to put pressure on the government because the authorities don't listen to the World Bank any more".

Analysts like Nanda Godage, a retired diplomat and commentator, says there appears to be a 'clumsy' policy in relation to foreign affairs. "Normally the foreign ministry should have a (well researched) paper assessing relationships and the economic and political fallout (of sidelining countries like the U.S., the EU). This is missing... we need to diplomatically tackle institutions like the Bank and the IMF instead of being blunt with them."

Godage said Sri Lanka is better off not antagonising the Bank and the IMF which are controlled by them (the U.S. and the EU)," he said. "We are making enemies out of friends."

Sri Lanka's foreign minister Rohitha Bogollagama and his foreign secretary Palitha Kohona are known to be at loggerheads over various issues, while Rajapakse has also independently taken decisions on foreign policy.

Another sore point in foreign policy will come to the fore this week when Iranian President Mahmoud Ahmadinejad visits Sri Lanka on Apr. 28 on the first stop of his first ever Asia tour. When Rajapakse visited Iran last year, Washington voiced concerns.

'The Sunday Leader' newspaper said this week that Israel is unlikely to respond to a Sri Lankan request for arms sales because of this country's increasing ties with Iran. The paper said these concerns were communicated to Sri Lankan Prime Minister Ratnasiri Wickremanayake during a recent visit there.

Financial support from the U.S., the EU and the multilaterals has dwindled since Rajapakse won the presidential poll two years ago and ended a shaky ceasefire with Tamil rebels and ordered the troops to wipe out the rebels from their northern and eastern lairs. Security forces have been successful in the east where the rebels have retreated into the jungle and residents are facing a provincial poll next month.

But fierce fighting is on in the north amidst widespread allegations against the government of human rights abuses through abductions and harassment of the private media. The government denies all charges but is unable to dispute mounting evidence -- particularly on abductions.

Analysts say with western aid tied to governance, transparency and spending discipline, conditions the government has rejected, Rajapakse has been compelled to woo 'friendly' countries to help the many infrastructure projects like super highways, railways, ports and airports. China and Iran have come to the country's aid rescue with loans, albeit at commercial rates of interest.

China is funding a coal power plant and a harbour with more than 700 million US dollars, while negotiations are underway for another 450-million-dollar loan for two highways.

Iran, on the other hand, is granting 450 million dollars for a hydropower project and investing one billion dollars in an oil refinery. It recently provided a seven-month credit facility so that Sri Lanka's entire crude oil requirement could be sourced from there.

All this is in addition to other support these two countries have been providing to Sri Lanka. Rajapakse has visited China twice in the past two years, the latest being two weeks ago. He is yet to pay official visits to the U.S. or to any of its European allies.

Jehan Perera, director of the National Peace Council and a newspaper commentator on the peace process, says that countries like Sri Lanka need to maintain good relations with larger and more influential countries. "Shutting out one section of the international community is not helpful especially when that section has had long standing relations with us," he said.

Most analysts agree that the current government's foreign policy may, in the short term, find solutions to immediate needs but is disastrous in the long term. Sirimal Abeyeratne, an economist at the University of Colombo, says spending discipline (conditions on loans) is necessary for countries like Sri Lanka where spending is wayward and used for projects other than the intended purpose.

Ravi Karunanayake, a former trade minister and now frontline opposition politician, believes the country is falling ever deeper into debt as the government resorts to costly commercial borrowings as against soft loans and grant aid. "We'll be paying through our noses for generations to settle this debt," he said.

# Targeted Killing of Rev. M.X.Karunaratnam is a War Crime

ITF

The International Federation of Tamils, along with other Tamil diaspora organizations, condemns the targeted killing of Rev. Father M X Karunaratnam, by the Sri Lanka Armed Forces on 20 April 2008. The assassination was carried out by the Deep Penetration Unit (DPU) of the Sri Lankan Armed Forces (SLAF) inside the Vanni region.

This is the second high profile Tamil civilian assassination by Sri Lanka Armed Forces after Sri Lanka unilaterally abrogated the Norwegian sponsored ceasefire on 8 January this year. On 6 March 2008, the Tamil parliamentarian, Mr.K.Sivanesan, was assassinated by the Sri Lankan Armed Forces.

Rev. Father M X Karunaratnam was the chairman of the NorthEast Secretariat on Human Rights (NESoHR), and a prominent social and human rights activist. In the years of the economic embargo and the genocidal war against the Tamil people in the 1990s and subsequent years, Rev. Father Karunaratnam lived and worked amongst the affected population. He led the consortium of NGOs engaged in humanitarian work in the Vanni region.

The NorthEast Secretariat of Human Rights (NESoHR) which Rev. Father Karunaratnam led is one of the landmark initiatives of the period of the Norwegian-backed peace process. NESoHR was constituted on 9 July 2004 and functioned as an independent human rights institution. Under the able leadership of Rev. Father Karunaratnam, NESoHR released a number of well researched reports on the human rights situation in the NorthEast of the island. Rev. Father Karunaratnam visited many Western governments and impressed upon them the urgent need to address the humanitarian crisis in the NorthEast caused by Sri Lanka's genocidal war on the Tamil people.

The targeted killing of Rev. Father Karunaratnam by Sri Lanka is a war crime. It is the latest in a series of targeted assassinations by Sri Lanka which include the killing of Tamil Parliamentarians such as Joseph Pararajasingham, Chandra Nehru, Raviraj, and K.Sivanesan. The assassinations reveal system, method and planning. And the absolute impunity afforded to the perpetrators proves the culpability of those in the highest echelons of power in the Sri Lankan state for the crimes committed by those under their command.

Here, we observe that the international community was quick to label the LTTE as a terrorist organisation although the LTTE is engaged in what many regard as a lawful and just armed struggle to free the people of Tamil Eelam from decades of oppressive alien Sri Lankan rule. But, we observe that the same international community has refrained from intervening to prevent the systematic slaughter of Tamil political, social, religious leaders, by the Sri Lanka Armed Forces although the international community had the power to do so by imposing punitive sanctions on the Sri Lankan state.

It should not surprise the international community if the Tamil people regard its attitude as one that amounts to incitement to crime or, at best, criminal negligence, and must be judged as severely as the crimes actively committed by the Sri Lankan Armed Forces and its Commander in Chief. Neither should it surprise the international community if the Tamil people are compelled to conclude that Tamil lives are being sacrificed in the altar of the strategic interests of the international community in the Indian Ocean region.

The International Federation of Tamils and the Tamil diaspora salute Rev.Fr.Karunaratnam and honour the selfless services that he rendered to the people of Tamil Eelam in the face of many obstacles and hardships. We share the pain of his loss and together with NESoHR and the people of Tamil Eelam we re-dedicate ourselves to the cause for which he gave his life



ஸ்ரீ கணபதி ஜோதிட நிலையம்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட நட்சத்திரம் **அர்ஜுனா ராஜு குருஜி ஜெங்கம்மா**

கைரேகை, சாமுத்திரிகா இலக்கணம், சாதகம், பிறப்பியல், நாம நட்சத்திரம் ஆகியவற்றைக் கொண்டு உங்களின் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகியவற்றை மிகவும் துல்லியமாகக் கணித்து வழங்குவார். இவரை ஒரு முறை சந்தித்துப் பாருங்கள். பெயர் வசிகம், தொழில் வசிகம், கையெழுத்து வசிகம், காதல் வசிகம், கணவன் மனைவி பிரச்சனை தீர, திருமணப் பிரச்சினை தீர, தொழில் முடக்கம், வியாபார வசிகம், உத்தியோகத்து தடை நீங்க, குழந்தை பாக்கியம் இல்லாமை, தாம்பத்தியக் கோளாறு, அனைத்து விதமான தோசங்களுக்கும் பரிகாரம் வழங்கப்படும். ஆயுர் வேத மருந்துகள் சகல விதமான வியாதிகளுக்கும் நாடி பார்த்து மருந்து தரப்படும்.




07951 631 883 / 020 8470 5209

1st Floor, Sai Hair Dressers, 345 A High Street North, Manor Park, London E12 Open Seven days a Week

# வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயம்

# Walthamstow 'Katpahaga Vinagar' Ahalayam

**2-4 Bedford Road, Walthamstow, London. E17 4PX, Tel: 020 8527 3819**

## காயத்ரி மந்திரம்

ஓம்

பூர் புவ ஸுவ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோன ப்ரசோதயாத்
ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி

யார் நம் அறிவைத் தூண்டுகிறாரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலான ஒளியைத் தியானிப்போமாக.

ஓம் – ஓம், பூ – பூலோகம், புவ – புவர்லோகம், ஸுவ – ஸுவர் லோகம், ய – யார், ந – நம்முடைய,

திய – அறிவை,

ப்ரசோதயாத் – தூண்டுகிறாரோ, தத் – அந்த, தேவஸ்ய – சுடருடைய, ஸவிது – கடவுளின், வரேண்யம் – மேலான, பர்க – ஒளியை, தீமஹீ – தியானிப்போமாக.

## காயத்ரி மந்திர மகிமை

வேதங்களின் தாயாகப் போற்றப்படுவது காயத்ரி மந்திரமாகும். காயத்ரி மந்திரத்தின் இதயமாகப் போற்றுப்படுவது பிரணவ மந்திரமாகும்.

இம்மந்திரம் புனிதமானவர்களால் தூய்மையான இடத்தி லிருந்து ஜபம் பண்ணும் போது உலகில் உள்ள எல்லா ஜீவன்களும் நன்மை அடைகின்றன.

மனித வாழ்விற்கு மிகவும் அவசியமானது பிராண சக்தியும், புத்திசக்தியும், ஆகும். பிராணசக்தியை பிரணவமும், புத்திசக்தியை காயத்ரி மந்திரமும் எமக்கு அளிக்கிறது. பிராணசக்தி என்பது ஜீவ ஆதாரமானது. இது எல்லா உயிர்க்கும் பொதுவானது. ஆனால் புத்தி சக்தி மனிதனுக்கு சிறப்பாக அமைய வேண்டியது. இதுவே ஆறாவது அறிவின் இடத்தைப் பிடிப்பது.

இப்புத்தி சக்தியை எமக்கு அளிக்க வல்ல வடிவமே காயத்ரி வடிவமாகும். இது வேதமந்திர காயத்ரி என்பதால் இதற்கு பிரம்ம காயத்ரி எனவும் பெயர் வழங்கப்படுகிறது.

ஒருவருக்கு எட்டெழுத்துக்கள் மூலம் மூன்று வரிகளில் இருபத்துநான்கு எழுத்துக்கள் கொண்ட அமைப்பிற்கு ~~காயத்ரி~~ என்ற பெயர் வழங்கப்படுகிறது. அத்துடன் மொத்தமாக பத்துச்சொற்கள் காயத்ரி மந்திரத்தால் இடம் பெறும்.

காயத்ரி மந்திரமானது எல்லாத் தெய்வங்களுக்கும் உண்டு. விநாயகர் முதல் சகல தெய்வங்களுக்குமான காயத்ரி மந்திரங்களை மகாநாரயண உபநிஃத் எடுத்துக் கூறுகிறது. எந்தக் காயத்ரியாக இருந்தாலும் காணப்படும் பொது விதியாவது 24 எழுத்துக்களும் இருக்க வேண்டும்.

ஒவ்வொரு காயத்ரி மந்திரத்திலும் அந்த தெய்வங்களின் பெயர் மூன்று முறை வரும். ஆத்மாவை பற்றி ஒரு இடம் வரும் ஆத்மாவையும் இறைசக்தியையும் இணைக்கும் தொடர்பு மூன்று முறைவரும்.

எனவே இது ஒரு வகையில் ஜீவாத்மா – பரமாத்மா ஐக்கியத்தைக் குறிப்பதாகவும் உள்ளது.

இறைசக்தியின் இது ஒளிவடிமானது ~தத்~ என்ற சொல்லால் குறிப்பிடப்படுகிறது. இது பரமாத்மா ஆகும். தத் என்னும் சொல் எல்லாக் காயத்ரியிலும் வரும் இது ஜீவாத்மா ஆகும். ப்ரசோதயாத் என்பது பரமாத்மாவையும் ஜீவாத்மாவையும் இணைக்கும் சொல்லாகப் பயண்படுத்தப்படுகிறது. இவை எல்லாக் காயத்ரியிலும் இருக்கும் பொது அம்சமாகும்.

பிரம்ம காயத்ரி எமது புத்தி சக்தியை தூண்டி நல்ல நல்ல ஞானம் பெற வழிவகுக்கிறது. ஏனைய காயத்ரி மந்திரங்கள் அந்த அந்த தெய்வங்களைக் குறிப்பிட, பிரம்ம காயத்ரி மந்திரமானது ஒளிக்கடவுள் ஊடாகப் புத்தி சக்தியைத் தூண்டும் காயத்ரி தேவிக்கு நேரடியாகக் கூறப்படுகிறது.

வரேண்யம் என்பது சிறந்த அப்பரம்பொருளை புகழ்தல் என்ற கருத்தைத் தருகிறது. அடுத்ததாகக் குறிப்பிடப்படும் பர்கோ, தேவஸ்ய என்னும் இரு சொற்களும் ஒளிரும் தெய்வ சக்திகளைக் குறிக்கப் பயனபடுத்தப்பட்டுள்ளன. எனவே காயத்ரி மந்திரத்தில் ஒளிரும் சக்தியை மூன்று முறை குறிக்கும் முகமாக. சவிது, பர்க: தேவஸ்ய என்ற மூன்று சொற்களும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தீமஹீ என்னும் சொல் தியானிப்போமாக என்று எமது ஆத்மாவை இறைசக்தியிடம் இணைக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்படுகிறது.

திய : புத்தி சக்திகளை

ய : எந்தத் தெய்வம் ( அளிக்கிறதோ ) அந்தத் தெய்வம்

ந : எங்களுக்கு

ப்ரசோதயாத்: தூண்டட்டும் ( அறிவுச் சக்தியை ) தொகுத்துப் பார்க்கும் போது எநதத் தெய்வ சக்தி எமது அறிவைத் தூண்டுகிறதோ அந்த ஒளிச்க்தியை ( இடைவிடாது ) தியானிப்போமாக.

இதுவே காயத்ரி மந்திரத்தின் பொருளாகும். எமது புத்தி விருத்தியானால் எக்காரியமும் சித்தியாகும் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது.

எனவே காயத்ரி மந்திரமானது எமக்கு ஞானவிருத்தியையும் ஆயுள் விருத்தியையும் தருகின்றது.

சூரியனானவன் இருளை அகற்றி ஒளியைத் தருவது போல் காயத்ரி மந்திரமானது மன இருளை அகற்றி ஞான ஒளியைத் தருகின்றது.

"இருளில் இருந்து ஒளிக்கு என்னைக் கொண்டு போவாயாக" என்னும் உபநிடத வாக்கியத்திற்கு ஒப்ப காயத்ரி மந்திரம் மஹிமை பெற்றுள்ளது.

மீண்டும் மீண்டும் ஜபிப்பவளைக் காப்பாற்றும் வல்லமையும் இக்காயத்ரி மந்திரத்திற்கு உண்டு.

காயத்ரி மந்திரத்தை ஜபிப்பதால் ஆரோக்யம், நீண்ட ஆயுள், மேன்மை, கல்வி, நல்லறிவு வெற்றி என்பன வந்தடையும்.

இம் மந்திரத்தை தூய்மையான முறையில் தூய்மையான இடத்தில் ஜபிப்பதே சிறந்த பலனை நல்கும்.

இம்மந்திரத்தை ஞாயிற்றுக் கிழமையில் ஜபம் செய்வது சிறப்பானதாகும்.

ஓம்

பூர் புவ ஸுவ
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோன ப்ரசோதயாத்

இதில் ஓம் என்பது பிரணவ மந்திரம். இது வேதத்திற்கு இதயம் போன்றதாகும். அதனால் வேதம் ஓதுவதற்கு முதல் இப்பிரணவம் ஓதப்படுகிறது. இப்பிரணவமானது எங்கும். வியாபித்திருக்கும் ஆகாயத்தின் சின்னமாகப் போற்றப்படுகிறது. எனவே பிரணவமானது எல்லாவற்றையும் தன்னுள் அடக்கி அனைத்துப் பொருட்களிலும் வியாபித்து நன்மையைத் தரவல்லது. அத்துடன் ஆகயாத்தின் குணம் (சப்தம்) ஒலி வடிவம். அவ் ஒலி வடிவமாகவே மந்திரங்கள் பலனைத் தரவல்லன என்பதை விளக்கவும் வேத ஒலிகளின் முன் பிரணவம் ஓதப்படுகிறது.

அடுத்து வரும் மூன்று சொற்கள் பூர் புவ: சுவ: என்பதாகும். இவை முறையே அக்கினி, வாயு, சூரியன் ஆகிய தெய்வங்களுக்கு உரியனவாகப் போற்றப்படுகின்றன. பரிதி, அக்னி, புவ இதி வாயு, சுவ இதி ஆதித்ய|| என உபநிடதம் சொல்கிறது.

அக்கினி நிலவுலகத் தெய்வமாகவும் வாயு என்பது மண்ணுலகுக்கும், விண்ணுலகுக்கும் இடைப்பட்ட அந்திரிஷி உலகத்துக்குரிய தெய்வமாகவும், சூரியன் விண்ணுலகத்துக்குரிய தெய்வமாகவும் வேதத்தில் போற்றப்படுகிறது.

ஆகவே எல்லா உலகங்களிலும் உள்ள தெய்வ சக்திகளைப் போற்றும் முகமாக இம்மூன்று மந்திரங்களும் காயத்ரி மந்திர ஜபத்தின் முன் ஓதப்படுகிறது.

அக்கினி எம்மை தூய்மைப்படுத்துவதற்காகவும், வாயு எமது பிராணசக்தியை அதிகரிப்பதற்காகவும் சூரியன் எமது புத்தி சக்தியை வலுவடையச் செய்வதற்காகவும் இம்மூன்று மந்திரங்களும் கயாத்ரி மந்திர ஜபத்தின் முன் ஓதப்படுகிறது.

இப்புத்தி சக்தியை எமக்கு வழங்கும் ஒளிவடிவமான சூரியனைக் குறித்தே பிரம்ம காயத்ரி ஜெபம் செய்யப்படுகிறது.

"தத்| என்ற சொல் காயத்ரி மந்திரத்தின் முதற் சொல்லாகும். இது ஒளிவடிவமான தெய்வ சக்தியைக் குறிப்பதாகும். இச்சொல் எல்லா கயாத்ரியிலும் இடம் பெறும். அடுத்து "சவிது| என்பது எம்மைத் தூண்டும் தெய்மாக, உயிர் வாழவைக்கும் தெய்வமாகப் போற்றப்படுகிறது. இது சிறப்பாகப் பரம்பொருளைக் குறித்தலும் குறிப்பாக கண் கண்ட தெய்மான சூரியனைச் சுட்டுகிறது.

**காயத்திரி யாக வழிபாடு**

**ஞாயிற்றுக்கிழமைகளில்**



**27 ஏப்ரல் 2008**

**18 மே 2008**

**8 யூன் 2008**

**காலை 10 மணிக்கு விசேட அபிசேகத்தைத் தொடர்ந்து விசேட பூசை 108 காயத்திரி ஜப சமர்ப்பணம், திருவீதியுலா.**

**மங்கள நிகழ்ச்சிகளுக்கு மேளம் நாதஸ்வரம் ஏற்பாடு செய்து தரப்படும்**

# சர்வதேச பரப்புரையில் வைகோவும் விதாரணவும்





**இதயச்சந்திரன்**
*(ஒரு பேப்பருக்காக )*

ஆளும் கட்சிப் பிரதிநிதிகளை, சர்வ கட்சிக் கூட்டமாகச் சித்தரிக்கும் மரபு, சிறீலங்கா ஜன நாயகத்திற்கு கைவந்த கலை. அதை ஏற்றுக் கொள்வதே, உலக ஜனநாயகவாதிக ளின் கடமையாகின்றது. இக் கூட்டத்தின் தலைவர்தான், மெத்தப்படித்த அறிவுஜீவியான பேராசிரியர் திஸ்ஸவிதாரன.

60களில் தோசை, மசாலாவடை விற்று இன வாதம் பேசிய, லங்கா சமசமாஜ கட்சியின் தற்போதைய காப்பாளரே இவர். பொதுவுடமை சித்தாந்தம்பேசும் கட்சியென்கிற வியாக்கியான விளக்கங்களும் அதற்குண்டு. இவர் கைகளில் மகிந்த திணித்த இருபக்க 13வது திருத்தச் சட்டத்தை, தீர்வாக முன்வைத்தவர், இப்போது புதிய கதைகளைக் கூறத் தொடங்கியுள்ளார்.

தேசத்தின் குரலோடு பல சுற்றுப் பேச்சுவார்த் தைகளில் கலந்து கொண்ட தத்துவக் கோட் பாட்டுக் கோமான் ஜீ.எல். பீரிசிற்கு அடுத்ததாக, சிங்களத்தால் களமிறக்கப்பட்டவரே இந்த சர்வ கட்சித் தலைவர்.

தான் வைக்கும் தீர்வுத் திட்டங்களை மகிந்தர் எற்றுக்கொள்ள மறுப்பதால், அவருடைய இராணுவ நகர்வுகளோடு ஒத்துப் போவதே தனது இருப்பினைத் தக்கவைக்குமென விதாரண விரும்புகிறார். அண்மையில் இலண் டனிலுள்ள வானொலிக்கு இவர் அளித்த நேர்காணலில், விடுதலைப் புலிகளுக்கு எதிரான மகிந்தரின் இராணுவ நடவடிக் கைகளுக்கு நியாயம் கற்பித்தார்.

இராணுவ வழித் தீர்வினை அரசு முன்னெ டுக்கும் பொழுது, சர்வகட்சிக் கூட்டங்களின் தீர்வுத் திட்டங்கள் தேவையற்றதொன்றென விதாரணவும் புரிந்து கொள்கிறார் போல் தெரிகிறது. ஆனாலும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றவே இவ்வகையான தீர்வு நாடகங்கள் அரங்கேற்றப்படுவதனை கடந்த காலங்கள் பதிவாக்கியுள்ளன. நிரந்தர தீர்வு பற்றிப் பேசுபவர், இராணுவ நடவடிக்கைகளை நியா யப்படுத்துவது, சிங்கள புத்திமான்களின் இன வாத ஆளுமையையே வெளிப்படுத்துகிறது.

---

**இரட்டை வேடமும், பிளவுபட்ட ஆளுமையும் கொண்ட சிங்கள தேசத்தின் பேரினவாதக் கருத்தியல், மாறா நிலை கொண்ட மகாவம்ச கருத்துவருவமென்பதை, தமிழ்மக்கள் புரிந்து கொண்ட அளவிற்கு, சர்வதேசம் புரிந்து கொள்ளவில்லையென்பதே சோகமானது.**

---

இரட்டை வேடமும், பிளவுபட்ட ஆளுமையும் (SPLIT PERSONALITY) கொண்ட சிங்கள தேசத்தின் பேரினவாதக் கருத்தியல், மாறா நிலை கொண்ட மகாவம்ச கருத்துவருவமென்பதை, தமிழ்மக்கள் புரிந்து கொண்ட அளவிற்கு, சர்வதேசம் புரிந்து கொள்ளவில்லையென்பதே சோகமானது.

புரியாததுபோல் நடித்து, தமது பிராந்திய நலனை முன்னிலைப் படுத்துவதே வல்லர சாளர்களின் கோட்பாடு ஆகிறது. சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இனிச் சந்தர்ப்பமே கிடையாதென்பதை, அவர்கள் ஏற்கனவே அனுமானித்துவிட்டார்கள்.

பீரிஸ், விதாரண வரிசையில் தற்போது, தயான் ஜெயதிலக என்கிற முன்னாள் மாக்சிசவாதியும் இணைந்துள்ளார். இந்நபர், ஜெனீவாவிலிருந்து விடும் அதிரடி அறிக்கை களால் மேற்குலகம் அதிர்ந்துள்ளது.

---

**90வீதமான தீர்வுத் திட்டம் வரையப்பட்டுவிட்டதாம். மீதமுள்ள 10வீதத்தினை நிறைவு செய்யவே, வெளிநாட்டுப் பயணம் மேற் கொண்டு, அந்நாடுகளிலுள்ள அரசியலமைப்பு வடிவங்களை ஆராயப் போவதாக நீளமான கயிறொன்றும் விடப்பட்டுள்ளது.**

---

பிடல் காஸ்ரோவின் வாரிசாகத் தன்னை உருவகப்படுத்தும் இவர் ஈழப்பிரகடனம் செய்த வரதராஜப்பெருமாளின் அரச சபையில் மந்திரிப்பதவி வகித்தது பலருக்குத் தெரியாது. உலகில் பரவலாகப் பேசப்படும் முன்னணித் தத்துவங்கள் இரண்டை, அலசி ஆராய்ந்து, கலாநிதிப் பட்டம் பெற்றவுடன் அரியாசனக கனவுகளும், தாம் சொல்வதை எல்லோரும் கேட்க வேண்டுமென்கிற முனைப்பும் இவர்களிடம் தொற்றிக் கொள்கிறது.

எம்மிடையே உலாவரும், உலகறிந்த பிரம்மாக்கள் பலர், இவ்வகையான மனோ வியாதிகளால் பீடிக்கப்பட்டு, பரதக்கலையை தாசிகுலமே உருவாக்கியதாக, தமது புதிய கண்டு பிடிப்புக்களை உதிர்த்துவிடுகின்றனர்.

சமூக மாற்ற வரலாற்றியலில், இடையில் வந்த மன்னராட்சிக்கால தாசிகுல அமைப் பிற்கு முன்பாகவே பரதக்கலை நிலை பெற்றிருந்ததை இப்புத்திஜீவிகள் தெரிந்து கொள்ளவில்லை. இதேபோன்று, மேற்குலகின் ஏகாதிபத்திய நிலைப்பாடுகளை விமர்சித்து, சிங்களப் பேரினவாதத்தின் இன அழிப்புக் கொடூரங்களை மூடி மறைத்திட, தயான் ஜெயதிலக போடும் இரட்டை வேடங்களால் மகிந்தரே அதிர்ச்சியடைந்துள்ளார்.

சர்வதேசம் குறித்த காட்டமான விமர்சன ங்கள் யாவும், கொழும்பிலிருந்தே இனி வெளிவர வேண்டுமென எச்சரித்து, ஜெனீவா முனிவரின் வாயை அடைத்துள்ளார் மகிந்தர். இந்த முனிவரின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போதனைகளால் சினங்கொண்ட மேற்குலகின் எதிர்ப்பினைத் தணிக்க, தீர்வுத் திட்ட வரைகலைக் கலைஞர் திஸ்ஸ விதாரணவை ஐரோப்பாவிற்கு அனுப்பியுள்ளது அரசு.

ஒற்றையாட்சியும் சமஷ்டியும் இணைந்த, புதிய தத்துவமொன்றைத்தான் முன் வைக்கப் போவதாக மேற்குலகின் காதுகளில் பூச்செருக முற்படுகிறார் விதாரண. 90வீதமான தீர்வுத் திட்டம் வரையப்பட்டுவிட்டதாம். மீதமுள்ள 10வீதத்தினை நிறைவு செய்யவே, வெளிநாட்டுப் பயணம் மேற் கொண்டு, அந்நாடுகளிலுள்ள அரசியலமைப்பு வடிவங் களை ஆராயப் போவதாக நீளமான கயிறொ ன்றும் விடப்பட்டுள்ளது.

சரத்பொன்சேக்காவின் புலி அழிப்புக் காலக்கேடு போன்று, விதாரணவின் தீர்வுத்திட்ட ஒப்படைப்புத் திகதியும் நீண்டு செல்கிறது.

ஐரோப்பாவிற்கான ஆடை ஏற்றுமதி ஒப்பந்த தினம் வரும்வரை விதாரணகளின் மேற்குலக வலங்கள் தொடர்ச்சியாக நடைபெறும். அதா வது சீனாவிடமிருந்து முழுமையான அங்கீ காரமும், பாதுகாப்பும் பெறப்படும் வரை இந்தியாவையும் மேற்குலகையும் அரவ ணைத்துச் செல்லும் இராஜதந்திர உத்தி யையே மகிந்தர் முன்னெடுத்துச் செல்வார். ஆயினும் மகிந்தரின் சர்வதேசப் பரப்புரை க்கு எதிராகக் களமிறங்கியுள்ள வைகோவின் அதிரடி நகர்வுகளால் சிங்களம் கலக்க மடைந்துள்ளது.

நோர்வே மாநாட்டுக்குச் சென்ற வைகோ அவர்கள், ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூனைச் சந்திக்க நியுயோர்க் செல்கிறார். தூங்கிக் கிடந்த சிறீலங்காத் தூதரகங்கள் தற்போது செயற்படத் தொடங்கியுள்ளன.

---

**தாயக உணர்வாளர்கள் நடாத்தும் மாநாடுகளை, ஒன்று கூடல்களைத் தடுத்து நிறுத்த இத்தனை காலமும் ஒடித்திரிந்த தூதரக முனிவர்கள், தனிநபர்களின் வருகையையும் இடைமறிக்க படாதபாடு படுகிறார்கள்.**

---

தாயக உணர்வாளர்கள் நடாத்தும் மாநாடு களை, ஒன்று கூடல்களைத் தடுத்து நிறுத்த இத்தனை காலமும் ஓடித்திரிந்த தூதரக முனிவர்கள், தனிநபர்களின் வருகையையும் இடைமறிக்க படாதபாடு படுகிறார்கள்.

இவர்களுக்கு உறுதுணையாக, சில தாயக எதிர்ப்புத் தீவிரவாதிகள் சிறீலங்கா தூதரங்களில் முகாமிட்டு, சிங்களத்தை வழிநடாத்திச் செல்வதாகவும் அரசியல் அவதானிகள் கூறுகிறார்கள்.

ம.தி.மு.க. செயலாளர் வை. கோபால்சாமி அவர்கள், தீவிர விடுதலைப் புலி ஆதரவாளர் என்பதைப் புரிந்தும், நோர்வே மாநாட்டில் அவர் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்ட நிகழ்வு, மறுதலையையும் சர்வதேசப் பார்வை குறித்த கலக்கத்தை அரசிற்கு உருவாக்கி யுள்ளது.

களத்தில் உருவாகும் படைவலுச் சமநிலை போன்று சர்வதேசப் பரப்புரையிலும், இருதரப்புச் சமநிலை தோற்றமுறுவது போல் தெரிகிறது. இந்நிலையைப் பேணுவதும், அதனையும் தாண்டி மேலெழுந்து செல்வதும் புலம் பெயர் தமிழ் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.




INSIGHT SYSTEMS

பிரஜாவுரிமை பெறுவதற்குரிய LIFE IN THE UK பாட வகுப்புக்கள் மிகக் குறைந்த கட்டணத்தில் நடத்தப்படுகின்றன. கிழக்கு லண்டன் பகுதியில் இதுவரை கற்பித்த மாணவர்களில் 98%ற்கு மேலானவர்களை தேர்ச்சியடைய வைத்துள்ள பெருமைக்குரிய அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் இலகுமுறையில் கற்கை நெறி. குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை. தமிழில் உதவிக் குறிப்புக்கள். ஒவ்வொரு வகுப்பு முடிவினிலும் அத்தியாய முடிவினிலும் பயிற்சிப் பரீட்சைகள். வெகு விரைவில் கம்பியூட்டர் வகுப்புக்களும் ஆங்கில வகுப்புக்களும் ஆரம்பமாகவுள்ளன.

தொடர்புகளுக்கு: 07908 866 300

# சித்திரைத் திருநாள்

பாகம் 48

சித்திரைப் பிறப்பு முடிந்து விட்டது. ஆயினும் வாசகர்களுக்கு முதற் கண் என் சித்திரை நாள் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். சித்திரையில் புத்தாண்டு தொடங்குகின்றது என்பதுவே தமிழ் இந்துக்களினதும் சிங்கள பௌத்தர்களினதும் கொள்கையாக இருந்திருக்கின்றது. ஆனாலும் தமிழர்களுக்கான திருநாளாக 'உழவர் திருநாளான தை முதல் தேதியையே நாம் கொண்டாடி வந்திருக்கிறோம்.

கிட்டத்தட்ட அறுபது வருடங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் தைப்பொங்கல் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்தியா சுதந்திரமடைந்ததும் வடநாட்டவர்களின் கொண்டாட்டமான தீபாவளி முக்கிய இடத்தைப் பிடித்து விட்டது. பத்திரிகைகளும் தீபாவளி மலர்களை வெளியிட்டன. பட்டாசு கொழுத்தி தீபாவளி கொண்டாடும் வழக்கம் பிரபலமாகிவிட்டது. ஆனாலும் தமிழர்களின் கொண்டாடம் தைப்பொங்கலே தீபாவளியல்ல என்று வெஸ்ட லண்டன் பீப்பிள் (மார்ச் 2005) சஞ்சிகைக்கான பேட்டியில் நான் கூறியதைச் சில நண்பர்கள் விமர்சித்தார்கள். இப்போது சித்திரை தமிழர்களின் புதுவருடப் பிறப்பல்ல தை முதல் நாள்தான் புது வருடம் ஆரம்பிக்கின்றது என்னும் இன்னொரு விவாதம் சூடு பிடித்திருக்கின்றது. தமிழக அரசும் இதை ஊர்ஜிதம் செய்து சட்டமியற்றிவிட்டது.

ஈழத்தமிழர்கள் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் சித்திரைப் பிறப்பை ஒரு சமய நாளாகக் கொண்டாடுவதில்லை. அன்று காலை கோயில்களில் கோசல கோமயங்கள் கலந்து காய்ச்சப்படும் மருத்து நீரைப் பெற்று அதனை அவ்வருட பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்ட இலைகளின்மேல் நின்று தலையில் வீட்டுப் பெரியவர்களின் உதவியுடன் தப்பிக் கொள்வார்கள். பின்னர் முழுகிப் புத்தாடையுடுத்து கோயிலுக்குச் சென்று வந்ததோடு அன்றைய நாளின் அனுட்டானம் முடிவடைந்து விடும். அதன்பிறகு தேடுவது நல்ல கறிவகைகளைத்தான். சித்திரைத் திருநாளில் ஆடடிப்பதும் மதுப் பாவனையும் தொடங்கி விடும். சித்திரையில் வீட்டிலுள்ள அனைவருக்கும் பெரியவர்களால் கைவிசேடமும் கொடுக்கப்படும். காலங்காலமாக இந்த வழக்கமே எங்கள் ஊர்களில் பின்பற்றப்படுகின்றது.

## அலசுவாரம்

அலசுபவர்: **மட்டைக்கிளப்பான்**

சித்திரைக்குப் புக்கை பொங்கும் வழக்கமும் முன்பு இருந்ததில்லை இப்போது சிலர் வினோதமாகப் பொங்குகின்றார்கள் என அறிகிறேன். முறுக்கு, அதிரசம் (அரியதரம்), பயத்தம் பணியாரம், எள்ளுப் பணியாரம், தொதள் போன்ற எமது பாரம்பரிய பணிகார வகைகளைச் செய்து சித்திரைப் பிறப்பிற்காக உறவினர்கள்வீடுகளுக்கு வரும்போது வழங்கி உபசரிப்பார்கள். தம் உறவினர் வீடுகளுக்கு ஒரு வருடத்திற்கு ஒருதடவையாவது போய் வருவது இந்த மாதத்தில்தான். மாறாகத் தைப்பொங்கலின்போது முழுகிப் புத்தாடை அணிந்து விடியற்காலையில் சூரியனுக்குப் பொங்கற் படையலிட்டு அன்று முழுவதும் மரக்கறியுணவு உண்டு அடுத்த நாளும் மாடு வைத்திருப்போர் மாட்டுப்பொங்கல் செய்வார்கள். ஆக தமிழர்கள் இந்து சமய ஆசாரத்துடன் கொண்டாடும் விழாவாக தைப்பொங்கலே இருந்திருக்கின்றது. சித்திரைப் பிறப்பு ஓர் கேளிக்கை விழாவாகவே கொண்டாடப்பட்டுள்ளது.

சித்திரை மாதத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுவது வழக்கம். அதில் எமது பாரம்பரிய விளையாட்டுகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தாச்சிமறித்தல், தலையணைச் சண்டை, சொக்கப் பானையுடைத்தல், வழுக்கு மரமேறுதல், கயிறிழுத்தல், மல்யுத்தம் போன்றன அவற்றிற் சிலவாகும். தாச்சி மறித்தல் என்பது தமிழ்நாட்டில் ஆடப்படும் சடுகுடு போன்ற விளையாட்டாகும். தலையணைச் சண்டை அனேகர் அறிந்தது. இரண்டு கம்பங்களுக்குக் குறுக்காக் கட்டப்பட்ட தடியொன்றில் இருந்துகொண்டு தலையணையால் அடித்து ஒருவரையொருவர் வீழத்த முனைவது.

சொக்கப் பானையுடைத்தலென்பது இரு கம்பங்களின் குறுக்ககக் கட்டப்பட்ட தடியொன்றில் பலவேறு நிறத்தில் நீர் கொண்ட பானைகளையும், காசு, இனிப்பு, பலகார வகைகள், மற்றும் பல பரிசுப் பொருள்களைக் கொண்ட பானைகளையும் கட்டித் தூக்கி அதனை கண்ணைக் கட்டியபடி சென்று அடித்து உடைத்தலாகும். யார் எதனை உடைக்கிறாரோ அவருக்கு அந்தப் பானையுள் இருக்கும் பொருட்கள் சொந்தமாகும். அது பார்க்க மிகவும் நகைச் சுவையாக இருக்கும். சிலர் நிற நீர்ப் பானைகளை உடைத்து தங்கள் உடைகளை நனைத்தபடி ஏமாளிகளாக வருவர். சிலர் பெறுமதியான பொருட்களுள்ள பானைகளையுடைத்து அதனுள் உள்ள பரிசுகளைப் பெற்றுக்கொள்வர். சிலர் மாப்பானைகளையுடைத்து தலை நிறைய மாவைக் கொட்டியபடி விழிபிதுக்கி நிற்பர்.

வழுக்கு மரமேறுதலும் அனேகர் அறிந்ததே. உயர்ந்த ஒரு கம்பத்தின் உச்சியில் பணமுடிப்பை அல்லது பரிசுப் பொருளைக் கட்டி அக்கம்பம் முழுவதும் வழுக்கக்கூடிய எண்ணெய் அல்லது கிறீஸ் தடவி உச்சியிலுள்ள பரிசுப் பொருளை எடுக்கும்படி விடுவர். இளைஞர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து அம்மரத்தில் வழுக்கி வழுக்கி ஏறி கம்பத்திலுள்ள எண்ணெயப் பசையைப் போக்கியபின் பரிசுப் பொருளை எடுத்துத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்வர். சாணேற முழஞ்சறுக்கி இளைஞர்கள் படும்பாட்டைப் பார்த்து எல்லோரும் - குறிப்பாக இளங்கன்னிகள் வாய்விட்டுச் சிரிப்பர்.

இத்தகைய களியாட்டங்களில் ஊர்மக்கள் குடும்பம் குடும்பமாகப் பங்கு பற்றுவதால் அது ஒரு ஒன்றுகூடலாகச் சில வேளைகளில் காதல் அல்லது திருமணங்களுக்கான அடித்தளங்கள் போடப்படும் களமாக அமையும். மட்டக்களப்பின் கிராமிய வாழ்வில் இத்தகைய சந்தர்ப்பங்களை விட்டால் மக்களுக்கு வேறு களியாட்ட நிகழ்வுகள் கிடைப்பதில்லை.

அன்பைப் பகிர்ந்து கொள்ளத் தனக்கோர் ஆண் துணையைத் தேடும் பெண் அடைக்கப்பட்ட அல்லது அடக்கப்பட்ட சூழலுள் வாழ்கிறாள். அன்னிய ஆண்களைக் காணவோ அல்லது அவர்களுடன் பேசவோ அவர்களில் தன் மனத்துக்குப் பிடித்த மணாளனைத் தேர்ந்து தன் வாழ்வைத் தானே அமைத்துக் கொள்ளவோ அவளுக்கு அனுமதியில்லை.

ஆலயங்களுக்குச் சென்றால் அங்கே 'அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும் ஆலய வழிபாடில்லை' என்று ஒலி பெருக்கி அலறும். ஆமையாய் ஒடுங்கிக் கொள்வாள். வீட்டிலுள்ளவர்கள் தனக்காக ஒருதுணைய்யத் தேர்ந்தெடுத்துத் தரும்வரை அவள் பொறுமை காக்கவேண்டும். அது எப்போது நடைபெறுமென்றும் அறியாள். சில வேளை நடக்கலாம், சிலவேளை நடக்காமலேயே போகலாம். இப்படிப் போகிறது தமிழ்ப் பெண்ணின் வாழ்க்கை. கலாசாரத்திற்கும், பண்பாட்டிற்கும் கன்னியர்கள் தம் வாழ்வைக் காவு கொடுத்துவிட்டுக் காத்திருக்கிறார்கள், இலவு காத்த கிளிகளாய்.

எமது தேசத்திலதான் எத்தனை விதவைகள் கலியாணமாகாக் கன்னியர்கள்? சீதனக் கொடுமையும் கலாச்சாரக் கட்டுப்பாடுகளும் எம் பெண்குலத்தின் வாழ்வைப் பாழடிக்கின்றனவே? யாரிடம் சொல்லி அழுவோம். பாரதிதாசன் வாழ்விழந்து வாடிநிற்கும் விதவைகளுக்காகப் பாடினான்:

கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு
வேரிற்பழுத்த பலா – எந்தக்
கோரமுமற்றுத் தவிக்குதண்ணே
ஒளிபீறிடும் வட்ட நிலா
வெட்கமில்லை வெட்கமில்லை இங்கு
யாருக்கும் வெட்கமில்லை

- *தொடருவம்.*

Eelavan Builders

Plumbing & Central Heating
Single 3-Phase House-Wiring



சகல வீட்டு திருத்த வேலைகளுக்கும் நாட வேண்டிய நம்பகரமான நம்மவர் நிறுவனம்

We do free designing and obtain planning permission.







- New Extension
- Internal Decorations
- Driveways
- Plastering
- Chimney Brest-Wall Removing.



New Kitchen & Bathroom Fitting

Also we supply Brick Layers to other contractors.

T: 020 8423 1628 M: 07932 539 266 M: 07984 172 556
95 Holyrood Avenue, South Harrow, Middlesex HA2 8UD

# புலி என செயல் செய்யப் புறப்பட்டனர் தமிழர்

வந்தாரை வாழவைக்கும் தமிழ் நாட்டுக்குச் சென்ற மாதம் நான் சென்றேன். தமிழ்நாடு செல்வது எப்போதும் எனக்கு உவப்பான ஒன்று. காரணம், அதன் கலைச்செல்வங்கள். பொதுவிலேயே கலை மலிந்த நாடு தமிழ்நாடு. ஓவியம், சிற்பம், கூத்து, வண்ணம், கட்டிடம், இலக்கியம், அச்சு, இசை, சினிமா என எக்கலைகளிலும் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது என்பது என் துணிபு. அதற்கும் மேலாக ஒன்றுண்டு. அது தமிழரின் நாடு. தமிழ் மொழி பேசுகின்ற நாடு. தமிழில் எக்காரியமும் நான் இயற்றலாம் என்னும் படியான நாடு. என் தாய்நாடான தமிழீழத்திற்கு அடுத்த படியாக நான் நேசிக்கும் நாடு தமிழ் நாடு.

இம்முறை சென்றபோது மகிழும்படியான காரியங்கள் பல நடந்தன. தமிழ் இனமான உணர்வெழுச்சி ஒன்று ஓங்கிப் பெருகுகிறது. ஏலவே அது இருந்ததுதான். இடையில் எது அதை மடக்கிச்சோ தெரியவில்லை.

'அடைந்தால் தமிழ்நாடு இல்லையேல் சுடுகாடு.' என்று எழுச்சி கொண்ட தமிழினம் தான் அப்போது இருந்தது. பெரியார், அண்ணா என்ற பேரெழுச்சி கொள்ள வைத்த தலைவர்கள் இருந்தனர். பாரதிதாசன் என்ற பெரும் உணர்ச்சிக் கவிஞர் இருந்தார். அதனால் எழுச்சி கொண்டிருந்தது தமிழினம்.

'பூட்டிய் இரும்புக்கூட்டின் கதவு திறந்தது சிறுத்தையே வெளியேவா, எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்க புலி என செயல் செய்யப் புறப்படு.' என்று பாரதிதாசன் பாடிய பிறகு, எந்தத் தமிழரும் எழுச்சிகொள்ளாமல் இருக்க முடியுமா? அவரவர் ஆட்படவேண்டும், ஆயுதம் தூக்கிட வேண்டும். அப்போதுதான் சுதந்திரம் என்பதை உணர்ந்தனர்.

'அக்கா வந்து வாங்கித் தருவதற்கு சுக்கா மிளகா சுதந்திரம்.' என்ற பாரதிதாசனின் நக்கல் எவருக்கும் தேவையிருக்கவில்லை. அப்படி ஓர் எழுச்சி கொண்ட தமிழினம் ஏன் இப்படி தாழ்ச்சி கொண்டது. ஏன் இவ்வளவு தாழ்வுச் சிக்கலுக்குள்ளானது? தமிழீழப்போரைப் பார்த்து வாய் பிளந்து, வியந்துநிற்பதன் காரணம் என்ன? வீரப்பன் என்ற ஒருவன் தவிர, வீரனாய் அல்லது வீறாப்பாய் எவனும் வரவில்லையே!

காரணம் தெரியாதென்று நான் சொல்ல மாட்டேன். தெரியும் ஆனால், அது கவலையான காரணம். நெஞ்சு விம்மி வேதனை வெடிக்கிற காரணம். திராவிட எழுச்சியின் தோல்விக்கு பிராமணியம்தான் காரணம் என்று எவரும் சொல்வர். ஆனால் நான் சொல்லமாட்டேன். புறத்தைக் குறைகூறி என்ன பயன்? அகம்தான் அத்தனைக்கும் காரணம்.

பெரியார் வழிநின்று புரட்சி பேசியோர், வாக்கு அரசியலுக்கு இடம் பெயர்ந்து வரத்தொடங்கினர். பெரியாரை விட்டு விலகத் தொடங்கினர். இனமான உணர்வை, தமிழின எழுச்சியை வாக்குகளாக மாற்றும் முயற்சி செய்தனர். திராவிடக் கழகத்திலிருந்து பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகம் கண்டனர். பெரியார்-மணியம்மை திருமணத்தைக் காரணம் காட்டி, விலகினர். சட்டமன்றத் தேர்தலை நோக்கிச் சரிந்தனர்.

வந்தது அவர்களுக்கு ஒரு வாய்ப்பு. இந்தியா, சீன யுத்தம் என்ற பெயரில் யுத்தத்தைக் காரணம் காட்டி, அப்போதைய பிரதமர் ஜவர்கலால் நேரு பிரிவினை தடைச்சட்டம் கொண்டு வந்தார். 'இதுதான் தாயம்' என்று தி.மு.க தலைவர் அண்ணாத்துரை அவர்கள். தமிழ் நாட்டையும் விட்டார். சுடுகாட்டையும் விட்டார். தமிழின எழுச்சி அண்ணா, கலைஞருக்கு, புள்ளடி வாக்குகளாயிற்று. எம்.ஜி.ஆருக்கு சினிமா செல்வாக்குகளாயிற்று ஆகக் கொடுமை என்னவென்றால், கன்னடப் பிராமணத்தி ஜெயலலிதா தமிழர்களின் தலைவராக, தமிழ்நாட்டு முதல்வராக ஆனமை. நேரு வந்த போது கறுப்புக் கொடி காட்டிய தி.மு.கவினர், நேருவின் மகள் இந்திரா வந்த போது, 'நேருவின் மகளே வருக நிலையான ஆட்சி தருக.' என்றுபுராணம்பாடவேண்டியதாயிற்று. ஒன்றும் இல்லாத, ஒன்றுக்கும் உதவாத அதிகாரம் ஏதும் இல்லாத மத்திய அரசு நினைத்தால் கலைத்து விடலாம் என்றதான அதிகாரம் கொண்ட ஓர் அரசை சென்னை மாகாணத்திற்குக் கொடுத்தது இந்திய மத்திய அரசு. அதற்குத் தமிழ்நாடு என்று பெயர் சூட்டி அழகு பார்த்தது தி.மு.க

**இரவி அருணாசலம்**

**எழுதுவது என்னவெனில்**

இடையில் நடந்தது இவைதாம். சரி, தமிழின உணர்வு தமிழ்நாட்டு மக்களிடம் செத்துப் போயிற்றா? அப்படித் தான் நானும் நினைத்தேன். சென்னை நகரில் சுற்றித் திரிந்ததில், அங்கு நான் கண்ட காட்சிகளில் தமிழ் அழிந்து ஆங்கிலம் அரசோச்சியதில் நம்பிக்கை இழந்திருந்தேன். இனி அவ்வளவும் தான் என்று மனம் நொந்திருந்தேன்.

அப்படியல்ல என்று இம்முறை தமிழ்நாடு போனபோது நான் உணர்ந்தேன். தமிழ் உணர்வு பொங்கிப் பெருகியதை பலரிடம் நான் கண்டேன். அரசியலாளர், திரைப்பட இயக்குனர், கடைவைத்திருப்போர், காவல் வேலை செய்வோர், முச்சக்கர வாகன ஓட்டனர், பரிசாரகர் என்று பலருடன் அளவளாவினேன். அவர்கள் யாவரும் உணர்ச்சி பொங்க, உணர்வு பெருக பலதும் சொன்னார்கள். உடல் சிலிர்க்க, உள்ளம் பேருவகை கொள்ள அதனை நான் கேட்டுக்கொண்டிருந்தேன். எல்லோரும் ஒன்றைச் சொன்னார்கள். அதை நன்றாகச் சொன்னார்கள்.

அது தமிழீழம். அங்கு நிகழும் போர் தானைத்தலைவன். தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன். தமிழ்நாட்டிலுள்ள தமிழர் பெரும்பாலும் நமது தேசியத் தலைவரையே தமது தலைவராகக் கொள்கின்றனர். நமது தலைவரின், தளபதிகளின் போராளிகளின் ஓர்மமும், வீரமும், உணர்வும் கண்டு சிலிரிக்கிறார்கள்.

இதனால்தான் அவர்களுக்கு இது இயலுமாக இருக்கிறது. துசாரா பீரிஸ் என்ற சிங்கள இயக்குனர் தமிழர் தேசிய விடுதலைப் போரைக் கொச்சப் படுத்தி ஒரு திரைப்படம் எடுத்து அதைப் பிரதி செய்ய தமிழ் நாட்டுக்கு வந்த போது என்ன நடந்தது என்பதை எல்லோரும் அறிவர். அப்போது சென்னையில் நான் இருந்தேன். அச்சம்பவத்தில் அதில் கலந்து கொண்ட இயக்குனர் கௌதம் (சந்தனக்காடு தொலைக்காட்சித்தொடர்) விபரித்திருந்தார்.

விபரிக்கின்ற போது சிலிர்த்தார். சிரித்தார். பெருமிதம் கொண்டார். வெற்றிகண்டார். வீறாப்பானார். உணர்ச்சிப் பெருக்கானார். நடிகர் சத்தியராஜ், சீமான், சுபவீ, தங்கர்பச்சான் இவர்கள் செயற்பட்டவிதம் சொன்னார். விளக்கமாக, விபரமாக, உடல்மொழியுடன் சொன்னார். உவகை கொண்டு உணர்வெழுந்து அன்றிரவு நித்திரை கொள்ள எனக்குக் கடினமாக இருந்தது.

இது இவ்வாறிருக்க, புலம் பெயர்ந்த எம் தமிழர் சிலரை நான் யோசித்தேன். இப்படியெல்லாம் உணர்வுடன் இங்கு நாங்கள் இருக்கிறோமா? இப்படி ஒரு சம்பவம் இங்கு நடந்தால் நாம் என்ன செய்வோம்? நமக்கென்ன என்று இருந்துவிட்டு ஐம்பது, அறுபதினாயிரமாகத் திரண்டு 'சிவாஜி' படம் பார்க்கப் போவோம். 'ரோபோ' எப்போ வரும் என்று ஏங்கிக் கிடப்போம். இல்லையா?

# அறிவியல் தகவல்கள்

**சி.மாசிலாமணி**
*(ஒரு பேப்பருக்காக)*

## இவ்வாண்டில் வைகாசியிலும் ஆடியிலும் 32 நாட்கள்

தற்போதைய தமிழ் ஆண்டில், வைகாசி மாதத்திலும் ஆடி மாதத்திலும் 32 நாட்கள் உள்ளன. இதற்கான காரணத்தை விளக்குவதே இக்கட்டுரை. முன்னூற்று அறுபத்தைந்தே கால் நாட்களை உள்ளடக்கவேண்டும் என்பதற்காக கணித முறையில் கைமொழியின் மேடு பள்ளங்களை எண்ணியும் நாலாற் பகுத்தும் மாதத்தின் நாட்களை கணிக்கும் முறை தமிழ் மாதங்களுக்கு தேவை இல்லை.

30 பாகைக்கு ஒன்றாக ஒரு சீரில், மேடம் இடபம் என்று 12 வீடுகள் உள்ளன. இவை ஒவ்வொன்றின் உள்?ளும் கதிரவன் நுழையும் நாளையே சங்கிராந்தி என்று அழைத்து முதலாம் திகதியாகக் கணிக்கிறார்கள். அவ் வீட்டினுள் கதிரவன் இருக்கும் நாட்கள் அம்மாதத்தின் நாட்கள். இதிலும் ஒன்று கவனிக்கப்பட வேண்டியுள்ளது.

சங்கிராந்தி பகலில் மட்டும்தான் நிகழ்வதில்லை. இரவிலும் நிகழ்கிறது. அப்படி இரவில் நிகழ்ந்தால் மறுதினம் மாதப் பிறப்பாகக் கணிக்கப்படும். எடுத்துக்காட்டிற்கு 30வது நாள் இரவு சங்கிராந்தி நிகழ்ந்தால் அம்மாதத்தின் நாட்கள் 31 என்று கணிக்கப்பட்டு மறுநாள் மாதப்பிறப்பு என்று அறிவிக்கப்படும். இன்னும் ஒன்றையும் நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்திய இலங்கை நேரத்தை மையமாக வைத்தே எது இரவு எது பகல் என்று முடிவெடுக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இங்குள்ள சில அரைகுறைப் பண்டிதர்கள்போல் மாதப்பிறப்பு எப்போது என்று அறியாது, ஆடிக் கூழ் எப்போ ஆக்குவது என்று குழம்பவேண்டி வரும்.

பூமியில் இருந்து பார்க்கும் எங்களுக்கு கதிரவன் ஒவ்வொரு வீடாக மாறுவது போல் தென்படுகின்றான். உண்மையில் பூமிதானே கதிரவனைச் சுற்றுகிறது. சுற்றும் பூமி ஒரு சீரான வேகத்தில் சுற்றுவதில்லை. அதனால் கதிரவன் எமக்கு தென்படும் காட்சியும் வேகம் கூடியும் குறைந்தும் அமைகிறது.

பூமி கதிரவனைச் சுற்றும் பாதை நீள்வட்டப்பாதை. அதனால் ஆரை நீண்டு குறைகிறது. ஆரை நீளும்போது கதிரவனிலிருந்து பூமியின் தூரம் கூடுகிறது. தூரம் கூட பூமியன் சுற்று வேகம் குறைகிறது. அதேபோல் தூரம் குறைய சுற்று வேகம் கூடுகிறது. ஆகையால் ஆடி மாதத்தில் தூரத்தில் நிற்கும்போது பூமிக்கு 32 நாள் எடுத்தால் அண்மையாக உள்ள தை மாதத்தில் வேகமாக ஓடும் பூமிக்கு 29 நாட்கள் போதும். வேக வித்தியாசம், சராசரி வேகத்தைவிட ஒரு சிறிது கூடும் அல்லது சிறிது குறையும். அவ்வளவுதான்.

கிரகவுறியன் ஆண்டு, அதாவது ஆங்கில ஆண்டு பருவுகாலங்களை தீர்மானிக்கும் சூரியனின் வடக்கு தெற்குப் பயணத்தை மையமாக வைத்தே கணிக்கப் படுகிறது. அதை மையமாக வைத்து செய்யப்படும் துல்லிய கணிப்பினால் கதிரவன் எந்தக் கோட்டில் எந்தத் திகதியில் நிற்கவேண்டுமோ அங்கு அத்தேதியில் நிற்கின்றான். அங்கும் ஒரு 10 நிமிட வேறுபாடு ஆண்டுதோறும் உண்டு. இக் குறையை நீக்குவதற்காக 400 ஆண்டுகளுக்கு ஒரு முறை 3 லீப் ஆண்டுகளை வெட்டி அதைச் சீர்படுத்தி உள்ளார்கள்.

கீழைத்தேய ஆண்டை விண்மீன் சம்பந்த ஆண்டு என்பர். ஆரம்ப வீடான மேடம் ஆரம்பமாகும் சைபர் புள்ளியில் ஆரம்பித்து அதே புள்ளியை திரும்ப கதிரவன் அடையும் காலத்தை மையமாக வைத்து கணிக்கப் படுவது. பூமியன் ஒரு தள்ளாடல் காரணமாக 20 நிமிடங்கள் இந்த ஆண்டிற்கு கூடுதலாய் தேவைப் படுகிறது. அதனால் 72 அண்டுகளில் பருவகாலப் பஞ்சாங்கத்தை விட ஒரு நாளாற் பின் நகர்கிறது.

இதற்கு தகுந்த பிராயச்சித்தம் தேடாவிடில் காலப் போக்கில் எமது தை முதலாம் திகதியும் சித்திரை முதலாம் திகதியும் பெப்ருவரிக்கும் மேயுக்கும் தள்ளப்படப் போகின்றன. பயப்படாதீர்கள் குறைந்தது ஆயிரம் ஆண்டுகளின் பின்புதான் இது நிகழும்..

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர

**DK Electronics** உங்கள் அனைத்து தேவைகளுக்கும் உடன் அழையுங்கள்



Repair & Installation – Any Type Any Model

TV- (Plasma, LCD, DVD, Hi-Fi, CCTV)

Digital Video Recorders, Security Devices and others.

Satellite and Ariel Installation.



TV DOCTOR
Service from the heart!

S.Mohan on 07782 331 243
07864 119 919

# கலைஞர் குற்றஞ்சாட்ட வேண்டியது இந்திய உளவுத் துறையையே!

**வி. சபேசன்**
*(ஒரு பேப்பருக்காக )*

'இலங்கையில் அமைதி ஏற்படுவதற்காக அங்கு மோதலில் ஈடுபடும் இரண்டு பிரிவினர்களுக்கும் இடையே இந்திய அரசு பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்' என்று தமிழ்நாடு சட்டசபை தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. இந்தத் தீர்மானத்திற்கு அனைத்துக் கட்சிகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்த தீர்மானத்திற்கான விவாதத்தின் போது சர்ச்சைக்குரிய பல விடயங்கள் தமிழ்நாட்டின் சட்டசபையில் பேசப்பட்டன.

ஈழத் தமிழர்களுக்கு இந்தியா செய்த அநியாயங்கள் பற்றி பேசியவர்களின் பேச்சுக்கள் அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. ஆனால் பிழையான ஒரு வரலாற்றுத் தகவல் அவைக் குறிப்பில் பதியப்பட்டுவிட்டது. அதற்கு காரணம், அதைக் கூறியது தமிழ்நாட்டின் முதலமைச்சர் கலைஞர் அவர்கள்.

இந்தியா தலையிட்டு இரண்டு பிரிவினரையும் பேச்சுவார்த்தைக்கு கொண்டு வர வேண்டும் என்ற தீர்மானத்தை கொண்டு வந்த கலைஞர் பராட்டப்பட வேண்டியவர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

ஆனால் போகிற போக்கில் அவர் சொல்லி விட்டு போயிருக்கும் சில வார்த்தைகள் ஈழத் தமிழர்களை புண்படுத்தி விட்டன என்பதுதான் இங்கே வருந்தத்தக்க விடயம்.

அவர் சொன்னது இதுதான். 'ஒரு குழுவாக அவர்கள் இருந்து போராடியிருந்தால் நேபாளம் போல வெற்றி பெற்று இருப்பார்கள். வேறு பல நாடுகளை போல விடுதலை பெற்றிருப்பார்கள். போராளிக் குழுக்களுக்குள்ளேயே நடந்த மோதல் காரணமாகத்தான் இந்த போராட்டம் பலவீனமாகிவிட்டது. இன்று அவர்களுக்கு பரிந்துரை செய்து பேச வேண்டி இருக்கிறது. இலங்கையில் விடுதலை பெற சகோதர யுத்தத்தை நிறுத்துங்கள் என்று போராளிகளுக்கு வேண்டுகோள் விடும் நிலைமை ஏற்பட்டது. ஒரு குழு இன்னொரு குழுவுடன் மோதும் போக்கை கடை பிடித்தது. தலைவர்கள் கொல்லப்பட்டார்கள், வெட்டப்பட்டார்கள், சுடப்பட்டார்கள்.

அங்கு ம.பொ.சி. போன்று இருந்த அமிர்தலிங்கம் கொல்லப்பட வேண்டியவரா? விருந்துக்கு அழைக்கப்பட்டு சிற்றூண்டி வழங்கி தேனீர் எடுத்து வர அவரது மனைவி மங்கையற்கரசி சென்று வருவதற்குள் கணவரும் உடனிருந்த தோழர்களும் பிணமாக கிடந்தார்கள். போராளிகளே அவர்களுக்குள்ளேயே அடித்துக் கொண்டு போராட்டத்தை பலவீனமாக்கி விட்டார்கள்' என்றார் கலைஞர்.

நேபாளத்தில் நடந்தது அங்கே உள்ள அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம். ஒரு நாட்டுக்குள்ளேயே நடந்த பிரச்சினை அது. இலங்கைத் தீவில் நடப்பது ஒரு தேசிய இனம் தன்னை அடக்குகின்ற ஒரு நாட்டிடம் இருந்து விடுதலையாகும் போராட்டம். இது இரண்டு நாடுகளுக்கு (தமிழீழம், சிறிலங்கா) இடையிலான போராட்டம்.

ஒரு தேசிய இனம் இன்னொரு நாட்டிடம் இருந்து சுதந்திரம் பெறுவதற்கு போராடுகின்ற போது, பல குழுக்களாக போராடி வெற்றி பெற முடியாது. அப்படி வெற்றி பெற்ற வரலாறும் உலகத்தில் வெகு குறைவு. அந்த வெற்றிகளும் தற்காலிகமான வெற்றிகளாக போனதையும் வரலாறு எமக்கு சொல்லித் தந்திருக்கிறது.

ஆட்சி மாற்றத்திற்கு போராடுகின்ற மக்கள் ஆயிரம் குழுக்களாக போராட முடியும். ஒரு பெரும்பான்மை இனத்திடம் இருந்து விடுதலை பெறப் போராடும் இனம் அப்படிப் போராட முடியாது. நேபாளத்தை ஈழத்துடன் ஒப்பிடுவது மிகத் தவறான ஒன்று.

போராளிக் குழுக்களுக்குள் நடந்த மோதல்கள் போராட்டத்தை பலவீனப்படுத்தி விட்டன என்று கலைஞர் சொல்கிறார். இதை அவர் அன்றும் சொன்னார், இன்றும் சொல்கிறார் என்பது உண்மைதான். இப்படி ஒரு கருத்து உண்மையிலேயே அவருடைய மனதில் ஆழப் பதிந்துள்ளது என்பதையும் நாம் அறிவோம்.

ஆனால் இங்கே ஒரு விடயத்தை சொல்ல வேண்டும். இந்திராகாந்தியின் பிரத்தியேகச் செயலாளராக இருந்தவர் இந்திராகாந்தி குறித்து ஒரு நூல் எழுதியிருக்கிறார்.

இந்திராகாந்தி விடுதலைப் புலிகள் குறித்து கொண்டிருந்த கருத்து அந்த நூலில் வெளிப்படுகிறது. 'ஏனைய தமிழ்ப் போராளிக் குழுக்களையும் விட, தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்க உறுப்பினர்கள் தனித்துவமாகவும், கொள்கைப் பிடிப்பு உடையவர்களாகவும், கட்டுக்கோப்பாகவும் உள்ளார்கள். எதிர்காலத்தில், இந்தியாவின் அழுத்தத்திற்கு, விடுதலைப் புலிகள் பணிய மாட்டார்கள். ஏனென்றால் விடுதலைப் புலிகள் இயக்கம், தன்னுடைய இலட்சியத்தில் உறுதி கொண்ட ஓர் இயக்கமாக வளர்ந்து வருகின்றது. அவர்களின் வளர்ச்சியை நாம் தடுக்க வேண்டும்.'

உண்மையில் இது இந்திராகாந்தியின் கருத்து அல்ல. இந்திய கொள்கை வகுப்பாளர்களின் கருத்து.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தும் நோக்கோடு பல போராளிக் குழுக்களை உருவாக்கியதும் இந்தியாதான்.

அந்தப் போராளிக் குழுக்களை விடுதலைப் புலிகளோடு மோதுவதற்கு தூண்டியதும் இந்தியாதான்.

கலைஞரும் அன்றைக்கு ரெலோ இயக்கத்திற்கு ஆதரவாக நின்று போராளிக் குழுக்களின் மோதல்களுக்கு ஏதோ ஒரு வகையில் துணை போனார் என்பதும் வரலாற்றில் உள்ள ஒரு செய்தி.

இந்தியாவின் திட்டப்படி பல போராளிக் குழுக்கள் வளர்ச்சி பெற்று, விடுதலைப் புலிகளை இல்லாது ஒழித்து, கடைசியில் இந்தியா காட்டுகின்ற இடத்தில் கையெழுத்துப் போட்டு விடுதலைப் போராட்டம் முடிந்து போவது கலைஞரின் விருப்பமாக இருக்காது என்று நாம் நம்புகிறோம்.

விடுதலைப் புலிகள் மற்றைய போராளிக் குழுக்களை அடக்கி வைத்ததாற்தான் தமிழீழப் போராட்டம் இன்று வரை தக்க வைக்கப்பட்டு முன்னோக்கி நகர்ந்து கொண்டிருக்கிறது.

கலைஞர் இன்னும் ஒரு குற்றச்சாட்டையும் சொல்லியிருக்கிறார். அமிர்தலிங்கம் கொல்லப்பட்டது பற்றிய விடயத்தை பேசியிருக்கிறார். தற்பொழுது இதற்கு என்ன அவசியம் வந்தது என்று தெரியவில்லை. தமிழ் செல்வனிற்கு அழுத என்னுடைய மனம் அமிர்தலிங்கத்திற்கும் அழுகிறது என்ற செய்தியை சொல்லி தன்னை நடுநிலையாளராக காட்ட முனைகிறாரா என்ற கேள்வி எழுகிறது.

அமிர்தலிங்கத்திற்காக யார் அழுகிறார்களோ இல்லையோ, தமிழீழ மக்கள் அழவில்லை என்பது இங்கு சொல்லப்பட வேண்டிய ஒரு விடயம். மக்களால் நிராகரிக்கப்பட்டு, இந்தியப் படையின் பாதுகாப்பு இருந்தும் தன் சொந்தத் தொகுதியில் போட்டியிடாது, மட்டக்களப்பில் போட்டியிட்டு, அங்கும் வெற்றி பெறாது, தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனவர்தான் அமிர்தலிங்கம்.

இதை விட அமிர்தலிங்கம் கொலைக்குப் பின்னால் இந்திய உளவுத் துறையின் கரங்கள் இருக்கின்றன என்பதும் இங்கு கட்டாயம் சொல்லப்பட வேண்டிய ஒரு விடயம்.

*(தொடர்ச்சி 37ம் பக்கத்தில்)*


# இலவச பங்குச் சந்தை கருத்தரங்கு
# FREE STOCK MARKET SEMINAR

**எங்களுடைய 6வது இலவச பங்குச் சந்தை கருத்தரங்கில் மிகச் சிறிதளவான முதலீட்டுடன் எவ்வாறு பங்குகளை வாங்கி, விற்பனை செய்யலாம் என்பதனை செய்முறை விளக்கத்துடன் காண்பிப்போம்.**

## Programme

1) பங்குகளை எவ்வாறு 3% முதலீட்டுடன் வாங்குவது?
(£ 1000 பெறுமதியான பங்குகளை வாங்குவதற்கு போதுமானது)
2) ஒரு பங்கை வாங்குவதா! விற்பதா! என்பதனை எவ்வாறு இரண்டே நிமிடத்தில் சுலபமாக கண்டு கொள்வது.
3) பங்கு சந்தையில் விலை வீழ்ச்சியடையும் பொழுது எவ்வாறு இலாபம் பெற்றுக் கொள்வது.
4) கிடைக்கும் இலாபத்திற்கு எவ்வாறு முற்றிலும் வரிகட்டாமல் தவிர்ப்பது.
5) எந்த தரகர்களை தெரிவு செய்து பாவிப்பது?
எந்த தரகர்கள் £1000 credit கொடுப்பார்கள்?

**இந்த இலவச பங்குச் சந்தை கருத்தரங்கில் கலந்து கொள்ள விருப்பமுடையவர்கள் கீழே உள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களுடைய பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்.**

**Mobile: 07983 989534**

# தேசியம் என்பது கதையாடலா?

நடராஜா முரளிதரன்
ஒரு பேப்பருக்காக)

தேசம், தேசியம் என்ற சொல்லாடல்கள் மிகப் பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வரும் உலகச் சூழலே இன்று மேலோங்கியுள்ளது. இன்றைய உலக நெருக்கடிகள் பலவும் இந்தச் சொற்பதங்களின் உச்சக்கட்டத் தாக்கங்களை உள்ளடக்கியதாகவே கிளர்ந்த வண்ணம் உள்ளன.

நாடுகளுக்கு நாடுகள், தேசங்களுக்குத் தேசங்கள் இச் சொற்றொடர் குறித்த வியாக்கியானங்களோ அல்லது வரைவிலக்கணங்களோ வேறுபட்டுக் காணப்படுகின்றன.

மொழித் தேசியத்தை அடிப்படையாகக் கொண்டு தேசங்களும், தேசியங்களும் நவீன வரலாற்றில் பிறப்பெடுத்தமை குறித்த வரலாறுகளைப் பதினெட்டாம் நூற்றாண்டு கால ஐரோப்பிய அரசியல், அறிவியல் புரட்சிகளின் வெளிப்பாடுகளாகவே ஆய்வாளர்கள் நோக்குகின்றனர். தேசியத்தின் எழுச்சியும், மதச் சிந்தனைகளின் வீழ்ச்சியும் சமகால அளவில் நிகழ்ந்ததன் விளைவாகப் பதினெட்டாம் நூற்றாண்டுகால ஐரோப்பாவில் நவீன தேசங்கள் தொடர்பான கட்டுமானங்கள் வலுப்பெறத் தொடங்கியிருந்தமையை உணர முடியும்.

இத்தகைய நவீன தேசங்களின் எழுச்சியில் காலனியாதிக்கம், மத நிறுவனங்களின் ஏகபோகம், முடியாட்சி போன்ற அதிகாரபீடங்களுக்கெதிரான கிளர்வுகளின், எழுச்சிகளின் உணர்வுகள் ஊட்டம் பெற்றிருந்தன. ஆயினும் தேசியம் என்பதானது மரபு, இனம், மதம், மொழி போன்ற ஒருமைப்பாடுகளிலிருந்து எழும் அல்லது கட்டப்படும் பொதுவான உளவியல் சார்ந்த உணர்வுத் தளத்தையே பெரிதும் சார்ந்து நிற்கிறது.

**மார்க்சீய-லெலினியக் கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சோசலிச நாடுகளிலேயும் கூட சிறுபான்மைத் தேசிய இனங்கள் அடக்குதலுக்கு உள்ளான வரலாறுகள் கண் முன்னே விரிந்து கிடக்கின்றது.**

அவரவர் முகிழ்த்துவந்த அரசியல் அடியினையொற்றித் தேசிய இனம் தொடர்பான கருத்துருவாக்கங்கள் எம்மால் பேசப்பட்டு வந்துள்ளன. இந்த வகையில் தேசிய இனம் தொடர்பாக நான் வரித்துக் கொண்டிருந்த கருத்தமைவானது மொழி, பண்பாடு, தொடர்ச்சியாக வாழ்ந்த நிலப்பிரதேசம், தங்களுக்கேயுரித்தான பொருளாதார வாழ்வு போன்ற வரைமுறைகளைக் கொண்டிருக்கும் மக்கள் குழுமங்களைத் தேசிய இனங்களாக வரையறுத்துக் கொள்ளலாம் என்பதாகவே அமைந்தது. இங்கு மதம் இணைந்து கொள்ளவில்லை. ஏனெனில் ஈழத்தமிழ்த் தேசியத்தின் பரிமாணங்களுக்கு வலுவூட்டுவதே நான் சார்ந்திருந்த அரசியல் போக்கின் நலன்களுக்கு அமைவாக இருந்தன.

'தேசியவாதம் உச்சத்திலிருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பியத் தேசியங்களால் அவற்றிற்கு முட்டுக்கொடுப்பதற்காக உருவான சமூக விஞ்ஞானக் கற்கைநெறிகள் இன்று முற்றாக மறக்கப்பட வேண்டியவை, மாற்றியமைக்கப்பட வேண்டியவை என்பது உலகப் பொதுக் கல்விக் கருத்து' எனத் தனது உரையொன்றில் பேராசிரியர் பொ.இரகுபதி குறிப்பிட்டிருந்தார்.

மொழி, மதம், வரலாறு, பொருளாதாரம், புவியியல் அமைவிடம் போன்ற பொதுக் காரணிகளை அடிப்படையில் வைத்துக் கட்டப்பட்ட தேசங்களுக்குள்ளேயும் புதியவகைச் சிக்கல்கள் எழுந்த வண்ணமே இருந்தன.

வர்க்கப்பிரச்சினை தீர்க்கப்படும் சமூகங்களில் இன, மத, மொழி முரண்பாடுகளுக்கான வாய்ப்புக்கள் அழிந்தொழிந்து போய்விடும் என்பதான சூத்திரத்தையே இடதுசாரிகளில் பெரும்பாலோனோர் ஒப்புவித்துக் கொண்டிருந்தார்கள்.

மார்க்சீய-லெனினியக் கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட சோசலிச நாடுகளிலேயும் கூட சிறுபான்மைத் தேசிய இனங்கள் அடக்குதலுக்கு உள்ளான வரலாறுகள் கண் முன்னே விரிந்து கிடக்கின்றது.

இவ்வாறான சூழ்நிலைகளுக்கு இடையே இங்கு நான் விசாரிப்புக்கு உட்படுத்த முனையும் விடயமானது ஈழத்திலே வாழுகின்ற தமிழ்பேசும் மக்களைத் தேசியம் என்ற வேலிக்குள் அடைப்பது தொடர்பான விடயத்தை ஒட்டியதெனலாம்.

ஈழத்தமிழ்த் தேசியமாக உச்ச வளர்ச்சியுற்ற யாழ்ப்பாணியம் கீழ்த்தட்டு மக்கள் குறித்துக் கவலை கொள்ளவில்லை - கிழக்கு மக்கள் குறித்தோ, முஸ்லீம் மக்கள் குறித்தோ அக்கறைப்படவில்லை - தலித்துக்கள் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள் என்ற வகையில் இவ்வாறான தொடர் குற்றச்சாட்டுக்கள் மாற்றுக் கருத்தாளர்களால் ஈழத்தமிழ்த் தேசியத்தை நோக்கி முன்வைக்கப்படுவதை அவதானிக்க முடிகிறது.

**'யாழ்ப்பாணியம் கீழ்த்தட்டு மக்கள் குறித்துக் கவலை கொள்ளவில்லை - கிழக்கு மக்கள் குறித்தோ, முஸ்லீம் மக்கள் குறித்தோ அக்கறைப்படவில்லை - தலித்துக்கள் ஒடுக்குதலுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள்'**

வளர்ச்சியுறும் எத்தேசியத்துக்குள்ளும் அதிகார சக்திகள் உள்ளடங்கலாக அந்த வட்டகைக்குள் அடங்க மறுக்கின்ற தனிமனிதர்கள் ஈறாக தங்கள் நலன்களைப் பேணுமுகமாக மரபுகளின் காத்தலை, பழமையின் தொடர்ச்சியை நிறுவுதலுக்கான அவாவினைக் கொண்டிருப்பர். மறுபுறத்தில் தேசிய இனவிடுதலையென்பது அச்சமூகத்தின் ஒட்டுமொத்த விடுதலையல்ல. விடுதலை குறித்த பயணத்தில் ஒரு படிக்கட்டமாக அதனை ஊடறுத்தலே ஏற்புடையதாக அமையும்.

'உலகம் கிராமமாகச் சுருங்கிவிட்டது', 'தேசம் என்ற கருத்தமைவு உடைந்து நெடு நாளாயிற்று' என்பது போன்ற கருத்துருவாக்கங்கள் வீரியம் பெற்று வரும் இன்றைய உலகச் சூழலிலும் கூடத் தேசங்களுக்குள்ளும், தேசியங்களுக்குள்ளும் காலகாலமாக நசிக்கப்பட்ட மக்கள் குழுமங்கள் தங்கள் நியாயத்தீர்ப்புக்காக குரலெழுப்புவதைக் குறைத்து மதிப்பிட்டுவிட முடியாதுதான்.

அதேவேளை இந்த முரண்பாடுகளையெல்லாம் வெளித்தாண்டிப் பலம் பொருந்திய இன்னுமோர் சக்தி இந்த முரண்தழைகளுக்குள் சிக்குண்ட சமூகங்களை அடக்குதலுக்கு உட்படுத்த முனையுமாக இருந்தால் அவ்வாறான சமூகங்கள் எடுத்தாள வேண்டிய நிலைப்பாடுதான் என்ன? இவ்வாறான எனது கூறலைப் 'பச்சை யாழ்ப்பாணியம்' என்று பிரகடனப்படுத்த உங்களில் பலர் துடித்தெழலாம்.

எவ்வாறு ஒடுக்குதலுக்கு உட்பட்டதால் விளைந்த தேசியவாதம் குறுந்தேசியவாதமாக மாறிவிடக்கூடாதோ அதே சமாந்தரத்தில் வரலாற்றுச் சக்கரங்களைப் பின்னோக்கி இழுத்து நிறுத்துகின்ற குளறுபடிகளையும் அதிகாரத்தை நோக்கி உண்மை பேசுவதாகக் கூறிக்கொள்வோர் நிகழ்த்தி விடக் கூடாது.

கடந்த 25 வருடங்களாக மக்களே மகத்தான சக்திகள், அவர்களே இறுதியில் வரலாற்றைத் தீர்மானிப்பார்கள் என்று மொழிந்து வந்தபோது ஏற்படாத சந்தேகம் இன்று வரலாறு திட்டமிட்டுக் கட்டமைக்கப்படுவதாகவோ அன்று யாழ் குடாநாட்டு மத்தியதர வர்க்கத்தின் அபிலாசைகளுக்காகத் திணிக்கப்பட்ட 'பெருங்கதையாடலாகவோ' தமிழ்த் தேசியம் சித்தரிக்கப்படுவதும் பல முனைகளில் வரலாற்றுத்திரிபுகளும், திரைப்படுத்தல் கருமாய் நிறைந்து வழிகின்றது.

சமூக விடுதலைக்கான போர்த்தொடுப்பில் தேசியக் கருத்தமைவின் பெறுமானங்களைக் கேள்விக்குட்படுத்துதல் அதன் குறைபாடுகள் குறித்த பரிமாணங்களை அளவைப்படுத்துதல் என்பவை குறித்து எனக்கு எந்த ஆட்சேபணையும் கிடையாது.

மாறாக அவற்றை முற்றிலும் நிராகரிப்பது குறித்தோ அவையுள்ளடக்கி வைத்திருக்கும் முற்போக்குக்குணாம்சங்களை மறுதலிப்பது குறித்தோ பெரிதும் அச்சப்படுகின்றேன்.

வியாபாரம் பெருக விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர் அடிக்கவும் விளம்பரம் வேண்டும்.
ஒரு பேப்பர்

**Digital Camera for SALE**
*Sony 'DSR 370' video camera for immediate sale.*
*Cannon Lens 20, £ 3100. Also Panasonic Mixer MX50 for £850 or ono.*
**Call: 07977 485 036.**

**Tuition for G.C.S.E (A/L)**
*Mathematics, Statistics & Mechanics.*
*Group and 'one-to-one' classes by an experienced teacher.*
**Contact Mob: 07396 197 956**

**வீட்டு உதவிக்கு பெண் தேவை**
வீட்டு வேலைக்கு ஒரு பெண் தேவை.
தொடர்பு கொள்ள : **07775 777 188**

**Wanted Solicitor**
ஒரு சிறிய நிறுவனம் ஒன்றில் பகுதி நேரமாக வேலை செய்வதற்கு அநுபவம் வாய்ந்த சட்டத்தரணி தேவை
தொடர்பு கொள்ள : அசோக் **07903 771 798**

**Wanted Purchasing Officer**
பெரிய சுப்பர் மார்க்கட் ஒன்றில் கொள்வனவு அதிகாரியாக வேலை செய்வதற்கு அநுபவம் வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மொத்த விற்பனை தொடர்பான அநுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை தரப்படும். *reference needed*
தொடர்பு கொள்ள : அசோக் **07903 771 798**

**Warehouse to let in Abbeywood**
*Short term or long term basis*
*Good security system*
*Contact* **07944 334 552**

**Web developer**
*We are looking for Web Developer to join a small dynamic team to spearhead web developent projects. You will need demonstrable skill and experience of web development. : Essential skills:* **XHTML, CSS, Dreamweaver, Flash, - Graphic design packages like Adobe photoshop**
*Knowledge of scripting language is highly desirable.*
*Please forward your CV to* **info@orupaper.com**

**Application developer**
*The ideal candidate should have proven experince in application development in LAMP environment:. Essential skills:* **- XHTML, Javascript and AJAX / MySQL / Apache / PHP** *Knowledge of other progrmming environment is an added advantage.*
*Please forward your CV to* **info@orupaper.com**

**INSTANT MONEY TRANSFER**
**To Sri Lanka and India**
**Ready to pick up immediately**
இலங்கை இந்தியாவிற்கு துரித பணமாற்று சேவை
உடன் கிடைக்கக் கூடிய வசதி. பிரசித்தி பெற்ற பணமாற்று அமைப்பு தெற்கு லண்டன் (LEWISHAM, CATFORD) ஆகிய இடங்களில் சிறந்த சேவை.
எந்தத் தொகைக்கும் £5 மாத்திரமே.
**TAMNET**
107 Rushey Green, Catford, London SE6 4AF
**T: 020 8695 1999**
money transfer

**PERMA**
**INTERNATIONAL SHIPPING LTD**
உங்கள் தனிப்பட்ட பாவனைப்பொருட்கள், வாகனங்கள், வீட்டுப் பாவனைப்பொருட்கள், இயந்திர உபகரணங்கள், போன்றவற்றை தாயகத்திற்கோ பிற நாடுகளுக்கோ அனுப்ப விரும்புகிறீர்களா?
இங்கிலாந்தின் எப்பகுதியாயினும் உங்கள் பொருட்களை எம்மால் சேகரித்து பாதுகாப்புடன் வைத்திருந்து அனுப்ப முடியும் தரமான பிரத்தியேக சேவைக்கு நாட வேண்டிய இடம்
**தொடர்புகளுக்கு: சிவம்**
45C Crusoe Road, Mitcham, Surrey CR4 3AL
Tel: 020 8646 5222, Mobile: 07939 550397

# கிளி அண்ணா

அருட்திரு கருணாரட்ணம் அடிகளார் - சில நினைவுகள்



**கருணா**
*(ஒரு பேப்பருக்காக )*

ஞாயிற்றுக்கிழமை காலை அக்கா தொலை பேசியில் கூப்பிடுகிறா. 'கிளியண்ணா.... கிளை மோர் ஒண்டில..'. அதன் பின் ஒரு நீண்ட மௌனம். யாரோ ஆயிரம் சம்மட்டியால் ஓங்கி அடிக்கிறார்கள். தொண்டைக்குள் ஏதோ அடைத்துக் கொள்கிறது.

கிளியண்ணா இறந்து போய்விட்டார். இனி கரகரப்புடன் கூடிய அந்தக் குரல் கேட்காது. நிலவரம் நிகழ்ச்சியில் அவர் வரப் போவதில்லை. ஊடகங்களில் அவரது ஆன்மீகப் பணி பற்றியும், மனித உரிமைகள் தொடர்பான பணிகள் பற்றியும் பேசுகிறார்கள். அறிக்கைகள் வருகின்றன. நாடுகள் கண்டனம் செய்கின்றன. அவருடைய பிரமாண்டம் எனக்குப் புரிகிறது. ஆனால் ஒரு சாதாரண மனிதராக, சகோதரனாக எனக்குத் தெரிந்த 'கிளியண்ணா' வின் பக்கம் ஒன்றும் இருக்கிறது.

அவர் எனக்கு அப்பாவின் நண்பராகவே அறிமுகமானார். பின்னிரவில் இருவரும் நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் என்ன பேசினார்கள் என்பதெல்லாம் இப்போது ஞாபகமில்லை. அப்போது அவர் ட்யூட்டரிகளில் பிரபலமான ஆங்கில ஆசிரியராக இருந்தார். பிறகு சிலகாலம் பருத்தித்துறையிலுள்ள இலங்கை வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

ஒருநாள் அப்பா ஒரு புதிய தகவலுடன் வந்தார் 'கிளிஅண்ணா பாதராக போகப் போறாராம்'. எனக்கு அது ஆச்சரியமாக இருந்தது.

சிறுவயதிலேயே குருத்துவக்கல்லூரிக்கு போய் குருவாக வந்தவர்களைத்தான் எனக்குத் தெரிந்திருந்தது. வங்கியில் பணியாற்றிக் கொண்டிருந்த கிளியண்ணா குருவாக வருவதற்காக, குருத்துவக்கல்லூரிக்குப் போகப் போகிறார் என்பது ஆச்சரியமாகத்தான் இருந்தது.

பின்பு நீண்டநாட்களுக்குப் பின் அவருடன் இரண்டு, மூன்று மாதங்கள் ஒன்றாக, ஒரே அறையில் இருக்க வேண்டிவந்தது. அப்போது ஒரு அருட்சகோதரனாக அவர் இளவாலையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அந்த நாட்களில் இந்திய இராணுவத்துக்குப் பயந்து பாடசாலைகளுக்கு மாணவர்கள் வருவதில்லை. மின்சாரம் இல்லை. தொலைக்காட்சி கிடையாது. அவருடன் பேசுவதே எனக்கான ஒரேயொரு பொழுது போக்காக இருந்தது. அவர் மிக எளிமையான ஒரு மனிதராக எனக்குத் தெரிந்தார்.

அதுவரை மிடுக்காக உடையணிந்து மோட்டார் சைக்கிளில் வங்கிக்கு போகும் கிளியண்ணா, ஒரு அதிகாரி போன்ற பிம்பத்தையே எனக்குள் உண்டாக்கியிருந்தார். அதற்கும் இப்போதிருக்கும் துறவிக்கும் எந்தத் தொடர்பும் தெரியவில்லை.

அவருடைய ஆங்கிலப்புலமை அதீதமானது. ஆங்கில அகராதியை அவர் மனனம் செய்து வைத்திருக்கிறாரோ என அடிக்கடி எண்ணத் தோன்றும். எமக்குத் தொடர்பில்லாத சொற்களைக்கூட அவர் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார். துறை சார்ந்த சொற்கள்கூட அவருக்குத் தெரிந்திருந்தது.

இன்னோர் விடயத்திலும் அவர் எனக்கு ஆச்சரியமூட்டினார். அவருக்கு இரண்டு கைகளாலும் எழுத வந்தது. கொப்பியில் இடது புறம் இடது கையாலும் வலது புறம் வலது கையாலும் எழுதுவார். இரண்டு பக்கங்களிலுமுள்ள எழுத்துக்களுக்கும் வேறுபாடு இருக்காது.

மரணம் அவரை (எனக்குத் தெரிந்து) இரண்டு தடவை முகர்ந்து பார்த்து விட்டு சென்றிருக்கிறது. 84இல் ஒரு நாள் கிளியண்ணா மினிவான் ஒன்றில் பயணித்துக் கொண்டிருக்கிறார். முதல் நாள் ஏதோவொரு தாக்குதல் நடந்திருக்க வேண்டும். திடீரென வானுக்கு முன் ஒரு கவச வாகனம் தோன்றுகிறது. கவசவாகனத்தின் மேலிருக்கும் பெரிய துப்பாக்கி சுடத் துவங்குகிறது. வாகனத்தில் இருந்தவர்கள் சிதறி ஓடுகிறார்கள்.

கிளியண்ணாவுக்கு கழுத்திலும், தோள் பட்டையிலும் பலத்த காயம். வீழ்ந்து கிடந்தவரை இராணுவத்தினர் கவச வாகனத்துக்குள் தூக்கிப் போடுகிறார்கள். கவச வாகனம் முகாமை நோக்கி ஓடத் தொடங்குகிறது.

கவசவாகனத்தில் ஓட்டுனரின் பகுதி தனியாக இருக்கும். பின்புறத்தில் கிளியண்ணாவுடன் ஒருவன் மாத்திரமே உட்கார்ந்திருக்கிறான். துப்பாக்கியுடன் வாகனத்தின் மேலே ஒருவன் இருக்கிறான்.

கிளியண்ணாவால் நகரமுடியவில்லை. இரத்தம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் நினைவிழக்கவில்லை. அருகேயிருந்த இராணுவத்தினன் இவரின் பைகளைப் பரிசோதிக்கிறான். அவருடைய செபமாலையைக் காண்கிறான். அவர் சொன்னபடி, அது அவனுக்குள் ஏதோவொரு மாற்றத்தை உண்டாக்கியிருக்க வேண்டும்.

இவரிடம் குனிந்து 'கண்களைமூடிக்கொண்டு அசையாமல் படுத்திரு' என்கிறான். பின் கவசவாகன ஓட்டுனரிடம் 'இவன் இறந்து போய்விட்டான். இவனை எறிந்து விட்டுப் போய்விடலாமா' என்கிறான். ஓட்டுனருக்கும் அது சரியாகப் பட்டிருக்கவேண்டும்.

வாகனத் தொடரணி நிற்கிறது. வேறொருவன் வந்து இவரின் காலைப்பிடித்து இழுத்து வெளியே எறியப் போகிறான்.

அருகே உட்கார்ந்திருந்தவன் அவனைத் தடுத்துவிட்டு இவரைத் தூக்கிச் சென்று அருகிலிருந்த பற்றையொன்றுக்குள் கிடத்துகிறான். இவரின் தலையில் முள் குற்றி விடக் கூடாதென்பதற்காய் இவருடைய செருப்பைக் கழற்றி இவருடைய தலைக்குக் கீழே வைக்கிறான். இவருடைய தோளில் இலேசாக விடை கொடுப்பது போலத் தட்டிவிட்டு போய் விடுகிறான். கவச வாகனத் தொடரணி புறப்படுகிறது.

அவர் அசைய முடியாது படுத்திருக்கிறார். அந்த வழியால் போனவர்கள் இவரைக்கண்டு, உயிர் இருக்கிறது என ஆச்சரியப்பட்டு மருத்துவமனையில் சேர்ப்பிக்கிறார்கள்.

இதனிடையே வானில் சென்றவர்கள் கிளியண்ணாவை இராணுவம் சுட்டுக் கொன்று விட்டதாக ஊரில் வந்து கூறுகிறார்கள். அவருடைய தாயார் வைத்தியசாலைக்கு ஓடுகிறார். பிணவறையில் மகனைத் தேடி அழுது கொண்டிருந்தவருக்கு, அவர் வாட்டில் இருப்பதாக ஒரு மருத்துவர் கூறுகிறார். (எப்படியிருந்திருக்கும்). மரணம் அவர் அருகே வந்து சென்றிருக்கிறது.

இதை அவர் இளவாலையில் இரண்டு, மூன்று தடவை கூறக் கேட்டிருக்கிறேன். அது மற்றவர்களுக்கு நம்பிக்கையூட்டும் ஒரு கதையாக இருக்குமே தவிர கதாநாயகத் தன்மை கொண்ட ஒரு திரைக்கதை போல இருக்காது!

( தொடர்ச்சி 30ம் பக்கத்தில்)

# துயர்பகிர்வு



அருட்தந்தை M.X. கருணாரத்தினம்
(கிளி) அடிகளார்

வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத் தலைவரும் மல்லாவி பங்குத்தந்தையுமான அருட்தந்தை M.X. கருணாரத்தினம் (கிளி) அடிகளார் தமிழீழம் மல்லாவியில் 20.04.2008 அன்று அகால மரணமானார்.

இவர் கரவெட்டியைச் சேர்ந்த காலம் சென்றவர்களான திரு. நீ. மரியாம்பிள்ளை, திருமதி. மேரி ராசமணி தம்பதிகளின் அருமை மகனும் ஜெகசோதி (கனடா), காலம் சென்ற குலரத்தினம், ஞானசோதி, இரத்தினசோதி (மல்லாவி), அரியரத்தினம் (ஜேர்மனி), காலம்சென்ற ஜெசுரத்தினம், ஜீவரத்தினம் (ஜேர்மனி), அருட்தந்தை ஞானரத்தினம், உதயசோதி(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வரதராசா(கனடா), சத்தியசீலி(கரவெட்டி), புஸ்பராசா, பத்திமா(ஜேர்மனி), ஜோய்(ஜேர்மனி), யேம்ஸ்(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

*தகவல்: வரதராசா 001-905-264-7616*
*ஜீவரத்தினம் - 00497031674392*
*உதயசோதி - 00940314871830*
*அன்ரனி - 00497031228727*

# World!

There are 195 countries in the world today.

Unless you don't count Taiwan…

Taiwan is not considered an official country by many, which would bring the count down to 194 countries. Although Taiwan operates as an independent country, many countries (including the U.S.) do not officially recognize it as one. Because the People's Republic of China considers Taiwan a breakaway province of China, countries who wish to maintain diplomatic relations with China have had to sever their formal relations with Taiwan (more than 100 countries, however, have unofficial relations with Taiwan).

**How many countries belong to the United Nations?**

192 countries are UN members. The exceptions are Taiwan (in 1971, the UN ousted Taiwan and replaced it with the People's Republic of China) and Vatican City. Kosovo is not yet a member. The newest UN members are Switzerland (2002) and Montenegro (2006).

**What are the world's newest countries?**

The world's newest country is Kosovo, which became a country in February 2008, after splitting off from Serbia. Before that, the newest country was Montenegro, which became a nation in 2006 after also gaining independence from Serbia. Since 1990, 28 new nations have come into being. Many of these emerged from the collapse of the Soviet Union (14 countries) and the breakup of the former Yugoslavia (7 countries). See our Guide to New Nations.

**Are there still any countries that have colonies?**

There are 61 colonies or territories in the world. Eight countries maintain them: Australia (6), Denmark (2), Netherlands (2), France (16), New Zealand (3), Norway (3), the United Kingdom (15), and the United States (14). See Territories, Colonies, and Dependencies for a list of the world's colonies and what countries administrate them, p. 663.

**Are there still territories in the world that are claimed by more than one country?**

There are six major disputed territories in the world: the Gaza Strip and the West Bank, the Paracel Islands, Spratly Islands, Western Sahara, and Antarctica (about a dozen nations have laid claims to portions of it). In addition, there are innumerable other territorial disputes throughout the world, many of which had resulted in ongoing armed conflicts.

## Book Review: Hazel's Phantasmagoria by Leander Deeny

Have you noticed that it's always much easier to be nice to someone else when you are feeling happy yourself? And if you're feeling really unhappy for some reason, you are more likely to bite someone else's head off?

I wonder what you'll make of Hazel when you meet her in this story. Sometimes she seems to be quite a nice person, and sometimes she is quite horrid.

Much to Hazel's disgust, she's going to stay with her Aunt and cousin in the country for a couple of weeks while her parents go off on holiday all by themselves! She doesn't like Aunt Eugenia because well, because Eugenia doesn't seem to like her:

'That was a very nice dinner, Auntie,'

Eugenia did not look impressed. She stared at Hazel threateningly, and drank her tea as if Hazel hadn't spoken at all.

And Hazel isn't really sure if she likes cousin Isambard or not. He actually tries to make friends with her but he is deeply weird, as she discovers when he takes Hazel to see his pets:

சமீபகாலத்தில் பல இலங்கைத் தமிழர்கள் 39ஆம் விதியின் அடிப்படையில் இந்நீதிமன்றிற்கு விண்ணப்பம் செய்து தங்களின் நாடுகடத்தும் உத்தரவை தடை செய்யுமாறு கோரியுள்ளார்கள். இவற்றை நாம் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றோம். இதன் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்த விண்ணப்பங்கள் அத்தனைக்கும் 39ஆம் விதி பாவிக்கப்பட்டு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே இதில் முழுமையானதும், முடிவானதுமான தீர்ப்பை நீதிமன்று எடுக்கும் வரை தொடர்ந்தும் 39ஆம் விதிப்படி தடை உத்தரவு போடுவதாக தீர்மானித்துள்ளோம். இந்த நிலமையில் தமது எதிர்பார்ப்பும் வேண்டுகோளும் என்னவெனில் ஐக்கிய சாம்ராஜ்ய அரசாங்கத்தால் நிராகரிக்கப்பட்ட தமிழ் அகதிகளை நாடுகடத்தும் உத்தரவை தவிர்க்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது. ஆனால் இதற்கு பிரித்தானிய அரசாங்கம் செவிசாய்க்கவில்லை.

இந்த நிலைமையில் முன்பு கூறியவாறு இலகுவானதும், துரிதமானதும், செலவு குறைந்ததும், கூடிய பலாபலன் கொடுக்கக் கூடிய வழி ஒன்று உண்டு. அதே நேரத்தில் பூரணபலன் கொடுக்கும் என்று ஆணித்தரமாக கூறமுடியாது. தற்காலிகமாக நிச்சயமாக பலன் கிடைக்கும்.

இறுதி முடிவு இந்த ஆண்டு யூன் மாதத்தில் ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றினால் (European Court of Human Rights) வழங்கப் படுமென கூறப்பட்டது. ஆனால் தற்பொழுது இது செப்டம்பர் மாதத்திற்கு பிற்போடப்பட்டுள்ளதாக அறிகின்றோம். பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்

ஆகவே தற்பொழுது நாடு கடத்தும் உத்தரவை பெற்றவர்கள், உடனடியாக ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றிற்கு மனித உரிமை சட்டத்தின் (Human Rights Act.1998 U.K) அடிப்படையில் அத்தோடு ஐரோப்பிய மனித உரிமை கோட்பாடு (European Convention on Human Rights) மீறல் அடிப்படையில் 39ஆம் விதியின் கீழ் விண்ணப்பம் செய்ய முடியும்.

உண்மையில் இந்நீதிமன்றில் விண்ணப்பம் செய்ய முன் பிரித்தானிய நாட்டு சட்ட திட்டங்களுக்கு அமைய இந்நாட்டு நீதிமன்றில் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதே நேரத்தில் நீதி மீளாய்வினால் (Judicial Review) பயன் கிட்டாது. அதாவது ஒரு துரிதமாக முடிவைப் பெற்று நாடுகடத்தல் உத்தரவை தடுக்க முடியாது என்று கூறி விண்ணப்பம் செய்ய முடியும்.

அதே நேரத்தில் பிரித்தானிய நீதிமன்றில் முடிவு செய்து ஆறு மாதத்திற்குள் இவ்வாறு விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். அல்லது எந்தக் காரணத்திற்காக விண்ணப்பம் செய்யப் படுகின்றதோ அது ஆறு மாதத்திற்குள் நடந்திருக்க வேண்டும். இது மிக முக்கியமானது.

இந்த விண்ணப்பம் செய்யும் போது பல விபரங்கள் கொடுக்கப்பட வேண்டும். அதன் அடிப்படைக் காரணம், எவ்வாறு மனித உரிமை கோட்பாடு மீறப்பட்டுள்ளது போன்ற விபரங்கள் கொடுக்கப்படவேண்டும். இவ்விண்ணப்பம் தொலை நகல் மூலம் செய்யலாம். வேலை நாட்களுள் விண்ணப்பம் செய்யப்பட்டால் 24 மணித்தியாலத்திற்குள் முடிவு அறிவிக்கப்படும்.

விண்ணப்பம் அதற்குரிய படிவத்தில் மட்டும்தான்செய்ய முடியும். விண்ணப்பம் செய்யும் பொழுது நிறுத்தும் உத்தரவு (Injunction) கோரப்படவேண்டும். இந்த உத்தரவு தான் நீதிமன்றினால் 24 மணித்தியாலங்களுக்குள் கொடுக்கப்படுகின்றது. அதன் பிரதி தொலைநகல் மூலம் விண்ணப்பதாரரால் உள்நாட்டுக் காரியாலம் (Home Office) தடுப்பு முகாம் (Detention Centre) ஆகியவற்றிற்கு நேரடியாக அனுப்பி வைக்கப்படும். ஆனால் விசாரணையும், இறுதித்தீர்ப்பும் மாதங்கள் அல்லது வருடங்களும் எடுக்கக்கூடும். இதற்குரிய சட்ட ஆலோசனை பெறுவது மிகவும் அவசியமாகும். விண்ணப்பத்தை நீதிமன்று ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் (Inadmissible) இத் தீர்ப்பிற்கு எதிராக மேன்முறையீடு கிடையாது.

விண்ணப்பத்தை ஏற்பதற்குரிய மூன்று முக்கிய அம்சங்களாவன:

ஐரோப்பிய மனித உரிமை கோட்பாடு ((European Convention on Human Rights) ஏதாவது ஒரு சரத்தை மீறியதால் பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஐக்கிய சாம்ராஜ்ய நீதிமன்றில் முதல் விண்ணப்பம் செய்து அவை பலன் அற்றதாகவோ அல்லது அதனால் ஆகக்கூடியது கோட்பாட்டிற்கு முரணானதும் என்று ஒரு பிரகடனம் மட்டும் தான் கிடைக்கும் என்பது தெளிவாயிருக்கும் போது

தீர்ப்பு கிடைத்த அல்லது சம்பவம் ஏற்பட்ட 6 மாதத்திற்குள் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்.

அனேகமான விண்ணப்பங்கள் விசாரணையின்றி, பத்திரங்களின் அடிப்படையிலும் எழுத்தில் செய்யப்பட்ட பிரதிநிதித்துவ ரீதியிலும் தீர்மானம் எடுக்கப்படும். சில சந்தர்ப்பங்களில் முழு விசாரணை செய்யப்பட்டு தீர்ப்பு கொடுக்கப்படும்.

தற்போதைய நிலையில் புதிதாக வரும் இலங்கைத் தமிழ் அகதி விண்ணப்பம் எவ்வாறு அணுகப்படுகின்றது என்ற கேள்விக்கான பதில் சட்டமுறையில், பெரியளவு மாற்றம் இல்லை. ஆனால் 2006ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கை வெள்ளைப்பட்டியலில் (White List) இருந்து நீக்கப்பட்டது.

இலங்கையின் மனித உரிமை மீறல் உச்ச நிலையில் இருப்பதன் காரணத்தால் கொள்கை அளவில் இலங்கைத் தமிழர் அகதி விண்ணப்பம் கோரும் பொழுது அவர்கள் நம்பகத்தன்மை (Credibility) பாதிக்கப்படாவிட்டால் அடிப்படைக் காரணம் அற்ற (Unfounded) மனு என அத்தாட்சி படுத்தப்பட்ட முந்தைய முறை கைவிடப்பட்டுள்ளது. ஆனால் தற்பொழுதும் சில சந்தர்ப்பங்களில் தடுத்து நிறுத்தப்பட்டு (Detention) துரித முறையில் (Fast Track) விசாரிக்கப்படுகின்றார்கள். அதே நேரத்தில் ஓரளவிற்கு அணுகுமுறையில் கடினமற்ற முறையில் முடிவு எடுக்கப்பட்டு மனிதாபிமான முறையில் பாதுகாப்பு 3 வருடங்களுக்கு கொடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு விண்ணப்பமும் தனிப்பட்ட முறையில் அலசி ஆராயப்பட்டு துன்புறுத்தல், கைது செய்யப்படல், காயம், தழும்பு இருத்தல், திருப்பி அனுப்பப்பட்டால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் அல்லது கைது செய்யப்பட்டு துன்புறுத்தப்படலாம் என்ற ஆதாரம் இருப்பின் இவ்வாறு பாதுகாப்பு கொடுக்கப்படுகின்றது.

அத்துடன் சென்ற ஆண்டு அகதிகுடிவரவுநீதிமன்றினால் Asylum and Immigration Tribunal) LP என்ற வழக்கில் ஒரு முக்கியமான தீர்ப்பு வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் 12 விடயங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுமென கூறப்பட்டது. அது மூன்று நீதிபதிகளினால் வழங்கப்பட்ட தீர்ப்பாகும். இந்தத் தீர்ப்பை பொறுத்தவரையில் எனது குறிப்பு என்னவென்றால் இந்த 12 விடயங்களும் நிரூபிக்கப்படவேண்டுமா அல்லது சிலது மட்டும் நிரூபித்தால் போதுமா என்பது பற்றியோ அல்லது இவற்றில் எது முக்கியமானது என்றோ தெளிவாக கூறப்படவில்லை. ஆனாலும் இதன்பின்பு உயர் நீதிமன்றில் (High Court) இத்தீர்ப்பு ஆராயப்பட்டு வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுதான் தற்போதைய நிலமையாகும்.

*குமாராசாமி சிதம்பரப்பிள்ளை*
*தலைவர், தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு*

Tamsons
Accountancy & Tax Consultancy Ltd.



* Accountancy & Auditing
* Business Start up Advice
* Business Plans & Cash Flow Forecasts
* Personal tax Affairs & Self Assesment
* Company Tax Affairs & Company Tax Return (CT600)
* Preparing VAT, Payroll for the Sole Trader
* Partnership & Limited Companies

Company Formation *
Attending VAT & PAYE visits *
CIS Voucher & Construction *
Industry Services *
Tax Investigations *
Solicitors Accounts *
& Accounts Reports *

65, Southlands Road, Bromley, Kent BR2 9QR
Tel: 020 8313 0800

# தமிழர் மெய்வல்லுநர் போட்டி - 2008










முதன் முறையாக பிரித்தானியாவின் அனைத்துப் பாகங் களையும் உள்ளடக்கியதான பிரித்தானிய தமிழர் மெய்வல்லுநர் போட்டி லண்டன் வடகிழக்கில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற Lee Valley Athletic centrey இல் நடைபெற்றது.

பிரித்தானியாவின் பல பகுதிகளிலும் இருந்து கலந்து கொண்ட தமிழ் மக்கள் வயது வித்தியாசமின்றி போட்டிகளில் உற்சாக மாகக் கலந்து கொண்டனர்.

ஒரு பேப்பர் இல் வெளியாகும் நிகழ்வுகளின் முழுமையான படத் தொகுப்புகளை www.britishtamil.com என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்.


## MARKANDAN & UDDIN SOLICITORS

Solicitors & Administrators for Oath

M Markandan LLB A Uddin ( Hons ) MA LLB Phd-RFL

Tamil House, 720 Romford Rd, London E12 6BT

**We specialise in ..**

For all your needs in immigration ( All aspects upto house of lords ), Commercial & Residential Conveyencing, Employment, Civil Litigation, Consumer Problems, Last will, Power of Attorney, Spnsorship Declaration, HSMP, Workpermits

MARKANDAN & UDDIN

### விவாக விண்ணப்பம்

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்தநாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைப்பின் முன் அனுமதி பெற்றிருத்தல் வேண்டும் மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

### அகதி விண்ணப்பம்

14 வருட 10 வருட அல்லது 7 வருட வதிவிடதகமை விண்ணப்பங்கள் பிரஜாவுரிமை விண்ணப்பத்திற்காக ஆங்கில மற்றும் வாழ்க்கை முறை தேர்ச்சி சம்மந்தமான ஆலோசனைகள்

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயமடைந்திருந்தால் நட்ட ஈடு கோருவது சம்பந்தமான விடையங்கள் No win no fee அடிப்படையில்

**tel 020 8514 8300 / 07830 285 634 | fax 020 8514 8381**
**email info@msssolicitors.com**
**Markandan : 07956 386 576 | Uddin : 07957 455 670**

Markandan & Uddin Solicitors

# உள்ளரங்க விளையாட்டு விழா - 2008



தமிழர் நல வாழ்வு நிறுவனத்தின் ஐக்கிய இராச்சியக் குழுவினர் (Tamil Health Organisation - United Kingdom) மூன்றாவது ஆண்டாக நடத்திய உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள் கடந்த ஏப்ரல் 20ம் திகதி Dulwich College இல் நடைபெற்றது.

பல்வேறு வயது மட்டத்தினரிடையே உதைபந்தாட்டம், நீச்சல், Badminton, Net ball, Chess ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன.

காலை முதல் மாலை வரை நடைபெற்ற இந்தப் போட்டி நிகழ்ச்சிகளில் சிறுவர் முதல் பெரியவர் வரை உற்சாகமாகப் பங்கு பற்றியதைக் காணக் கூடியதாக இருந்தது.

நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த விளையாட்டு நிகழ்வுகளில் கலந்து கொண்ட போட்டியாளர்களும் தங்களுக்குள் சிறந்த புரிந்துணர்வுடன் போட்டிகளில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

வெற்றியாளர்களுக்கான பரிசளிப்பின் போது சதுரங்க போட்டியாளர்களுக்கு மட்டும் வெற்றிக் கிண்ணம் எதுவும் வழங்கப்படாத காரணத்தால் போட்டி ஏற்பாட்டாளர்களால் சதுரங்கம் புறக்கணிக்கப்படுகிறதா அல்லது சதுரங்கத்தில் வெற்றியீட்டியவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்களா என்ற ஆதங்கம் சில வெற்றியாளர்களிடத்தில் இருந்ததும் அவதானிக்கப்பட்டது.

# மகிழம் பூக்கள்- 2008



புலோலி புற்றளை மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினரின் பல்சுவைக் கலை நிகழ்ச்சியான மகிழம்பூக்கள் - 2008 நிகழ்வு கடந்த 19ம் திகதி சிறப்பாக நடைபெற்றது.

பிரபல பின்னணிப்பாடகர்கள் முகேஷ், கல்பனா ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில் உள்ளூர் கலைஞர்களது பல கலைப் படைப்புகளும் சிறப்பாக மேடையேறின.

## HTA – ELDERS CELEBRATE CULTURAL EVENT




The elders of the Harrow Tamil association celebrated a cultural event on 29th of March at Elm Church Hall, North Harrow. The event commenced with the lighting of the traditional oil lamp by the distinguished guests. The programme started with the sweet musical recital by Dr.Anandasayanans group.

The senior citizens staged two short comedies which made the audience rock with laughter. Mrs. S.Ramalinga Thevar was an exceptional performer who received the best performance prize. The music presented by the Group enriched the programme. The compere Mr.Logan presented the programme very methodically to attract the audience. The celebration ended with a sumptuous lunch.

This firm is authorised by the legal services commission to provide free legal advice for you for all types of criminal matters.

- Free 24 Hrs Police Station Attendance
- Magistrates, Crown Court & Court of Appeal Representation
- Terrorism Cases
- Serious Crime, Murder/Attempted Murder, GBH
- Serious Fraud, Money Laundering, Major Scale Drug Importation
- Sexual Offences Including Rape
- HM Customs & Excise Cases
- Appeal & CCRC Cases
- Prison Law Representation

Sponsorship and Power of Attorney

We speak Tamil, French and Mauritian Creole

Criminal Defence Service

RAJ LAW SOLICITORS

Community Legal Service

"Specialist advice on all legal matters in a friendly environment"

உங்களுக்கு என்ன இடர் வந்தாலும்
சட்டத்துடன் அதனைச் சந்திக்க
நட்புணர்வுடன் நாம் இருக்கின்றோம்

24 hour police station emergency service

Experts in Criminal Defence Service (UK)

M: 07947 641 876 / 07956 067 587 T: 020 8516 7730/020 3133 0000
Trident Business Centre, 89, Bickersteth Road, Tooting Broadway, London SW17 9SH

Immigration Law Specialists

- Fresh Asylum Application / Rule 39 European application
- Entry Clearance /Overseas Appeal
- Student Visa, Extension & Appeal
- Judicial Review & Emergency Injunction Application (24 Hrs)
- Work Permit
- Highly Skilled Migrant Programme
- Family & Other Dependant Relatives' Visa
- EU Dependant Visa/Marriage Application
- Investor / Business Visa, Civil Partnership Visa
- Indefinite Leave to Remain under the 5,7,10 & 14 year rules

Property

- We deal with Residential (Flats, House) and Commercial Conveyancing
- Purchase of Off Licence, Restaurants, Groceries, Right to buy

நூல் விமர்சனம்

# நெருப்புப் பூக்கள்

முல்லை அமுதன்
ஒரு பேப்பருக்காக



வெளியீடு : நிலவரம் | சுவிஸ்.

ஈழத்துக் கவிதை உலகின் இன்னொரு விசையை கல்லடி றொபட் எழுதியுள்ள 'நெருப்புப் பூக்கள்' எனும் கவிதைநூல் எமக்குத் தந்துள்ளது. ஈழத்து போர்ச்சூழல், கைது, காணாமல் போதல், பாலியல் வன்முறை இன்னோரன்ன பிற இழப்புக்களின் மத்தியில் தனிமனித உணர்வுகள் எழுச்சிபெற்று படைப்பாக்க முயற்சியாக வந்து விழுவதைப் பார்க்கிறோம்.

'சிறையில் பூத்த உணர்வின் ஒளி' எனும் கவிதை நூலை 2005ல் வெளியிட்ட கல்லடி றொபட் 2000 ஆண்டுமுதல் பூசா முகாமில் கைதியாக விசாரணையின்றி இருப்பதின் சோகம் அவரின் கவிதைகள் ஊடாக நமக்குப் புரிகிறது.

தமிழக சிறையில் இருந்து கொண்டே படைப்பாக்க முயற்சிகளை வெளிக்கொண்டு வரும் சாந்தன் அவர்களையும் நினைத்துப் பார்க்கிறேன்

1983ற்குப் பிறகான இளைய தலைமுறையினருக்கிடையே வீச்சாக வந்த போராட்ட உணர்வு ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற நிலை ஏற்பட்டது. அதன் வளர்ச்சியின் புதிய பரிணாமமாக இன்றைய போர்க்கால இலக்கியமுமாயிற்று.

1977 ல் மட்டக்களப்பில் பிறந்த றொபட் தான் பிறந்த ஊரான கல்லடியையும் இணைத்து எழுதி வருகிறார். இவரின் ஆக்க இலக்கியத்திற்கு ஈழநாதம், மட்டக்களப்பு ஈழநாதம், உதயன், சுடரொளி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகள் களம் அமைத்துக் கொடுத்துள்ளன. இவரின் கவிதைகளை ஒருமுகப்படுத்திப் பார்க்கும் போது ஒரு புதிய பரிமாணமாய் நகர்வதைக் காணக்கூடியதாக உள்ளது. சிறீலங்கா வதைமுகாம் ஒன்றினுள் வதைபடும் அவலங்களின் சோகத்துடன் எழுதும் போது வாசகனை சிந்திக்கவும் உணர்ந்து கொள்ள வைக்கவும் முடிகிறது.

எத்தனை எத்தனை
கொடுமைகள்
எத்தனை எத்தனை
அவலங்கள்
தாங்க முடியாத
வேதனைகளுக்குள்
தத்தளிக்கிறதே எம்மினம்
இன்னும் ஏன் பொறுமை
காத்துக்கொண்டிருக்கிறீகள்'

இப்படித் தொடர்கிறது இறுதிமூச்சு எனும் கவிதையில்.

படகேறி
நீ விரும்பிய இடத்தில்
மீன் பிடிக்கலாம்
கட்டுப்படுத்த
யாரும் இருக்கமாட்டார்கள்
உன் வயல் நிலங்களில்
முற்போகம் செய்யலாம்
மிதி வெடிகளை விதைக்க
யாரும் வரமாட்டார்கள்'

அனைத்தும் சுதந்திர தமிழ் ஈழத்தில் அனுமதியுண்டு என நண்பனை விழிக்கிறார். இது எமக்கும் பொருந்தும்.

வார்த்தைகளைக் கோர்க்கின்ற விதம் அலாதியானது. அது களத்தில் நிற்பவர்களுக்கு நிறையவே உண்டு. வலிகளின் வடுக்கள் றொபட்டிற்கு அதிகம் இருப்பதால் அவரின் கவிதைகளின் பார்வை அல்லது ஆழம் எம்மை ஊடுருவிச் செல்கிறது.

திசைகளைத் தொடுகின்ற முயற்சி ஈழத்துக் கவிதைகளில் அதிகம். தனது விடுதலைக்கு மேலாக நாட்டின் விடுதலையை நேசிக்கின்ற ஒரு கவிஞனின் கவிவரிகள் சொல்லுகின்ற சேதிகள் எம்முன்னால் வேண்டுகோளாகவும் வைக்கப்பட்டுள்ளன. துடைத்தெறிந்துவிட முடியாது.

இந்நூல் வெளிவருவதில் பலருக்கு பங்குண்டு. இயல் விருதுபெற்ற திரு. பத்மநாப ஐயர் முதல் கொண்டு கவிஞர் கி.பி.அரவிந்தன் ஊடாக சுவிஸ் 'நிலவரம்' பத்திரிகைக்குழுவினர் வரை விரிகின்றது.

சுவிஸ்சிலும் ஜேர்மனியிலும் வெளியீடு கண்ட இந்நூல் பலரின் பார்வைக்குக் கிடைப்பதில் பெருமையாகவும் இருக்கிறது. புலம்பெயர்ந்தோர் தம் வாழ்வுக்கான வழித்தடங்களைத் தொலைத்தவர்கள். ஆனால் களத்தில் நிற்பவர்கள் உயர்ந்தே நிற்கிறார்கள். சோகத்தினையும் சுகமாக்கி புதிய புதிய வடிவமாய்.. அவர்கள் போராளிகளாய். படைப்பாளிகளாய்...

வாழ்த்துரை, வாழ்த்துச்செய்தி, ஆசிச்செய்தி எனும் பங்களிப்புகளுக்கப்பால் விடுதலைத்தீ எனும் கவிதை தொடக்கம் ஒவ்வொரு கவிதைகளுக்கு ஏற்ற தலைப்புகள் இடப்பட்டு தேசியத்தலைவனை வாழ்த்துகிறோம் எனும் கவிதைவரை கணினி இடல், அச்சிடல் என்பவற்றில் தீவிர கவனம் எடுத்து பிழையின்றி அழகிய வடிவத்தில் அச்சிட்டுள்ளார்கள்.

சர்வ வல்லமையுள்ள உலக அரசுகள் இன்னமும் விடுதலைப்போராட்டத்திற்கு வரைவிலக்கணம் தரத் தவறிவிட்டன.

உன் தொண்டைக் குழியை
நெரித்துக் கொண்டே
சமாதானம் பேச
அழைப்பேன்
நீ சம்மதிக்க வேண்டும்
நீ மறுத்தால்
உன் மீது
பயங்கரவாதி
முத்திரை குத்தி
சர்வதேசத்தின் முன்
இழுத்துச் செல்வேன்
இரத்தம்
சொட்டச் சொட்ட..'

என பயங்கரவாதி எனும் கவிதையில் சொல்கிறார்.

தனி மனிதன் மீது அல்லது சமூகத்தின் மீது வன்முறைகள் அதிகரிக்கும் போது அது வெடித்துப் புயலாய் எழும். அரச இயந்திரம் தன் பயங்கரவாதத்தினைக் கட்டவிழ்த்து விட்டு தனிமனிதனை அல்லது சமூகத்தினை பயங்கரவாதிகளாக்கும் அல்லது பயங்கரங்கள் செய்யத் தள்ளிவிடும். எம் ஈழப்போராட்டமும் அப்படியே.

சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு எமக்கான விடிவு வராதா? என்கிற ஏக்கம் பலரிடம் இருந்தது. மாறாக உலக நாடுகளின் சதிமுயற்சி சிறீலங்கா அரசின் பாசிசவாதத்திற்கு துணை போக சமாதானம் பொய்யாகிப் போனது. இதுவே கவிஞனின் மனதில் இரத்தக் கண்ணீர் வடிக்க வைத்துள்ளது.

இங்கு றொபட்டிடமும் நிறையக் கனவுகள், ஏக்கங்கள், சமாதானம், விடுதலை, சுபீட்சம் என்கிற பிரார்த்தனைகள் உள்ளன என்பதை அவரின் அனைத்துக் கவிதைகளிலும் காணக்கூடியதாக இருக்கிறது.

வலிக்கவில்லை என்றால் மனிதர்களே இல்லை.

சொகுசாய் வாழ்கின்ற நாம் எனியாவது திரும்பிப் பார்த்தால் றொபட்டின் கனவுகள் ஜெயிக்கும்.

சிங்களன் பூமி பொடிபட எம் மண்ணின் புழுதியில் புதிய விதைகளாய் றொபட்டின் கவிதைகளையும் விதைப்போம்.

Goran Gates
ESTATE AGENTS

£0 Broker Fee

No broker fee for any type of mortgages/remortgages/buy to let/ commercial/secured loans/

உங்கள் வீட்டுக்கடன் தேவைகளுக்கு நாங்கள் எந்தவிதமான தரகர் கட்டணமும் அறவிடுவதில்லை

For friendly service, please call Sanjiv or Mohan:
020 8429 0033
Harrow, Rayners Lane சரவணபவன் உணவகத்திற்கு அருகாமையில்

Goran Gates
421, Alexandra Avenue
Rayners Lane, Harrow,
Middlesex, HA2 9SG.

Estates: 020 8429 2030
Mortgages: 020 8429 0033
Travel: 020 8429 2080
Construction: 07792 800 731
www.gorangates.co.uk

YOUR HOME MAY BE REPOSSESSED IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON YOUR MORTGAGE.

# வருசப் பிறப்புக் கொண்டாட்டம்

சித்திரை வருஷப்பிறப்பு. இங்கு உள்ள ஆலயங்களில் எல்லாம் எள்ளுப் போட்டால் எண்ணையாகி விடுகிற அளவுக்கு சனநெரிச்சல். வருஷப்பிறப்பு என்றால் ஆலய தரிசனம். கைவிசேடம் என்று காசு வாங்கிற கொடுக்கின்ற நாள் என்ற அளவுக்கு வருஷப் பிறப்பு கொண்டாட்டம் சுருங்கி விட்டது. ஊரிலும் இந்த நிலைதான். நித்திய கண்டம், உணவுப் பொருள் திண்டாட்டம் என்ற போர்ச் சூழல் நிலைப்பாட்டில் கொண்டாட்டத்துக்கும் வழி இல்லை. ஆனாலும் ஏதோ ஒரு அவசிய சடங்காக வருஷப்பிறப்பு அடையாளங்கள் தொடர்கின்றன.

'எங்கட சின்னப்பிள்ளைக் காலத்தில எப்படி கொண்டாடினம்' என்று அந்தநாள் நினைவை இரை மீட்பதில் ஒரு ஆனந்தம். பெருமூச்சு. பொங்கல், தீபாவளி கொண்டாட்டங்களைப் போல வருஷப்பிறப்பு வருவதை புதுப்பட வெளியீட்டு விளம்பரங்களும், யாழ்ப்பாண சேலைக் கடைகள் முன்புறம் காணப்படும். மலிவு விற்பனை விளம்பரங்களும் கலகலப்பைக் கூட்டும்.

சுண்ணாகச் சந்தை மற்றும் கொடிகாமம், சங்கானை, கிளிநொச்சி சந்தைகளும் காண்பித்துவிடும். போர்த் தேங்காய் அடிப்போட்டியும் ஒரு முக்கிய விளையாட்டு. போர்த் தேங்காயை தயார்படுத்துவது என்பது வருடப்பிறப்புக்கு ஒரு மாதத்துக்கு முன்பதாகவே எங்கள் சிறுபிள்ளைப்பராய வேலை.

சிரட்டை கனத்த இருபுறமும் கூர்மையான கைக்கு அடக்கமாக சின்னதான, சூரியகாந்தி இனத்தேங்காய் வளவுக்குள் எந்த தென்னையில் இருக்கிறது என்பதை ஏற்கனவே குறித்து கொள்வோம். தேங்காய் உரிக்க வளவில் எந்நேரமும் தயாராக குத்தப்பட்டிருக்கும் அலவாங்கோடு போராடி தேங்காயை உரித்து தும்பு அகற்றி ஓரளவு ஈரமான நிலத்தில் தாட்டு வைத்தால் சிரட்டை இன்னும்கூட வைரம் ஏறும் என்பதற்காக இந்த ஏற்பாடு.

பலகாரச் சூடும் வீட்டுக்கு வீடு நான்கு ஐந்து நாட்களின் முன்பே ஆரம்பமாகி விடும். சிப்பி, முறுக்கு, அரியதரம், பால்ரொட்டி என்றும் பகோடா என்றும் நாள்பட வைத்து உண்ணக் கூடிய பலகாரங்கள்தான் தயாராகும்.

வாழைத்தடலை வெட்டி, உள்புற வெள்ளை நார்ப் படலத்தை உரித்து எடுத்தால் உள்ளே காணப்படும் சதுரப்படலத்துள் குழைத்த மாவில் சிறு உருண்டையை அமுக்கி வடிவமாக்கி இரும்புச் சட்டிக்குள் கொதிக்கும் எண்ணைக்குள் போட்டு சிற்பி பணியாரம் சுடுவது முறை. மா, வாழைத் தடலோடு ஒட்டாமல் எண்ணை பூசி, அளவான மா உருண்டையை வாழைத்தடலில் அமுக்கி, வடிவமாக்கி சுளகில் வைப்பது அம்மாவுக்கு உதவியாக நாம் செய்யும் வேலை.

சீனி அரியதரம் சுட்டு முடிய எண்ணை வடியவைப்பதும், சுட்ட பணியாரம் தண்ணீரோ, காற்றோபட்டு பழுதாகிப் போகாமல் தகர டப்பாவுக்குள் அடைத்து வைப்பதும், பலகார மணத்துக்கு பூனை பரணில் பாய்ந்து தகரடப்பா சத்தத்தோடு விழுந்து அர்த்தசாமத்தில் எங்களை எழுப்புவதும் வருஷப்பிறப்புக்கால சங்கதிகளில் ஒன்றுதான்.

'முழசுவளம்' பார்ப்பதைப்போல கை விசேஷம் வாங்குவதும் சித்திரை வருஷப்பிறப்பு சடங்கின் முக்கிய அம்சம். அன்றாடம் நித்திரையால் எழும்பியதும் அல்லது வீட்டுக்கு வெளியே வந்து வீதியில் இறங்கும் போதும் நல்ல சகுனம் பார்ப்பது அந்த நாட்களில் 'முழிசுவளம்'என்ற பெயரில் உள்ள வழக்கம்.

இதேபோல வருஷம்பிறந்து முதல்முதல் அந்த வருஷம் பலன் நல்லாக அமைந்த நட்சத்திரகாரர் கையில் கைவிசேடம் வாங்கி கொடுக்கல் வாங்கலை ஆரம்பிப்பதும், அட்டமி, நவமி இல்லாத நல்ல நேரம் பார்த்து உறவினர் வீட்டுக்குச் செல்வதும் வருடம் பிறந்தால் கடைப்பிடிக்கப்படும் வழக்கம்.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: ப.வை. ஜெயபாலன்

வீட்டு சாமிப்படத்தின் முன்னால் வெற்றிலையில் நெல்மணிகள், மஞ்சள் துண்டு கற்கண்டு துண்டு என்பனவற்றோடு ஒற்றை விழும் கணக்கில் காசும் வைத்து கைவிசேட வெற்றிலைகள், வருடம் பிறக்கும் முன்பே தயாராகிவிடும். வருஷம் பிறந்தபின் கைவிசேட நேரம் வரும்வரை பணப்புழக்கம் இருக்காது. நல்ல நேரம் பரர்த்து நல்ல ஒருவர் கையால் வியாபாரத்தை ஆரம்பித்தால்தான் அந்த வருடம் முழுவதும் நன்றாக அமையும் என்பது பெட்டிக்காரன் முதல் தொழிற்சாலை அதிபர்வரை கொண்டுள்ள நம்பிக்கை.

கைவிசேஷம் தருகிற மாமாமார், சித்தப்பாமார் உத்தியோகத்துக்கு லீவு போட்டுவிட்டு ஊருக்கு வருவதும், அவர்கள் தரும் கைவிசேட சில்லறைக் காசுகளால் எங்கள் புதுக் காற்சட்டை பொக்கற்றுக்குள் நிறம்பி கனத்து குலுங்கி சத்தம் எழுப்புவதும் அந்தப்பராயத்தில் எங்களுக்கு ஒரு பெருமிதம்.

வருஷம் பிறந்தால் ஊர் சாத்திரிமாருக்கும் வேலையும் வருமானமும் அதிகரிக்கும். நினைத்த காரிய சாத்திரம் சொல்கின்ற சின்னத்தம்பு சாத்திரியார் நித்தமும் கள்ளுக் கொட்டில்தான் கதி என்று இருப்பார்.வருஷப்பிறப்பு வந்தால் சாராயம் விற்கிற தம்பித்துரை அண்ணை கடைப்பக்கம் அடிக்கடி போய் முகத்தைக் கோணியபடி வாயை சால்வைத் துண்டால் துடைத்துக் கொண்டு வெளியே வருவார்.

வருஷப்பிறப்பு காலத்தில் சாராயம் சாத்திரியாருக்கு கடனுக்கு கொடுத்தாலும் காசு ஒழுங்காவரும் என்பது தம்பித்துரை அண்ணைக்கும் தெரியும். ஒரு ரூபாவோ இரண்டு ரூபாவோ வெற்றிலையில் வைத்து சாத்திரியாரிடம் ஒவ்வொருவருடைய பலனையும் கேட்பதில் வீட்டுக்கு வீடு ஆர்வம்.

வருஷப்பிறப்பு தினம் நல்ல நேரம் பார்க்காமல் வியாபாரம் ஆரம்பிப்பவர்கள் தியேட்டர்காரர் மட்டும்தான். ராணி சினிமாவில் எம்.ஜி.ஆர் படம், வெலிங்றன் தியேட்டரில் சிவாஜி படம், வின்ஸரில் 'ஏ' அடையாளம் போட்ட வயது வந்தவர்களுக்கு மட்டுமான தமிழ்படம் என புதுப்பட வெளியீடுகள் களைகட்டும்.

காலைப் பத்தரைக்காட்சி, இரண்டரை மணி மெற்னி, மாலை ஆறரை, இரவு பத்தரை காட்சி என்ற முறை மாறி 'ஹவுஸ்புல்' அறிவித்தலோடு ஐந்து காட்சிகள் வரை ஒவ்வொரு வருஷப்பிற்ப்பு தினத்திலும் நடக்கும். திதி எப்படி அமைந்தாலும் வருஷப்பிறப்பு பார்த்து தேர்திருவிழா காண்பதும் மானிப்பாய் மருதடிப் பிள்ளையார் கோயிலில் தொடரும் வழக்கம்.

விளையாட்டுப் போட்டி, கலைவிழாக்கள் எனத் தொடர்ந்து இரண்டு தினங்கள் ஆண்டு விழா எடுப்பதும், அரியாலை சனசமூக நிலையத்தின் வருடப்பிறப்பு கருமமாக நீண்டகாலம் தொடர்ந்தது.

( தொடர்ச்சி 37ம் பக்கத்தில்)

# விருந்தினர் வந்தால்...

## பேரீச்சம்பழ கேக்



### தேவையானப் பொருட்கள்

பேரீச்சம்பழம் - 2 kg
கட்டிப்பால் - 1 tin
ரவை - 1/4கப்
கோதுமை மா - 1 kg
சீனி - 3 மேசைக்கரண்டி
பட்டர் - 1 kg
பால்/தண்ணீர் - 3/4 கப்
கொக்கோ பவுடர் - 3 தேக்கரண்டி
பேக்கிங் பவுடர் - 1தேக்கரண்டி
பேக்கிங் சோடா - 1 தேக்கரண்டி
கஜு(முந்திரி) - சிறிது
ரெய்சின் - சிறிது

### செய்முறை

பேக்கிங் பானிற்கு பட்டர் தடவி வைக்கவும்.

பேரீச்சம் பழத்தை விதை நீக்கி சிறு துண்டுகளாக வெட்டி அப்பச் சோடா சேர்த்து 1/2 கப் தண்ணீரில் ஊற விடவும்.

மா, கொக்கோ பவுடர், பேக்கிங் பவுடர் சேர்த்து அரிக்கவும்

சீனி, பட்டர், கட்டிப்பால், மீதி தண்ணீர் சேர்த்து கிரைண்டரில் நன்கு அடிக்கவும்.

பின்னர் இந்த கலவையை ஒரு வாயகன்ற பாத்திரத்தில் போட்டு அதனுள் மாக்கலவையை சிறிது சிறிதாக சேர்த்து கலக்கவும். (அடிக்க வேண்டாம்).

பின்னர் ஊறவைத்த பேரீச்சம் பழம், கஜு, ரெய்சின் சேர்த்து கலந்து பேக்கிங் பானில் கலவையை ஊற்றி பரப்பவும்.

பின்னர் இதை 350 பாகையில் 35 - 45 நிமிடங்களுக்கு பேக் செய்யவும்.

சுவையான பேரீச்சம்பழ கேக் தயார். இதனை ஆறவிட்டு துண்டுகளாக்கி பரிமாறவும்.

## ஒடியல் பிட்டு

### தேவையானப் பொருட்கள்

ஒடியல் மா - 1 கப்　　உப்பு
தேங்காய்ப்பூ - 1/4 கப்　　பட்டர் - 2 மேசைக்கரண்டி
சர்க்கரை (வெல்லம்) / சீனி - 4 - 5 மேசைக்கரண்டி

### செய்முறை

ஒடியல் மாவை 2 - 3 கப் தண்ணீரில் கரைத்து ஊற விடவும்.

மா அடைந்ததும் தண்ணீரை வடித்து நீக்கி விடவும்.

இவ்வாறு 2 - 3 தடவை செய்யவும். - இதனால் மாவின் காறல் (கயர்ப்பு சுவை) எடுக்கப்பட்டுவிடும்.

பின்னர் மாவை ஒரு சுத்தமான துணியில் நன்கு பிழிந்து வடித்தெடுத்து உதிர்க்கவும்.

உதிர்த்த மாவுடன் உப்பு சேர்த்து கலந்து 3-4 மேசைக்கரண்டி சுடு தண்ணீர் சேர்த்து குழைத்து மணிமணியாக உதிர்த்திக் கொள்ளவும்.

உதிர்த்திய மாவுடன் தேங்காய்ப்பூ சேர்த்து ஆவியில் வைத்து அவித்து எடுக்கவும்.

அவித்த பிட்டினுள் (சூடாக இருக்கும் போதே) துருவிய சர்க்கரை(வெல்லம்), பட்டர் சேர்த்து கலக்கவும்.

சுவையான ஒடியல் பிட்டு தயார். இதனை அப்படியே சாப்பிடலாம். பக்க உணவுகள் தேவையில்லை.

குறிப்பு:

பனம்பூரானை (முளை வந்த பனங்கொட்டையினுள் இருக்கும் சதைப்பகுதி) சிறிய துண்டுகளாக வெட்டி பிட்டு மாவுடன் கலந்தும் அவிக்கலாம். சுவையாக இருக்கும்.

- நர்மதா

இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், கடலுணவு வகைகள், பசுமையான மரக்கறி வகைகள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், பாத்திர வகைகள், தமிழ், இந்தி சினிமா DVD, CD, VHS போன்றவற்றை பெறுவது மாத்திரமன்றி

கடல் கடந்து வாழ்கின்ற உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவதற்கும் அழையுங்கள்.... 020 8905 7765

MARUTHI CASH & CARRY



15 - 17
Queensbury Station Parade
Queensbury
HA8 5NR

Tel: 020 8952 66 55
020 8381 3442
Fax: 020 8905 7546



சுத்தம்

சுகாதாரம்

சுவை





பிரித்தானிய சுகாதார முறைப்படி
உணவு தயாரிக்கும் நிறுவனம்

UKB5052EC

S.Devanath **(Devan)**
*The Managing Director*

Product of UK

# Blue Sky Fresh Foods Ltd.

S.I.S Sri Lankan Caterers.

We cater for parties and special occasions, big or small.

Food Prepared by Blue Sky Fresh Foods Ltd.

'Your Satisfaction is Our Pleasure'.



# Sri Sithi VINAYAGA

## PARTY SERVICES



Includes attractive
**'Package Deals'**

***Marquees: (Tents of various sizes), Folding type Tables & Chairs, Food Warmers, and other Catering Equipment.***

Tel: **020 8451 3777**
Mob. **07782 251 947**

Unit 6-7, Artesian Close Industrial Estate,
Stonebridge Park, London. NW10 8RW

# செஞ்சுடரின் செல்வங்கள்


தாய்க்கடவுளின் உருவுச் சிலைகள் : ஹரப்பா இ.மு 5000

அங்கம் 03

மண்ணில் விளைச்சலைத் தந்து - உயிர் காக்கும் உணவை அளிக்கும் தாய்த் தெய்வமான நில மாதாவை - பார் என்னும் அன்னையை - (Mother Goddess, Earth Goddess) - 'பார்வதி' என்று வாழ்த்தி வணங்கினான்.

தனது செம்மையான ஒளியினாலும் - செஞ்சுடர் வெப்பத்தாலும் - உலகிலுள்ள உயிர்களையெல்லாம் உய்ய வைக்கும் ஆதவனை - 'சிவந்தன்' என்றும் 'சிவன்' என்றும் போற்றினான்.

பரந்து விரிந்து எல்லையற்றுக் கிடக்கும் நீல மய்மான விண்ணகத் தெய்வத்திற்கு 'விண்ணு' எனப் பெயரிட்டான்.

ஆக, இந்த மூன்று முதற் தெய்வங்களின் மூலப் பெயர்களும் எழு - தமிழ் மொழிப் பெயர்களே. சிவந்தன் எனப்பட்ட ஆதவனின் வழிபாடே காலகதியில் சிவன் என்கிற தெய்வம் உருவானதற்கு வழியமைத்தது.

மொத்தத்தில் - 'எழு' என்கிற மொழியின் பெயருக்கும் - 'சிவன்' என்கிற தெய்வத்தின் பெயருக்கும் - மூலாதாரம் அந்த செஞ்சுடர் ஞாயிறே!

இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னர் இந்தியாவிற்குள் நுழைந்த ஆரியர்கள் சிவனை 'குத்திரன்' (சிவந்தன்) ஆக்கியும், விண்ணுவை 'விஷ்ணு' ஆக்கியும், பார்வதியை மலைமகள் ஆக்கியும் புராணங்கள் புனைந்தது வேறு கதை.

இற்றைக்கு 6,000 ஆண்டுகளுக்கு முன்னர் - இந்திய மண்ணில் ஆரியர்கள் அடியெடுத்து வைப்பதற்கு - இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் - இத் திராவிட மக்கள் தாய்க் கடவுளையும் - திரிசடை அணிந்த சிவனையும் - சிவலிங்கங்களையும் உருவமாகச் செய்து வழிபட்டார்கள் என்பதை இந்து வெளி அகழ்வுகள் - முக்கியமாக மொகஞ்சதாரோ, சன்ஹுதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் கண்டெடுத்த உருவச் சிலைகள் எடுத்துக் காட்டுகின்றன.

1922ஆம் ஆண்டில் மொகஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய புராதன இந்திய நகரங்களைத் தோண்டியெடுத்து - திராவிட நாகரிகத்தின் தொன்மையை உலக அரங்கில் பறை சாற்றிய - இருபதாம் நூற்றாண்டின் ஈடிணை இல்லாத அகழ்வாராச்சியாளரான சேர் ஜோன் மார்ஷலின் கூற்று இது,

## தமிழரும் அவர்கள் மதங்களும்

எழுதுபவர்: **சிவ தியாகராஜா**

"Among the many revealations that Moheno - daro and harappa have had in store for us, none perhaps is more remarkable than this discovery that Saivism has a history going back to the Chalcolithic age or perhaps even further still and that it takes its place as the most ancient living faith in the world."

"மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்கள் எங்களுக்கு வெளிப்படுத்திய உண்மைகளில் மிக முக்கியமானது சைவசமயத்தின் ஆரம்பகாலம் செப்புக் காலாத்திற்கும் அதற்கு முற்பட்ட காலத்திற்கும் (கற்காலம்) உரியதென்பதாகும்.

இன்று உலகிலுள்ள மதங்கள் யாவற்றிலும் மிகத் தொன்மையான மதம் என்ற பெருமையை சைவமதம் பெறுகிறது."

இந்து வேதங்களை துறைதோயக் கற்றவரான பிரபல வங்காளப் பேராசிரியர் சுனித்த குமார் சாட்டர்ஜீயின் புகழ்பெற்ற வார்த்தைகள் இவை:

"கர்ம வினை, மறுபிறப்பு, தவம், யோகம், தியானம் பற்றிய நம்பிக்கைகள் - சிவன், பார்வதி, விஷ்ணு ஆகிய தெய்வங்களின் வழிபாடு - ஹோமகுண்ட, அஸ்வமேத யாகங்களுக்குப் பதிலாக மலர்களைக் கொண்டு வழிபடும் பூசை முறைகள் - அரிசி, காய்கறிவகைகள், பழவகைகள், புளி, தேங்காய், வெற்றிலை ஆகிய படைத்தற் பொருட்களைக் கொண்ட தெய்வ வழிபாடு - மஞ்சள், குங்குமம் - நாம் இன்றுவரை உடுத்தும் வேட்டி, சேலை - இவை யாவும் ஆரிய இனத்திற்கு முற்பட்ட திராவிட மக்கள் இந்திய கலாச்சாரத்திற்குத் தந்த அற்புதக் கொடைகள்". (Chatterji.S.K 1951)

*(தொடரும்)*

# கலைஞர் குற்றம்...

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*

தமிழீழ மக்களுக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் துரோகம் புரிந்த பலரை விடுதலைப் புலிகள் தண்டித்துள்ளார்கள். அவைகளுக்கான உரிமைகோரல்களையும் விடுதலைப் புலிகள் செய்துள்ளார்கள். அதே போன்று சிங்களத் தலைவர்கள் மீது நடைபெற்ற சில தாக்குதல்களுக்கான பொறுப்பாளிகளாக விடுதலைப் புலிகள் குற்றஞ்சாட்டப்பட்ட நேரங்களில் அவைகளை மறுத்தும் இருக்கிறார்கள். மறுக்காது மௌனமாகவும் இருந்திருக்கிறார்கள்.

ஆனால் உறுதியான முறையில் உத்தியோகபூர்வமாக மறுத்து விட்டு, பின்பு ஏற்றுக்கொண்ட ஒரு சம்பவமாக அமிர்தலிங்கம் மீதான தாக்குதல் அமைகிறது. இந்தக் குழப்பத்திற்கு காரணம் இருக்கிறது.

தமிழீழ மக்களுக்கு செய்த துரோகத்தின் காரணமாக ஏறக்குறைய அனைத்துப் போரளிக் குழுக்களுமே அமிர்தலிங்கத்திற்கு மரண தண்டனை விதிப்பதாக அறிவித்திருந்தன. இது 80களின் தொடக்க காலத்தில் நடந்த ஒரு விடயம்.

1989ஆம் ஆண்டு ஜுலை 13ஆம் நாள் அமிர்தலிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார். அப்பொழுது சிறிலங்காவின் பிரேமதாசா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்தது. விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் கொழும்பில் நின்றனர்.

அமிர்தலிங்கம் கொல்லப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டதும் விடுதலைப் புலிகளின் பேச்சுவார்த்தைக் குழுவினருக்குள் ஆச்சரியமும் குழப்பமும்தான் நிலவியது. இதை யார் செய்தார்கள், ஏன் செய்தார்கள் என்று அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. அப்பொழுது கொழும்பின் பிரபல அரசியல் ஆய்வாளராக இருந்து 'ரீட்டா செபஸ்ரியான்' என்பவர் பேச்சுவார்த்தைக் குழுவினரை தொடர்பு கொண்டு அமிர்தலிங்கம் கொலை பற்றி கருத்து கேட்டார். 'நோ கொமன்ற்ஸ்' என்பதுதான் அவர்களுடைய பதிலாக இருந்தது.

இதை விட இன்னும் ஒரு செய்தி பரவியது. தாக்குதலின் போது அமிர்தலிங்கம் வீட்டுக்குச் சென்றிருந்த பேச்சுவார்த்தைக் குழுவில் இடம்பெற்றவிடுதலைப்புலிகளின் முக்கிய தலைவர் ஒருவரும் கொல்லப்பட்டு விட்டார் என்று வதந்தி சிலரால் பரப்பப்பட்டது. உடனடியாக பிரேமதாசா பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேயரட்ணாவை அனுப்பி பேச்சுவார்த்தைக் குழுவினருக்கு ஒன்றும் நடக்கவில்லை என்பதை உறுதி செய்தார். ஏற்கனவே இந்திய உளவுத்துறையால் வாங்கப்பட்ட மாத்தையாவே அனைத்திற்கும் பின்னால் இருந்தார் என்பது பின்பு தான் தெரிய வந்தது. விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசா அரசுக்கும் நடந்த பேச்சுவார்த்தையை குழப்புவதற்காக மாத்தையாவின் ஆட்கள் மூலம் அமிர்தலிங்கத்தை இந்திய உளவுத் துறை கொலை செய்தது என்பதுதான் உண்மை.

அமிர்தலிங்கத்தை கொலை செய்வதன் மூலம் இலங்கையில் பெரும் குழப்பம் தோன்றும், விடுதலைப் புலிகளுக்கும் பிரேமதாசாவிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை முறிவடையும் என்று இந்திய உளவுத் துறை கணக்குப் போட்டது. ஆனால் அப்படி எதுவும் நடைபெறவில்லை. அமிர்தலிங்கம் கொல்லப்பட்டது இலங்கைத்தீவில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

மாத்தையா மூலம் இந்திய உளவுத்துறை ஈழத்தில் ஏற்படுத்திய பிரச்சனைகள் கொஞ்சநஞ்சமல்ல. தன்னுடைய ஆட்களின் மூலம் பல அடாவடி நடவடிக்கைகளை மேற்கொண்டு மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகள் பற்றிய அதிருப்தி அலைகளை உருவாக்குவதற்கு மாத்தையா முயன்றார். ஒரு நேரத்தில் தேசியத் தலைவர் மக்களை நேரடியாக திடீர் திடீர் என்று சந்தித்து கருத்துக் கேட்கின்ற நிலைமை உருவானது. மக்களும் தமது அதிருப்திகளை அப்பொழுது தெரிவித்திருந்தனர்.

இப்படி மாத்தையாவின் மூலம் இந்திய உளவுத்துறை மேற்கொண்ட நாசகர நடவடிக்கைகளில் அமிர்தலிங்கம் மீதான கொலையும் ஒன்று. அப்பொழுது மாத்தையா விடுதலைப் புலிகள் இயக்கத்தின் பிரதித் தலைவராக இருந்ததனால் அவர் செய்த குற்றங்களுக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பேற்க வேண்டியும் வந்தது. ஆகவே கலைஞர் தமிழீழப் போராட்டம் பற்றி கூறிய விடயங்கள் சரியானவை அல்ல. அவர் கூறிய விடயங்களுக்கு குற்றம் சாட்டப்பட வேண்டியது இந்திய அரசும் அதன் உளவுத்துறையும்தான். இனியாவது இந்திய அரசு முன்பு விட்ட தவறுகளை மீண்டும் செய்யாது இருக்க வேண்டும். அதற்கு கலைஞர் தன்னால் ஆனதைச் செய்வார் என்று நம்புவோம்.

# வருசப் பிறப்பு...

*(35ம் பக்கத் தொடர்ச்சி)*

தீபாவளியைப்போல் இல்லாது வருஷப்பிறப்பு சைவக் கொண்டாட்டமாகவே காலகாலமாக தொடர்கின்றது. ஆனாலும் வளவுக்குள் பனை ஏறி முட்டி கட்டுபவனிடம் 'இரண்டு போத்தல் கள்ளு வைச்சிட்டுப்போ' என்று பனையடியில் போத்தலைக் கழுவி தயாராக வைத்துவிடுவதும், கொழும்பு மாமா கொண்டு வந்த சாராயப்போத்தலை மற்ற மாமாக்கள் சித்தப்பாமார்

சேர்ந்து காட்ஸ் விளையாடி கலகலப்பாக கதைத்தபடி ஒரு கைபார்த்து முடிப்பதும் கூட வருடப்பிறப்பு காட்சிகளில் ஒன்று. கள்ளு, சாராயம் சோமபானம் என்ற பெயரில் அந்தக் காலத்தில் முனிவர்களால் கூட அருந்தப்பட்டது என்பதனால் அது மச்சமல்ல என்று ஒரு விளக்கமும் அதற்கு சொல்லப்படும்.

அர்த்தமில்லாத சடங்கு, குளறுபடிகள் மிகுந்த சம்பிரதாயம் என்ற விவாதங்களுக்கு மத்தியிலும் 'நம்பிக்கை' என்கின்ற உறுதியை உள்ளத்துக்கு தருகின்ற, சமுதாயம் உறவு என்ற கட்டுக்கோப்புக்கு உறவில் இன்னும் நெருக்கத்தை அதிகப்படுத்துகின்ற அம்சங்கள் கொண்டதாக வருடப்பிறப்பு கொண்டாட்டமும் அமைகிறது.

நாம் நாமாக வாழ்ந்ததுபோல் நம் சந்ததிகளும் எம் இன அடையாளங்களைத் தொடர இந்த சடங்குகளை அவர்களுக்கும் அறிமுகப்படுத்தி விடுவோம்.



HERBA NATURELLE வழங்கும் 10% விசேட விலைக்கழிவு...

வெளிவந்துவிட்டது
இலவச மருத்துவ இதழ்
"ஆரோக்கிய வாழ்வு"
பெற்றுக்கொள்ள தமிழ் கடைகள்
ஆலயங்களை நாடலாம்

★ Hair Dye, அழகு சாதனப் பொருட்கள்
★ Vitamins & Minerals
★ உடற்பயிற்சிக்கான போசாக்கு வகைகள்
★ உடல் எடை குறைப்புக்கான மருந்துகள்
★ மூலிகை மருந்துகள்
- இன்னும் பல தெரிவு செய்யப்பட்ட பொருட்களுக்கு 10% விசேட விலைக்கழிவு*



Tel: +44 (0) 20 8765 9015
Email: sales@herbanaturelle.com
Web: www.herbanaturelle.com

மருத்துவ ஆலோசனைகளுக்கு, மூலிகை மருத்துவர் அஞ்சலா ஜெகநாதன் - 020 8765 9015

HERBA NATURELLE
Natural Health Centre

NORBURY 1410, London Road, Norbury SW17 4BZ

CROYDON 351a Whitehorse Road Croydon CRO 2HS

# மரண அறிவித்தல்



**P. Wignesvaran (AVM)**

*31 Jan 1940 - 16 Apr 2008*

Birth Place - **Malaysia**

Lived in - **Thirunelveli, Jaffna** and **Chennai.**

Son of - Late **Mr & Mrs Ponnudurai**

Husband of - **Dayanithy**

Father of - **Sivasudhan and Padma**

Son in law of - Late **Mr & Mrs Thambiayah**

Brother of -

**Rajeshwari Karalasingham** (Canada)

**P. Vijeyendran** (Germany)

**P. Srinivasan** (Kenley, UK) Tel: 07958424222

Present Address:

105 Oakfield Road

East Ham

London

E6 1LN

Tel: **020 8472 5956**

The funural ceremony will start at **11.45 AM** on **Sunday 27th April 2008** at

**City of London Cemetery and Crematorium**

(South Chapel), Aldersbrook Road, Manor Park, London E12 5DQ (A116).


## Residential Mortgages

## &

## Commercial Loans

## for Business

Contact:

**Sri**

297 High Street North, Manor Park, London E12 6SL

Tel: **020 8475 0755**

Fax: **020 8470 4755** / Mob: **07803 600 543**




# R.S. Finance

**Mortgages**

**Re-Mortgages**
**(Raising Funds to Start Own Business and Other Needs)**
**Secured Loans**



Loans will be arranged for lease hold and free hold businessess.

Arrangements are made to meet the senior business manager from leading banks in our premises to fulfil your business loan requirements.

**Commercial Loans**

**Shops**
**Petrol Stations**
**Restaurants**
**Care Homes Etc.**

**Whatever your needs, Regarding Your Mortgages or Commercial Loans**

# படைத்தல் தொழிலைக் கையிலெடுத்திருக்கும் மனிதன்

**அ.மயூரன்**
*(ஒருபேப்பருக்காக)*

இறைவன் சகல ஜீவராசிகளையும் படைக்கின்றான். என்ற கொள்கையை நாம் மீளாய்வு செய்ய வேண்டிய முக்கிய கட்டத்தில் இருக்கின்றோம் என நினைக்கின்றேன். இதுவரை காலமும் இறைவனால் மட்டுமே முடியும் என்கின்ற விடயத்தை இன்று மனிதன் சிருஷ்டித்துக் காட்டியிருப்பது விஞ்ஞான உலகத்தை மட்டுமல்ல முழு உலகத்தையும் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியதோடு அதிர்வலைகளையும் ஏற்படுத்தியுள்ளது.

உயிர்களின் மூலப்பொருளாகிய குரோமோ சோம் என்னும் கலக்கருவை எதுவித இயற்கைப் பொருட்களைச் சேர்க்காமல் முற்று முழுதாக தனியே ஆய்வுகூடத்தில் உள்ள அமிலங்கள் மற்றும் திரவங்களை வைத்து இக் குரோமோ சோம் கலக்கருவை உருவாக்கிச் சாதனை படைத்துள்ளார் அமெரிக்க சண்டியாகோ நகரிலுள்ள கிரெய்க் வெண்டர் நிறுவன அதிபர் கிரெய்க் வெண்டர். இந்த குரோமோ சோமை வைத்து மனிதன் உட்பட தக்காளி முதற்கொண்டு டைனோசர் வரை நாமே படைத்து விடலாம். உயிரியல் தொழில் நுட்பத்தில் மேலும்முன்னேற்றம் ஏற்படும் வேளை கடவுளால் மட்டுமல்ல நாமே சகல உயிரினங்களையும் படைக்கும் வல்லமை பெற்று விடுவோம். என்றார். இது குளோனிங்தொழில் நுட்பத்தை விட மிகவும் உன்னதமான தொழில்நுட்பம் என்றார். இந்த குளோனிங் தொழில் நுட்பம் ஆரம்ப கட்டத்தில் பெரும் எதிர்ப்பலைகளைச் சந்திக்க நேர்ந்தது.

1997 இல் ரோசலின் ஆய்வு நிறுவன ஆய்வாளர்கள் ஐயான் வில்மீட், உம்கீத் கெம்பெல் ஆகியோர் ஆறு வயது வெள்ளாட்டிலிருந்து பெறப்பட்ட கலத்திலிருந்து பிரித்தெடுத்த குரோமோசோமை வயது முதிர்ந்த செம்மறி யாட்டுமுட்டையில் செலுத்தி அதை விருத்திசெய்து டோலி என்னும் ஆட்டுக்குட்டியை உருவாக்கியதைத் தொடர்ந்து அப்போது விஞ்ஞான உலகில் பெரும் ஆச்சரிய அலைகளும் எதிர்ப்புக்களும் கிளம்பியிருந்தன. அதைவிட செயற்கைத் திரவங்களிலிருந்து குரோமோசோமை தயாரித்திருப்பது மிகப்பெரிய எதிர்ப்பலைகளை உருவாக்குதல் சாத்தியம்

உயிர்களை சிருஷ்டிப்பதில் ஒரு சில முயற்சிகளில் வெற்றி பெற்றாலும் இது இயற்கையுடன் சவால் விடும் ஆபத்தான விளையாட்டு, எதிர்வு கூற முடியாத புதிர். இதன் விளைவாக பல்லாயிரக்கணக்கான உயிரினம் தோன்றி பூமிக்கு பெரும் ஆபத்தாகவும் பாரமாகவும் அமையும். சமூக விரோதிகளால் மனித குலத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் பயங்கர விலங்குகளை உற்பத்தி செய்தல் சாத்தியம். இதனால் மனித சமுதாயம் சிக்கல் நிறைந்த பாரிய பிரச்சனைகளை எதிர் கொள்ள நேரிடும் என எச்சரிக்கை விடுக்கின்றனர். சில விஞ்ஞானிகள்.

ஆரம்பத்தில் கிரேய்க் வெண்டர் ஜீன்மேப்பிங் ஆய்வில் ஈடுபட்டு பிரபல்யமடைந்தவர் இந்த ஜீன்மேப்பிங் மூலம் மனித இனத்தின் பரம்பரையைக் கண்டறிவது, தீராத நோய்களைக் கண்டுபிடித்து ஜீன் சிகிச்சை மூலம் குணப்படுத்துவது, அழிந்து போன உயிரினங்களைக் கண்டுபிடித்து அதை செயற்கை மூலம் உருவாக்குவது போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்தார். குறிப்பாக கொலை வழக்குகளில் குற்றவாளிகளின் வைப்பக ஜீன்மேப்புகளுடன் சந்தேக நபர்களது ஜீன் படத்தை ஒப்பீடு செய்து நீள அளவுகள், தன்மை, தோற்றம், ஆகியவற்றைக் கணிப்பீடு செய்து உண்மையான குற்றவாளியை இனம் காண்பதில் அபார சாதனை புரிந்து வருகின்றனர். இந்தச் சாதனைக்கு காரணமானவர் கிரெய்க் அவர்கள்தான்.

ஒவ்வொரு குரோமோசோமிலும் நூற்றுக்கணக்கான டி.என்.ஏ. அடங்கியிருக்கின்றன. ஏணியை முறுக்கி விட்டதைப் போன்ற தோற்றமுடைய டி.என்.ஏ. யில் கோடிக் கணக்கான மூலக்கூறுகள் உண்டு. இவற்றை என்சைம் சேர்த்து சேமிக்க வைத்துக் காயவிட்டால் வெட்டி வைத்த சிறுசிறு நாடாத்துண்டு போன்ற அச்சுப்படம் கிடைக்கும். இதுவே ஜீன்மேப்பிங் எனப்படும். இவ்வாறு ஜீன் படங்களைத் தயாரிக்கும் வேளை அவருக்கு ஒரு எண்ணம் உதித்தது. சம்பந்தப்பட்ட பொருட்கள் யாவும் இரசாயண மூலக்கூறுகள். எனவே ஆய்வுகூட திரவங்களை வைத்து ஏன் இந்தக் குரோமோசோமை உற்பத்தி செய்ய முடியாது என சிந்தித்தார். அதன் விளைவே செயற்கைத் திரவங்களிலிருந்து கலக்கருவாகிய குரோமோசோம் உருவாகியது. தான் செயற்கையான இரசாயனப் பொருட்கள் மூலம் உருவாக்கிய குரோமோசோம் அசல் இயற்கை குரோமோசோமைப் போல் இருந்ததை அவதானித்துப் பரவசமடைந்தார். இதற்கு மைக்கோ பிளாஸ்மா லெபரட்டோரியம் என பெயர் சூட்டினார்.

இந்த மைக்கோ பிளாஸ்மா லெபரட்டோரியத்தை ஒரு 'செல்'லில் செலுத்தினால் அது செல் வளர்ச்சியை தூண்டி விட்டு பிரிகையடையச் செய்து விருத்தியடைய வைத்து ஒரு முழு உயிராக பரிணமிக்கச் செய்யும் ஆற்றல் படைத்தது. எனவே நாம் எவ்வகை உயிரினத்தையும் இந்தக் குரோமோசோமை வைத்து விருத்தி செய்தல் சாத்தியம் என்கிறார் கிரேய்க்.

இவ்வாறு மைக்கோ பிளாஸ்மா லெபரட்டோரியத்தை வைத்து பல உன்னத தலைவர்களையும், அறிவாளிகளையும், மற்றும் நரமாமிசம் உண்ணும் டைனோசர்களையும் உருவாக்க முடியும் என்றால் தற்போது இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகியிருக்கும் நாம் இனி இப்படிப்பட்ட உயிரினங்களின் அச்சுறுத்தலுக்கும் ஆளாக வேண்டிய சாத்தியமும் உண்டு. பூகோள வெப்பம் உயர்வடைந்து செல்லும் வேகத்தைப் பார்க்கும் போது இன்னும் சில நூற்றாண்டுகளில் இந்தப் பூமி இறந்த கிரகமாக மாறிவிடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

இது குறித்து கிரேய்க் அவர்கள் கூறும்போது எரிபொருள் வளங்கள் யாவும் வேகமாகச் சுரண்டப்பட்டு எரிபொருட்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டு தொழிற்சாலைகள். உற்பத்திச் சாலைகள் யாவும் செயலிழந்து போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்து மக்கள் பசி பட்டினியால் மடிய வேண்டிய கட்டம் நெருங்கி வந்து கொண்டிருக்கின்றது. எனவே எமது ஆய்வுகள் மூலம் இப்பிரச்சனைகளுக்கு உடனடித் திர்வு காண்பதே எமது குறிக்கோள் என்கிறார் கிரெய்க்.

அத்துடன் மனிதன் தனது குறுகிய கால நன்மைக்காக சூழலைச் சுரண்டி வாழ்ந்ததன் விளைவாக நிலம், நீர், காற்று என்பன அழுக்கேறியுள்ளன. குறிப்பாக வளி மண்டலத்தில் காபனீரொட்சைட் சேர்ந்து பூகோளத்தை வெப்பமடையச் செய்துள்ளது. இதனால் பூமியே அச்சுறுத்தலடைந்துள்ளது. எனவே எமது ஆய்வைப் பயன்படுத்தி வளிமண்டலத்தில் சேரும் காபனீரொட்சைட்டை அகற்றுவதற்கு பயன்படுத்தப் போகின்றோம். இந்த வாயுவை உட்கொண்டு அழிக்கும் பெருவாரியாக உற்பத்தி செய்து பூமியில் ஆங்காங்கே விடப்போகின்றோம்.

வளி மண்டலத்தில் காபனீரொட்சைட்டை அகற்றி புவி வெப்பமடைதலை தடுப்பதே தமது திட்டம் என்றும் எரிபொருள் தட்டுப்பாட்டால் ஏற்படும் விளைவைத் தடுப்பதற்கு கரும்புச்சக்கை மற்றும் பிற பொருட்களை நொதிக்கச் செய்யும் பக்டீரியாக்களை பெருவாரியாக உண்டாக்கி அவற்றின் மூலம் எரிவாயுவை உற்பத்தி செய்து எரிபொருள் தட்டுப்பாட்டுக்குத் தீர்வு காண்பதும் எமது திட்டம் என்றார். இவ்வாறு ஆக்க பூர்வமான செயல்களுக்குத் தனது ஆய்வு முடிவைப் பயன்படுத்தப் போவதாக கிரேய்க் கூறியிருப்பது வரவேற்கத்தக்கதே.

## நடக்க இருக்கும் நிகழ்வுகள்

**Apr 26**

**Media and Sri Lanka's Conflict : Where is the truth**

*சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியம் நடத்தும் ஊடகவியலாளர்களுக்கான கருத்தரங்கு*

SATURDAY @ 9AM

University of West minister, Harrow campus, Watford Road, Northwick Park, Harrow, Middlesex, HA1 3TP

**MAY 04**

***பரிசளிப்பு வைபவமும் வெற்றி விழாவும்***

*பிரித்தானியா மெய்வல்லுனர் போட்டி 2008 இன் வடமேற்கு இலண்டன் பகுதியின் பரிசளிப்பு வைபவமும் வெற்றி விழாவும்.*

SUNDAY @ 5PM

Sangam Community Centre, 210 Burnt Oak Broadway, Edgware, Middlesex, HA8 0AP

*தொடர்புகளுக்கு: 07740468051, 0790863588, 07931753610*

## இளங்கோவின் கடிதம்

கடந்த சில ஒரு பேப்பர் இதழ்களில் திரு சிவ. தியாகராஜர் அவர்களால் எழுதப்பட்ட தமிழரும் அவர்கள் மதங்களும் என்ற தொடர் கட்டுரையில், நான் எழுதிய சைவமும் தமிழும் என்ற கட்டுரையில் சில முக்கிய வரலாற்றுத் தகவல்கள் கூறப் படவில்லை என்றும் சில இடங்கள் என்னால் மிகைப் படுத்தப்பட்டு விட்டது என்றும் எழுதியிருந்தார். அந்த வகையில் சில விடயங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சைவமும் தமிழும் என்ற கட்டுரையில் சைவத்தைக் காட்டிலும் தமிழ் வளர்ச்சியில் சமணத்தின் பங்கு அதிகம் என்ற கருத்தை வலியுறுத்தியிருந்தேன். நான் சமணத்தைத் தழுவிய ஒருவன் அல்ல. எந்த சமயத்தையும் சாரமல் நான் அறிந்து கொண்ட உண்மைகளை பக்கச் சார்பு அற்றே எழுதியிருந்தேன். எழுதுவதற்கு முன் தமிழ் நாட்டிலுள்ள சிலம்பொலி செல்லப்பன், அ.மார்க்ஸ் போன்ற சமயச்சார்பு அற்ற அறிஞர்களுடன் தொடர்பு கொண்டு நான் அறிந்து கொண்டவை சரியா என உறுதிப் படுத்திய பின்னரே ஒரு பேப்பரில் அவற்றை பதிவு செய்தேன். முழு விடயங்களையும் பதிவு செய்வதானால் அதையே தொடராக எழுத வேண்டும். மேலும், சில இடங்கள் மிகைப்படுத்தப்பட்டது போல் தோன்றினாலும் அவை உண்மைதான் என்றும் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

அடுத்து திரு. சிவ. தியாகராஜர் அவர்கள் சைவம் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நிறுவனப் படுத்தப்பட்டதால் கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் அது தோற்றம் பெற்றது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத வாதம் என்று குறிப்பிட்டிருந்தார். சைவம் கி.பி. ஏழாம் நூற்றாண்டில்தான் தோற்றம் பெற்றது என நான் எந்த இடத்திலும் பதிவு செய்யவில்லை. அவரால் கையாளப் பட்ட 'நிறுவனப் படுத்தப்பட்ட' என்ற சொல்லாடலைத்தான் நானும் பயன் படுத்தியிருந்தேன். சிவ வழிபாடு கடைச்சங்க காலத்து நூல்களில் காணப் படுகின்றன என்று குறிப்பிட்டிருந்தேன். ஆனால் பௌத்தமும் சமணமும் அதற்கு முன் நிறுவனப்படுத்தப்பட்டுவிட்டன. அவை மதங்களாக அல்லாமல் சங்கம் என்ற பெயரில் நிறுவனப் படுத்தப்பட்ட அமைப்பாக இருந்தன. குறிப்பாக கி.மு மூன்றாம் நூற்றாண்டில் மௌரியப் பேரரசன் அசோகனால் பௌத்த சங்கங்கள் தோற்றுவிக்கப் பட்டன. சமணம் அதற்கு முன்னமே நிறுவனப் படுத்தப்பட்டதாக வரலாறு தெரிவிக்கிறது. அசோகனின் பாட்டன் சந்திரகுப்த மௌரியன் அரச பீடத்தைத் துறந்து சமணத்தைத் தழுவியிருந்தான். சமணத்தைத் தோற்றுவித்ததாகப் பொதுவாகப் கருதப் படும் வர்த்தமான மகாவீரர் கி. மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அதாவது இற்றைக்கு 2600 ஆண்டுகளுக்கு முன் அவர் வாழ்ந்திருக்கிறார். ஆனால் உண்மையில் அவருக்கு முன் தீர்த்தங்கரர்கள் எனப்படும் 23 சமணப் பெரியோர்கள் வாழ்ந்திருக்கிறார்கள். அந்த வரிசையில் 24 ஆவது தீர்த்தங்கரரே மாகாவீரர். எனவே கி.மு. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சமணம் நிறுவனப்படுத்தப் பட்டு விட்டது. இவை மட்டுமல்லாது முற்றாக அழிந்து போன சமயங்களும் உள்ளன.

- *இளங்கோ*




NAG & Co.
SOLICITORS

Tel: 020 7737 1211 | Fax: 020 7731 1431
Unit 3 Holles House, Overton Road, Myattsfield Road South, London SW9 7JN
Nearest Underground - Brixton Station on Victoria Line and Oval Station on Northern Line

- ✓ CRIME
- ✓ CONVEYANCING
- ✓ MATRIMONIAL
- ✓ IMMIGRATION
- ✓ TRAFFIC MATTERS
- ✓ LANDLORD & TENANTS
- ✓ POLICE STATION MATTERS
- ✓ EMPLOYMENT MATTERS
- ✓ WORK PERMITS

அழகு நங்கையரின் கோல நடனங்கள்

கழண்டு விழும் கழிசான் பெடியளின் குத்தாட்டங்கள்

கண்டறியாத காமெடிக்கள்

கழுத்தறுக்கும் பட்டிமன்ற கொடுமைகள்

அலட்டல் அறிவிப்பாளரின் அளவில்லா அறுவைகள்

இப்படியான மேலும் பல அற்புத நிகழ்வுகள்...

எவையும் இடம்பெற மாட்டாது.

# ஒரு பேப்பர்

வாசகர்கள் வழங்கும்

# ஒரு விழா

வாசகர்களுக்கேயான திருவிழா

(விபரங்கள் அடுத்த இதழில்)

# கைக்கெட்டாத கைம்மாத்துகள்

கற்பனைத் தொடர்

எழுதுவது: சோழியான்

அங்கம் 12

சிவராசன் கூறியதைக் கேட்ட சிவசோதியின் மனம் கொதித்தது. இப்படியும் மனிதர்கள் இருப்பார்களா? சும்மா கிடந்தவனை வலிய அழைத்து விருந்து கொடுத்து மனதை மாற்றி, அதில் ஆயிரமாயிரம் ஆசைகளை விதைத்து விட்டு, திடீரென்று எப்படி இவர்களால் தூக்கி எறிய முடிந்தது?!

பாம்பு செட்டையைக் கழற்றிவிடுவதுபோல எப்படித்தான் இவர்களால் மனித உறவுகளை மாற்றியமைக்க முடிகிறது? மனச்சாட்சியை அடகு வைத்து ஆதாயம் தேடும் பச்சோந்திகள்.

எவ்வளவு ஆசையோடு வந்தான். எவ்வளவு கற்பனைகளைச் சுமந்து கொண்டு வந்தான். அத்தனையையும் கசக்கிப் பிழிந்து அவனைச் சக்கையாக எறிய அவர்களால் எப்படித்தான் முடிந்தது?!

காரின் பின் 'சீற்'றில் அவன் அகல்யாவுக்காக ஆசையோடு வாங்கிய சட்டை அனாதையாக அலங்கோலமாகக் கிடந்தது.

'நான் சட்டையைக் கொடுக்கேக்கை வாங்கினாள். ஆனால் அவையள் பிறந்தநாளாலை வந்தவுடனை அகல்யாவை உள்ளுக்குக் கூட்டிக்கொண்டு போய் கனநேரமாய்க் கதைச்சினம். சட்டையைத் திருப்பித் தந்துவிட்டாள்!'

'ஏனெண்டு கேட்கேல்லையே?'

'அளவில்லையாம். கலர் சரியில்லையாம். அதை வாங்கின கடையிலையே திருப்பிக் கொடுக்கச்சொன்னாள். அதுக்குப்பிறகு அவள் வெளியாலை வரவே இல்லை.'

'நீ என்னவாலும் பிழையாய்க் கதைச்சனியே?'

'அவள் கதைச்சால் எல்லே என்னவாலும் கதைக்க. கொழும்பிலை இருக்கேக்கை கதைச்சாள். அவளா இவள்? நம்ப முடியேலை. ஒரு மாதம் மொஸ்கோவிலை நிண்டாள். என்னாலையும் தொடர்பு கொள்ள முடியேலை. அதுக்கிடையிலை இப்பிடி மாறிவிட்டாள்' சோகமாகக் கூறினான் சிவராசன்.

திருமணம் புரியவென வெளிநாட்டிற்கு வரும் சில பெண்கள் வரும் வழியில் தங்கும் நாடுகளில் வேறு தமிழ் இளைஞர்களுடன் காதல் வசமாகிப் பாதை மாறிய பறவைகளானதை அறிந்துள்ளான் சோதி. அப்படி அகல்யாவும்...

மனதில் எழுந்த அபிப்பிராயத்தைச் சிவராசனிடம் தெரிவிக்க முடியாது. பாவம். அவனின் மனம் சங்கடப்படும். உதடுவரை வந்த வார்த்தைகளை விழுங்கிக் கொண்டான்.

'சிவா! இதிலை என்னவோ இருக்குது. சில வேளை கனகரத்தினமும் பவளமும் அகல்யாவின்ரை மனதை மாத்தியிருக்கலாம்...'

'எப்படி? எப்படி? அவைதானே அவள் ஜேர்மனிக்கு வந்ததை எனக்கு அறிவிச்சவை. கனகரத்தினம் அண்ணைதான் என்னைத் தனிய கூட்டிக் கொண்டுபோய் சொன்னார் அவளுக்கு என்னைப் பிடிக்கேல்லை எண்டு'

'ஏனெண்டு கேட்டனியே?'

'கேட்டன்.... என்னவோ பிடிக்கேலையாம்.'

'இவையளாலும் அவளோடை கதைச்சு மனதை மாத்தியிருக்கலாம் எல்லே...'

'அதுதான் எனக்கும் விளங்கேலை. தங்கடை பேச்சை அவள் தட்டமாட்டாள் எண்டு சொன்னவைதான் அவை. இப்ப அந்தக் கதையில்லை. அவளுக்குப் பிடிக்காட்டி எங்களாலை ஒண்டும் செய்யேலாது எண்டு கையை விரிக்கினம். என்னாலை அவள் இப்பிடிச் சொல்லியிருப்பாள் எண்டு நம்ப முடியேலை...'

'நீ அவளிட்டையே நேரை கேட்டிருக்க வேணும்!'

'அவள் வெளியாலை வந்தால்தானே. அறையுக்கை போய் கதவைச் சாத்தினவள் பேந்து வரவே இல்லை'

'நினைச்சவுடனை மாட்டுறத்துக்கும் பிடிக்காட்டிக் கழட்டி எறியவும் நீ என்ன உடுதுணியா? இதை இப்பிடியே விடக் கூடாது. ரண்டிலை ஒண்டு பார்க்க வேணும். கோபத்துடன் கூறினான் சோதி.

'அவள் மாட்டன் எண்டு சொல்லேக்கை என்னடா செய்ய முடியும்? இனி அவளை வற்புறுத்திச் சம்மதிக்க வைச்சாலும் அப்பிடி அமையிற வாழ்க்கை ஒரு வாழ்க்கையே? எனக்கும் கலியாணத்துக்கும் பொருத்தமில்லைப் போலை!' என்று தழுதழுத்தான் சிவராசன். கண்கள் கலங்கி நீரைக் கொட்டத் தயாராகின.

'சிவா, நீ எதுக்கும் கவலைப்படாதை. ரெலிபோனிலை நல்ல மாதிரிக் கதைச்சவள், கடிதங்களிலை கனவுகளை எழுதினவள், நீ இலங்கைக்கு அனுப்பின பரிசுகளை மறுக்காமல் ஏற்றுக் கொண்டவள் திடீரெண்டு மனதை மாற்றினாள் எண்டாள்.... இதிலை என்னவோ இருக்கு. அது என்னெண்டு தெரிய வேணும். இவ்வளவு நாளாய் உன்னோடை நெருங்கி வந்த ஒருத்தி திடீரெண்டு மனதை மாற்றிக் கொள்ளமாட்டாள். அதாலைதான் சொல்லுறன் கொஞ்சநாளைக்கு நீ எதுக்கும் யோசிக்காமை இரு. நான், பாலன், கேசவன் எல்லாரும் அவையை நேரிலை சந்திச்சு என்னெண்டு கேக்கிறம்...' உறுதியாகக் கூறியபோது சற்று நம்பிக்கை பிறந்தது.

❖ ❖ ❖

சோதி, கேசவன், பாலன் எல்லோரும் கனகரத்தினத்தின் வீட்டிற்குச் சென்றார்கள். அவர்கள் கூட்டமாக வருவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை.

'உள்ளே வரச் சொல்வோமா?' என்று தீர்மானிப்பதற்குள்ளாகவே நுழைந்தார்கள்.

'நாங்கள் ஏன் வந்திருக்கிறம் எண்டது உங்களுக்குத் தெரியும்.... கூப்பிடுங்க அகல்யாவை. ஏனிப்படி ஒருத்தன்ரை வாழ்க்கையோடை விளையாடினவ எண்டு கேக்க வேணும்.'

'தம்பியவை வீணாய் பிரச்சினை கிளப்ப வேண்டாம்'

'நாங்கள் பிரச்சினை கிளப்ப வரேல்லை. நீங்கள்தான் பிரச்சினையளை வளர்த்துக் கொண்டு போறீங்கள். நம்பினவனைக் கழுத்தறுத்துப் போட்டீங்கள். ஒருத்தனைப் பைத்தியக்காரனாக்கப் பாக்கிறீங்கள். இது என்ன நியாயம்?'

'அகல்யாவுக்குப் பிடிக்கேல்லை. இதுக்குப் பிறகு எங்களாலை என்ன செய்ய முடியும்? மனதுக்குப் பிடிக்காதவனை வில்லங்கமாய்க் கட்டிவைக்கச் சொல்லுறியளோ?'

'எதுக்கும் நேரிலை வந்து சொல்லச் சொல்லுங்கோ!'

'என்ன நேரிலையோ? ஒரு குமர்ப் பிள்ளையை உங்களுக்கு முன்னாலை வந்து சொல்லச் சொல்லுறியளோ?' என்று கோபமாகக் கத்தினார்.

'குமர்ப்பிள்ளை கடிதம் எழுதலாம். ரெலிபோனிலை கதைக்கலாம். அதிலை பிழை இல்லை. இப்ப எங்களுக்கு முன்னாலை வாறதுதான் பிழையோ?' என்று பதிலுக்குக் கேட்டான் கேசவன்.

'சும்மா பூச்சாண்டி காட்டாதேங்கோ... ஒருத்தன்ரை இல்லாத பொல்லாத ஆசைகளை வளர்த்து இப்ப புண்ணாக்கிப்போட்டு வாழலாம் எண்டு மட்டும் கனவு காணாதேங்கோ. அவனிலை என்ன குறை? என்ன தகுதி இல்லை? அதைச் சொல்லுங்கோ. இல்லாட்டிப்போனா வேறை இடத்திலை கலியாணம் கட்டலாம் எண்டுமட்டும் நினைச்சுப் பாக்க வேண்டாம். போஸ்டர் அடிச்சு ஒட்டுவம். அவனுக்கு இதிலை விருப்பமில்லாட்டியும் அகல்யா எழுதின காகிதங்களைப் போட்டோக் கொப்பி எடுத்து எல்லா இடமும் கொடுப்பம். பேந்து உங்களாலை தலைநிமிர்ந்து நடக்கேலாது' என்ற சோதியின் சீற்றத்தின் முன்னால் விக்கித்து நின்றார் கனகரத்தினம்.

'அவசரப்படாதேங்கோ தம்பியவை. முதலிலை இருங்கோ. இந்தாளுக்கு என்ன பேச வேணுமெண்டே தெரியாது' என்றவாறு இடையே வந்தாள் பவளம்.

'தம்பியவை.... உங்களிட்டை ஒண்டு கேக்கிறம். அதுக்குப் பதிலைச் சொல்லிப்போட்டு நியாயத்தைக் கதைப்பம்.'

'இப்ப நாங்கள் பத்தாயிரம் யூரோக்கு மேலை செலவழிச்சுக் கூப்பிட்டம். இனி கலியாணத்துக்கு இன்னும் ஒரு பத்தாயிரமாலும் வேணும். அவள் எங்கடை பிள்ளை. மணவறை வீடியோ எண்டு சிறப்பாய்த்தான் செய்ய வேணும். அவராலை அவ்வளவு சிறப்பாய்ச் செய்ய முடியுமே?' கேசவனும் சோதியும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

'அவர் இப்பவே கடனோடை இருக்கிறார். இன்னும் அவர் தன்ரை குடும்பத்துக்காகச் செய்ய வேண்டியது நிறைய இருக்குது. இந்த லட்சணத்திலை இவளையும் அங்கை தள்ளச் சொல்லுறியளே?'

'இதை நீங்கள் முதலிலையெல்லே யோசிச்சிருக்க வேணும்...'

'அப்ப நீங்கள்தான் இந்தக் கலியாணத்தை விரும்பேல்லை..?'

'ஓம். நாங்கள்தான். இது நாங்களாய் யோசிச்சு எடுத்த முடிவில்லை. மற்றச் சனங்கள் சொல்லிச்சுதுகள். அதாலை யோசிச்சம். சரியாய் பட்டுது. நாளைக்கு எங்கடை சொந்தக்காரச் சனங்கள் பெறாமகள் எண்டதாலை தானை இப்பிடி ஒரு சம்பந்தத்தைச் செய்தவை எண்டு கதைக்கக் கூடாது. அதாலைதான் இப்பிடியொரு முடிவெடுத்தம்!'

'உண்மைதான். நீங்கள் முடிவெடுத்ததிலை பிழை இல்லை. ஆனால் காலங் கடந்து எடுத்த முடிவு. இதாலை இன்னொருத்தன்ரை வாழ்க்கை எவ்வளவு பாதிக்கப்படும் எண்டதை நினைச்சுப் பாருங்கோ. ஒருத்தன்ரை அழிவிலைதான் உங்கடை பெறாமகளின்ரை வாழ்க்கை அமைய வேணுமா?'

'இன்னொண்டு. அகல்யாவும் சிவராசனிலை ஆசைப்பட்டிருக்கிறா. அவவின்ரை ஆசாபாசங்களையும் அழிக்க நினைக்கிறியள்....'

'அவள் எங்களிட்டை இதைப்பற்றி ஒரு மூச்சுக் கூட விடேல்லை....'

'நீங்கள் செய்த உதவியளை நினைச்சுப் பேசாமல் இருக்கலாம்!'

'தம்பியவை, ஏதோ நடந்துபோச்சு. அகல்யாவும் சிவராசனிலை ஆசைப்பட்டிருந்தால் அதுக்கு மேலையும் நாங்கள் குறுக்கை நிக்கமாட்டம். ஆனால் ஒண்டு. நாங்கள் அவளிலை அக்கறைப் பட்டவங்கள். அவள் கண் கலங்காமை வாழ வேணும்.' தொண்டையைக் கனைத்துக் கொண்டு தொடர்ந்தார் கனகரத்தினம்.

'நாலுபேர் நாலுவிதமாய்க் கதைக்கக்கூடாது. அந்த நல்ல எண்ணத்திலைதான் முதலிலை பின்வாங்கினாங்கள். இப்ப கலியாணம் செய்து வைக்கிறம். ஆனால் அதுக்கை சிவராசன் ஒண்டு செய்யவேணும்.' எல்லோரும் அவரைக் கேள்விக்குறியுடன் நோக்கினார்கள்.

'அகல்யாவின்ரை பெயரிலை பத்தாயிரம் யூரோ பாங்க்கிலை போடவேணும். இது அகல்யாவின்ரை எதிர்காலத்துக்கு...'

'பத்தாயிரம்..... அவன் போடுவான்!'

'எப்பிடி?' என்று நம்பாமல் பார்த்தார் கனகரத்தினம்.

'நாங்கள் இருக்கிறம். இந்தப் பத்து வருசமாய் அவனோடை பழகினவங்கள் நாங்கள். நாங்கள் சொந்தமில்லை. ஆனால் இந்த அந்நிய மண்ணிலை ஒருவர்மேலை ஒருவர் அக்கறைப் பட்டவங்கள். எங்களுக்கு ஒண்டெண்டால் அவன். அவனுக்கு ஒண்டெண்டால் நாங்கள். இது சொந்தத்துக்கு மேலான பந்தம். இதுக்காகப் பத்தாயிரமென்ன, இருபதாயிரம் கேட்டாலும் தருவம். நீங்கள் கலியாணத்துக்கான அலுவல்களைக் கவனியுங்கோ.... நாங்கள் காசோடை வாறம்.." அவர்கள் போய் விட்டார்கள்.

'ஏனப்பா பத்தாயிரமெண்டு கேட்டனீங்கள்? என்ன நினைப்பாங்கள்?' கடிந்தாள் பவளம்.

'காசாசையாலை கேட்கேல்லை. இதொரு பரீட்சை.... இப்பிடி நாலு சிநேகிதர் இருந்தால் சிவராசன் முன்னேறிவிடுவான்'

*(அடுத்த இதழில் முடியும்)*

SAM
SOLICITORS & COMMISSIONERS FOR OATHS

உங்களது அகதி விண்ணப்பங்கள் நிராகரிக்கபட்டு
நீண்டகாலம் வேலை செய்திருப்பீர்களாயின் விசா எடுப்பதற்கு
appeals and representation on all Tribunal Hearing
சம்பந்தமான சேவைக்கு எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
உங்களது வியாபார ஸ்தாபனங்கள் வீடுகள்
விற்றல், வாங்குதல் சம்பந்தமான சட்ட சேவைக்கும்
எங்களை நாடவும்!!

IMMIGRATION & ASYLUM
JUDICIAL REVIEW
CIVIL LITIGATION
CRIME
DIVORCE & FAMILY MATTERS
EMPLOYMENT
HOUSING / LANDLORD & TENANT
COMMERCIAL CONVEYANCING
RESIDENTIAL CONVEYANCING
LIQUOR LICENSING

Tel: 0208 770 7143
Fax: 0208 643 9245
www.samsolicitors.com
info@samsolicitors.com
288, High Street, Sutton, Surrey, SM1 1PQ

# வாழ்க்கைத் துணை

## இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 7043 4315
Fax: 020 7043 4312

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

பிரான்ஸ்:
Tel: 01 7289 8165

சுவிஸ்:
Tel: 043 5000 277

email: info@orupaper.com



## மணமகள் தேவை

1. French citizen, in the UK since 2001, 27 years, 5' 8", did higher studies in Australia looking for a match, with only 2years age difference. Ref: 1302

2. UK citizen, since 15 years of age in England, Hones. Graduate, 36 years, 5' 8", seeking a matching bride, a Graduate. Ref: 1301

3. Living in Colombo, 35 years, 5' 6", educated and well employed, looking for a matching bride. Ref: 1199

4. In the UK since 2001 on student-visa, 34 years, 5' 6", doing Master, in Law, seeking a suitable bride from Sri Lanka or UK. Ref: 1198

5. UK citizen, graduate in computer engineering, 44 years, 5' 10 '', looking for a suitable bride from Sri Lanka or abroad. Ref: 1197

6. British citizen, 35 years, 5' 7", Financial Accountant, well employed, seeking a matching bride. Ref: 1196

7. French citizen, graduate in Accountancy from UK-Uni, presently working in England, 30 years, 5' 7", seeking a matching bride. Ref: 1195

8. French citizen, a graduate in computer communication, employed in England, 33 years, 6' tall, seeking a matching bride. Ref: 1194

9. Top professional in England, studied in Jaffna, originally, 46 years, 5' 7", a divorcee seeking a suitable bride. Ref: 1193

10. In the U.K since 1999, now on 'leave to remain status', Graduate from Moratuva campus, 28 years, 5' 7", looking for a suitable bride with permanent residence status. Ref: 1191

11. In the USA on work permit for the last 10 years, 29 years, 5' 6", a double degree holder, looking for a matching bride willing to move to California. Ref: 1190

12. In the USA since 2000, Green Card holder, Graduate, 42 years, 5'4" looking for a matching bride. Ref: 1189

13. Surrey Uni. Electrical Engineer, 32 years, 5' 7", on student visa, looking for a professional groom with permanency. Ref:1188

14. தற்போது வதிவிட உரிமை பெற்று சொந்த கடை வைத்து இருக்கும் 33 வயது 5'6" மணமகன் தகுந்த மணமகளை தேடுகின்றார். Ref:1187

15. In the UK since 1998, A/L qualified, 33 years 5'7", well employed looking for a potential bride in Canada or Europe. Ref:1185

16. Business man in Colombo, 48 years, 5' 7", A/L qualified, looking for a bride in Sri Lanka or abroad. Ref: 1184

17. British citizen, 30 years, 5' 7", an electronic engineering, looking for a suitable bride in the U.K. Ref: 1183

18. Surrey, U.K, University engineering graduate, presently working in M.E, 31 years, 5' 6", looking for a university educated bride in Europe, who could also sponsor him. Ref: 1182

19. Jaffna University Computer-Science graduate, 34 years 5'6", in the U.K on work permit until 2012, looking for a suitable bride in Europe with permanency. Ref: 1181

20. British citizen, in the U.K since 1990, B.Sc qualified from South bank Uni. 36 years, 5' 5" looking for a matching bride from Europe. Ref: 1180

21. In the U.K since 2001, Computer Science graduate from Kingston Uni., 29 years, 6' 1" looking for an educated bride from Europe or Canada with permanency. Ref: 1179

22. British citizen, in the U.K since 1979, an IT graduate, 38 years, 5' 8", a divorcee looking for a suitable bride. Ref: 1178

23. UK இல் PR உள்ள 41 வயது 5'9" A/L படித்த மெக்கானிக்காக வேலை பார்க்கும் வரன் விசா உள்ள மணப்பெண்ணைத் தேடுகிறார். Ref: 1177

24. சப்பிரகமுவ பல்கலைக்கழக பட்டதாரி 35 வயது 6' 3", வெளிநாடுகளில் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகிறார். Ref: 1175.

25. Mother looking for a suitable bride for her son, UK born, 38 years, 5' 9", IT graduate and well employed in London. *Ref: 1171*

26. Graduate from Moratuwa (Sri Lanka) campus, working in London on Permanent Visa status, 38 years, 5' 11', a divorcee, looking for a bride in EU or Sri Lanka. Ref: 1170

27. Lecturer in a University in Sri Lanka, worked in the U.K for a 2 year- period, 32 years, 5' 5", seeking a bride, at least A/L, from abroad or Sri Lanka. *Ref: 1167*

28. In the U.K since 2,000, qualified accountant form University of Wales, 36 years, 5' 10" looking for a suitable bride. *Ref: 1165*

29. Professional, U.K qualified, 29 years, 5' 11", looking for a suitable bride in the U.K. Ref: 1158..

30. Engineer from UK Uni., 27 years, 5'6", on temp.visa, seeking a suitable bride. Ref:1155

31. An Accountant in Germany since child hood, in the UK since 2004, 28 years, 5'8", looking for a suitable bride. Ref:1147

32. Msc qualified accountant on working visa, 29 years 5'7", a divorcee, looking for a professional bride Ref:1146

33. In UK since 2000, on student visa, UK graduate, 29 years, 5'10", looking for a suitable bride with PR Ref:1142

34. IT பட்டதாரி, 30 வயது, 5'11", Student visaஇல் உள்ள மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1140

35. அவுஸ்திரேலியா பிரஜாவுரிமையுள்ள, computer engineer, 27 years, 5'8", மணமகனுக்கு. தகுந்த மணமகளை தேடுகின்றனர். Ref:1137

36. கனடா பிரஜாவுரிமை, 28 வயது, 5'6", Engineer மணமகனுக்கு, தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். Ref: 1136

## மணமகன் தேவை

37. MBBS, Sri Lanka, working in Kandy hospital, 29 years, 5' 7", looking for a matching groom abroad. Ref: 1635

38. Mauritian Telegu, practising Hindu Tamil customs and traditions, 42 years, 5' 2", in the UK since 1986, qualified and employed seeking a matching groom. Ref: 1634

39. Oxford Graduate, 30 years, 5' 6", British (11 years in UK), looking for a professional groom. Ref: 1633

40. Netherlands citizen (there since 1991), Physiotherapist, 26 years, 5' 2", looking for suitable groom in Europe. Ref: 1632

41. கொழும்பில் பட்டதாரி ஆசிரியராக வேலை செய்யும் 31 வயது 5' 3", மணப்பெண்ணுக்கு தகுந்த வெளிநாட்டு வதிவிடவுரிமை உள்ள வரனை தேடுகின்றனர். Ref: 1631

42. British citizen, 23 years in UK, 37 years, 5' tall, a graduate, looking for an educated groom in UK. Ref: 1630

43. கொழும்பில் பட்டதாரி ஆசிரியராக வேலை செய்யும் 31 வயது 5'3", மணப்பெண்ணுக்கு தகுந்த வரனை தேடுகின்றனர்.. Ref: 1629

44. British citizen 43 years, 5' 6", a divorcee, educated and employed seeking a suitable educated groom. Ref: 1628

45. Canadian citizen, in Canada since 1999, 39 years, 5' 6", a professional and well employed, looking for a matching groom. Ref:1627

46. UK born, accountancy degree holder, 25 years, 5' 4" tall, well employed, seeking a matching groom, those with no permanency, will also be considered. Ref: 1626

47. Canadian citizen, graduate in computer science, 25 years, 5' 51/2' tall, looking for a professional groom in Canada. Ref: 1625

48. UK born, a civil servant, 26 years, 5' 2" tall, seeking a matching groom, educated up to graduate level. Ref: 1624

49. Presently in Chennai, +2 studied, 28 years, 5' 0", also music & dance teacher, looking for a suitable groom from Europe. Ref: 1621

50. கொழும்பில் வசிக்கும் A/L படித்து தற்போது கம்பியுட்டர் படிக்கும் 27 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் தகுந்த வரனைத் தேடுகிறார் Ref:1623

51. கொழும்பில் வசிக்கும் A/L படித்து தற்போது கம்பியுட்டர் படிக்கும் 23 வயது 5' 5" உயரமுள்ள மணப்பெண் தகுந்த வரனைத் தேடுகிறார் Ref: 1622

52. திருமணம் செய்து 3 மாதங்களில் கணவனை இழந்த 30 வயது 5'4" A/L படித்த யாழில் வாழும் பெண் தகுந்த வரனை Canada EU நாடுகளில் தேடுகின்றார். Ref: 1620

53. இணுவிலில் வாழும் 31 வயது 5"2" விவாகரத்து பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. Ref: 1619

54. British citizen, in the U.K since 1992, LLB Graduate, 26 years, 5' 0", seeking a matching groom, a graduate. Ref: 1618

55. USA citizen, over there since childhood, science graduate and well employed, 31 years, 5' 6" tall, seeking a professional groom willing to move to United States.Ref: 1617

56. British citizen, 10 years in the U.K, a final medical student, 25 years, 5' 3" tall, seeking a matching professional groom. Ref: 1616

57. British citizen, 10 years in the U.K, LLB Graduate, doing further studies, 24 years, 5' 4" tall, seeking a matching professional groom. Ref: 1615

58. Living in Colombo, completed AAT, doing degree in accounting, 22 years, 5' 7" tall, seeking a well educated groom in Europe or Canada with citizenship, or permanent residence status. Ref: 1613

59. தற்போது திருச்சியில் வாழும் 34 வயது 4' 11" உயரம். விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கு தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். Ref: 1611

60. British citizen, 15 years in U.K, 29 years, 5' 4" AL qualified looking for a matching groom in England. Ref: 1610

61. In the U.K with work permit, a graduate, a divorcee, 35 years 5' 5" looking for a suitable groom with UK permanency. Ref: 1609

62. Canadian citizen, in Canada since 2003, 28 years 5' 6", an accountant working in a bank, looking for a suitable groom in Canada or U.K. Ref: 1608

63. கொழும்பில் HSBC வங்கியில் வேலைபார்க்கும் 33 வயது 5'5", படித்த மணமகளுக்கு தகுந்த வரனைத் தேடுகிறார். Ref: 1607.

64. இந்திய பல்கலை பட்டதாரி தற்போது லண்டனில் MA படிக்கும் 32 வயது 5'1" தகுந்த மணமகனை தேடுகின்றார். *Ref: 1606*

65. கொழும்பில் வேலை பார்க்கும் 29 வயது 5', A/L படித்த தகுந்த நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணமகனை தேடுகின்றார். *Ref: 1605*

66. Professionally qualified bride living in Colombo, 27 years, 5' 4" looking for a suitable groom, a UK/USA citizen. *Ref: 1604*

67. Accounting professional, working in USA, 30 years, 5' 3", looking for a professionally qualified groom. *Ref: 1603*

68. Medical Doctor, born in Australia working over there, 26 years, 5' 4", looking for a suitable university educated groom, with a deep concern for the plight of humanity. *Ref: 1602*

69. French citizen, a professional, 28 years, 5'7", looking for a professional groom, preferably, a French. *Ref: 1601*

70. யாழ்ப்பாண பல்கலைப் பட்டதாரி 30 வயது. 5'3". யாழ்ப்பாணத்தில் தொழில்புரியும் மணப்பெண்ணிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1600

71. யாழ்ப்பாணத்தில் விஞ்ஞான ஆசிரியையாக வேலை செய்யும் 36 வயது, 5'3" மணமகளிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1499.

72. Brother looking for sister 32 years 5' 3", working in Colombo, a suitable groom. Ref: 1498.

73. யாழ்ப்பாணத்தில் தொழில் புரியும் பட்டதாரி, 35 வயது, 5'6" மணப்பெண்ணிற்கு படித்த வதிவிடமை உரிய வரனை கனடா, EU நாடுகளில் தேடுகின்றனர். Ref: 1497.

74. கொழும்பில் வேலை புரியும் 31 வயது, 5' மணமகளிற்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref: 1496.

75. Civil Engineer, grew up in Germany, presently working in the UK, 28 years, 5'4", looking for a suitable groom. Ref:1495

76. Netherland citizen, and undergraduate, 23 years, 5'5", looking for a suitable groom. Ref: 1494

77. நோர்வேயில் சங்கீத பட்டதாரி, 34 வயது, 5'3", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1493

78. கொழும்பில் பட்டதாரி ஆசிரியை, 38 வயது, 5'4", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1490

79. யாழ் பல்கலைப் பட்டதாரி, 26 வயது, 5'2", மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகின்றனர். Ref:1487

80. A graduate from Sri Jeyewar'pura-Uni, working as an assistant accountant in Colombo, 26 years, 5' 4", looking for a suitable groom in EU or Australia. Ref. 1486

81. இந்தியாவில் வசிக்கும் பட்டதாரி, 22வயது, 5'உயரம், மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டன், கனடாவில் தேடுகின்றனர். Ref :1484

82. UK born, 25 years, 5'5", a grauate in accountancy, looking for a professional groom. Ref :1483

83. In the UK since 1985, A British citizen, 25 years, 5'2" a grauate and well employed looking for a suitable groom. Ref: 1479

84. Born in Britain, a Graduate, 26 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1472

85. Born in Britain, Professional Graduate, 33 years, 5'4", seeking a suitable groom, from EU or USA. Ref:1471

86. சென்னையில் வசிக்கும் பட்டதாரி, 28 வயது, 5'1", மணமகளுக்கு. தகுந்த மணமகனை வெளிநாடுகளில் தேடுகின்றனர். Ref:1469

87. Professional bride, 34 years, 5'8", a U.K citizen, looking for a suitable groom. Ref:1451

88. In the U.K, on student visa, doing Ph.D, 34 years, 5'1", looking for a qualified groom in Europe with PR. Ref:1449

89. Professional 27 years, 5'5",Ten years in the UK, looking for a Professional groom.Ref:1437

90. Professional bride, a Canadian citizen 31 years, 5'3', with traditional values seeking a suitable groom Ref: 1427

91. Professional bride, born in France, 24 years, 5'4', seeking a suitable groom. Ref:1425

92. டென்மார்க்கில் வசிக்கும், 24 வயது, 5'5', இறுதியாண்டு பல்கலைக்கழக மணமகளுக்கு தகுந்த மணமகனை ஐரோப்பாவில்/ இலங்கையில் தேடுகின்றார்.Ref: 1424

# கவிதை

## சுடலை ஞானம்

ஊரைச் சுருட்டி உண்ட உடையார் பரம்பரை என்
பேரைச் சொல்லவென பெற்ற பிள்ளை நான்கு உண்டு
பாரை ஆண்டிடுவோம் பலதடவை சொல்லியதால்
தாரைவார்த்து சொத்துகளை தங்கிவிட்டேன் குடிசையிலே.

காமும் சில கடந்து கண்மணிகள் வாழ்வினிலே
கோலமும் மாறிவிட கொண்டவரால் எனைமறந்து
பாலமும் அறுந்துவிட பாதிவழி ஏதறியா
மூலமும் வேரறுந்த முழுமரமாய் வீதியிலே

உண்ணுதற்கு வேண்டுமென ஊரிலே கேட்பதற்கு
எண்ணுதற்கு என் மனமும் ஏற்றங்கள் பார்த்ததினால்
புண்ணிருக்கு தெரிந்திருந்தும் புறம்போன பிள்ளைகளால்
கண்ணிருந்தும் குருடன்போல் கனநாளாய் நான் அலைந்தேன்.

பசியுமோ உடலைவாட்ட பாதமும் நடையால் நோக
வீசிய தென்றல்கூட வினைப்பயன் உரைத்துச் செல்ல
காதுமோ ஊனம் காண கண்களும் இருண்டுபோக
நானுமோ சாய்ந்துவிட்டேன் நடைப்பிணம் கல்லறைக்குள்.

தூங்கிய சில துளிக்குள் தூக்கத்தைக் கலைப்பார் போன்று
ஓங்கியே சிரித்த அந்த ஓரிரு குரல்கள் கேட்டு
ஏங்கிய பசி மறந்து என் மனச் சுமை துறந்து
கேட்டபோது நொந்தேன் நானும் கேவலம் என் வாழ்வுக்காக.

நாட்பல பசிகிடந்து நகர்வுகள் ஒன்றே கண்ணாய்
வான்படை மட்டுமன்றி கடற்படை மையம்கூட
தூள்பட உடைத்த சேதி சுத்தமாய் பலவும் சொல்லி
கல்லறை பலவும் சேர்ந்து கலந்துரையாடல் கேட்டேன்.

இவையெல்லாம் கேட்ட பின்பு இதயமும் சுமைகுறைந்து
பிறருக்காய் வாழ்தல் ஒன்றே பேரின்பம் வாழ்வில் எண்ணி
எழுந்தவன் வலுவை ஊட்டி என்மனம் சாந்தி தேடி
எல்லையில் படையில் சேர்ந்து என்னுயிர் பிரிதல் ஒன்றே
புண்ணியம் எண்ணக் கால்கள் போகுதே பசி மறந்து.

*- த.சு.மணியம்*

## நேசிப்பின் நிலாவரையல்ல...

கொடுங்குலத்தின் கூர்ப்புடைக்கும் மடுத்தலத்தின் மத்தியிலே
தடுத்தாட் கொள்ள என்று தமிழருக்கு இருந்த தாய்
அடங்காச் சினங் கொண்ட அநியாயச் சிங்களத்தின்
நெடுங்காலத் திட்டமதில்
மடுத்தல மாதாவும் இப்போது இடப்பெயர்வு அகதி
பரம்பொருளே!....
தடுத்தாட் கொள்ள யார் உள்ளர் உலகில்?
இருதயநாதரும் இராணுவ ஷெல்வீச்சில் சிதைவுற்று
போனாராம்.
சீர்தூக்கி இறைமகனை காக்க ஒரு கையின்றி,
கட்டிட சிதைவுக்குள் கருணைக்கடல் நிற்கிறாராம்
கண்கொண்டு பார்த்து கனக்கும் இதயமெங்கே?
ஆருக்கும் எம்மினம் அவதியைக் கொடுக்கவில்லை
ஆனால் போர் வித்தை கற்கவரும் வல்லாண்மைகளின்
மானுட நேசிப்பு எம் மண்ணைக் குதறுகிறது
மானுட புதைகுழிமேல் மல்லாக்கும் ஒணான்களே!
சாணாடா?, முழமாடா சாவுக்கு இருக்கிறது?
ஏவுகணை முதல் எல்லா பரீட்சையையும்
எங்கள் மண்ணிலே கந்தகத்தால் எழுதுங்கள்.
காலன்தான் எங்கள் கண்ணெதிரே தெரிகிறானே.
கார்காலம், கனத்தமழை, போர்த்தெழுந்த பெருவெள்ளம்
சேறேற்றி புதைக்கிறது சனத்தை
போர்வாழ்வு ஒரு பக்கம், பொல்லாத உலகத்தின்
சுண்ணாம்புத் துப்பல்கள் சுவாசத்தின் மறுபக்கம்.
பாரெங்கும் நிமிர்தெழும் பனங்கூடல்களே!
வேர்மடியின் உடலெங்கும் பரந்தோடி உறைகிறது ரத்தாறு,
உயிர் கரைக்கும் வாசகங்கள் எவருக்கு வேண்டும் சொல்!
நாளாந்த மரணமல்ல, நாழிகையே மரணமென
சாவாழ்வு சரசமிட,
பாதாள நரகமடா பைந்தமிழ் வாழ்வு
தாளாத வீரமடா தாங்கி நிற்கிறது.
தமிழ் மகவே!... உயிர் அகவே!
தேம்பாதே! தேங்காதே!...
விரி திசையின் மையத்தை தாங்கு!
நேசிப்பின் நிலாவரையல்ல...
நெருப்பின் உலாமுகமே நிகழ்காலத் தேவை

*- வல்வை சஹாறா*

## குறை தீர்க்கும் நாளெது

சருகாக மலர்கின்ற
பூக்கள் எல்லாம்
சடுக்காது தருகின்ற
வாசம் கண்டு
உருகாத மனமும்
உருகி போகும்
உயிருக்குள் அதை அள்ளி
சொருகிக் கொள்ளும்
ஒருநாளும் நிலையில்லை
வாழ்க்கை என்று
உணராது தினந்தோறும்
செருக்குப் பண்ணும்
அறியாத மனந்தோறும்
பெருக்கெடுக்கும் அகங்காரம்
அழிந்தாலோ அமைதி பூக்கும்

அடிக்கின்ற அலைபோல
மனதில் நித்தம் ஆசைகளும்
அடிக்கின்றதாலே மண்ணில்
துடிக்கின்ற உயிர்களதன்
குமுறல் சத்தம்
துல்லியமாய் கேட்கிறது

நிலைதனை உணராமல்
ஆயுதம் வாங்கி
நிரந்தரமாய் போர் செய்யும்
உத்தி கொண்டு
வேதனை தந்து
ஆடுகின்ற பொழுதைக் கூட
இருளாய் மாற்றி
குலை நடுங்க வைக்கும்
அனைவரும் எப்போ
தருவார்கள் குறை தீர்க்கும்
நல்ல நாளை?

*- இலங்கைப் பெண்*

## பெண்ணியம்

அவசரக்காரன் அடிப்பான்
பொறுத்துக்கொள்
என்றீர்கள்.
சரியென்றேன்.

கோபக்காரன் திட்டுவான்
பொறுத்துக்கொள்
என்றீர்கள்.
சரியென்றேன்.

குடித்தாலும் நல்லவன்
பொறுத்துக்கொள்
என்றீர்கள்.
சரியென்றேன்.

கொஞ்சம் முரடன்
பொறுத்துக்கொள்
என்றீர்கள்.
சரியென்றேன்.

எல்லாவற்றையும்
பொறுத்துக்கொண்ட
என்னை ஊர்கூட்டி
மலடி இவள்
என்கிறான்.

பொறுத்துக்கொள்
என்பீர்கள் என்றெண்ணி
சரியென்று தலையசைக்க
தயாராகிறேன்
அவன் மலடன்
என்பதை அறிந்த
நான்.

*- நிலா ரசிகன்*

## மறுபக்கம்

எற்றைத் திங்களாய் எனையாளும் மீசரேகேள்
பெற்றோரும் முற்றோருஞ் சுற்றோர்பேணி – அயராத
ஆய்வும் பணியுமாற்றி மூப்பின்முன் சற்றே
ஓய்வும் அறிவாளோ பெண்?

சேயோடன் பிறந்தாளோ தாயோ நாளெல்லாம்
ஓயாமலு ழைக்குமனை யாளோவாழப் – பொருள்
தேடச்சென் றுதேய்ந்தே பழியும் சேறறியா
ஆடவர்க் கிலையோ வலி?

*- R.சாவித்திரி*

## விரோதம்

உனக்கும் எனக்கும் இடையிலான
இந்த ஆழ்ந்த விரோதம்
நீயோ நானோ
உயிருள்ளவரை மட்டும்
பிறகு...
விரோதம் மக்கிப்போகும்
நம் பிரேதங்களைப்போல்.
என்னிடம்?

*- சரண்*




Engine Tec
Motors

We Offer Facilities For:
- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre-MOT Checks
- All types of Repair & Body Work
- Insurance Work Undertaken

உங்கள் கார் திருத்த வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்.

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000 / 020 8640 1230
Mob: 07860 226 476 / 07860 770 945

Engine Tec Motors
Unit 5, 339 London Road,
Mitcham, Surrey CR4 4BE
Email: vel@etmluk.com
Web:www.etmluk.com

# அறுவைப் பக்கம்

## என்னுடைய 'விளையாட்டுக்கள்'



எனக்கும் இந்த விளையாட்டுக்கும் என்னிக்குமே ஏழாம் பொருத்தம் தாங்க.ஆனா மனசு நெறையா விளையாடனும் கோப்பைய வாங்கனும் வாங்குறபோ அமுதா டீச்சர் பொண்ணு என்னைய ஆச்சரியமா பார்க்கனுன்னு பல கனவுகளை சுமந்துகிட்டு அலைஞ்சேன்.

சரி எந்த விளையாட்டு நமக்கு பொருத்தமா இருக்கும்னு ஆராய்ச்சி பண்ணுறப்போ எல்லாத்துக்கும் பிட்னெஸ் தான் மாப்ளே தேவை! முதல்ல ஓட்டப் பந்தயத்திலே நம்ம கணக்கை ஆரம்பிப்போன்னு நம்ம தோஸ்த் ஜார்ஜ் சொன்னதை நம்பி ஓடரதுக்கு வாத்தியார் கிட்டே பேரை கொடுத்திட்டேன்.

அன்னிக்கு பிடிச்சது சனி. ஓடரதுக்கு பயிற்சின்னு சொல்லிவர சொன்னாரு விளையாட்டு வத்தியார்னு சந்தோசமா போனோம்.

ஆரம்பத்திலே ground டை சுத்தி ஓடி வரணும். எங்க ஸ்கூல் groundடா சும்மா ஏக்கரா கணக்கா கெடக்கு. மொதோ ரெண்டு ரவுண்டு என்னமோ சந்தோசமாதேன் ஓடுனேன். சரி நிறுத்த சொல்லி கொஞ்ச நேரம் கழிச்சு ஓட சொல்லுவாங்கன்னு பார்த்தா ரெண்டு வாத்திக ஆளுக்கொரு மூலையிலே குச்சியோட நின்னுகிட்டு ஓடுங்கடா ஓடுங்கடான்னு வெரட்டிகிட்டு இருக்கனுவ.

எவனாவது கொஞ்சம் ஸ்லோவா ஓடுர மாதிரி இருந்தா பின்னாடி ரெண்டு இழுப்பு வேற. எனக்கா நாக்கு தள்ளுது,நம்ம பய ஜார்ஜ் என்னடான்னா சும்மா பெட்ரோலைக் குடிச்சுபுட்டு பின்னாடி பத்த வச்ச மாதிரி 'பேய்' கணக்கா ஓடிகிட்டு இருக்கான்.

அடப்பாவி மக்கா இப்படி கொண்டாந்து மாட்டி விட்டுட்டியேடா நாயேன்னு நெனச்சுகிட்டு விதியேன்னு நானும் கொஞ்சம் சமாளிச்சு ஓடி ஓடி அப்படியே groundடை விட்டு ஓடி வந்தவன்தான். இனி ground பக்கம் தல வெக்கிறதில்லைன்னு கொள்கை பிடிப்போட சுத்திகிட்டு இருந்தேன். இருந்தாலும் இந்த வெளையாட்டு தாகம் அடிமனசை upset பண்ணிகிட்டே இருந்துச்சு.

சரி நாம தான் வெளையாடரது இல்லை அட்லீஸ்ட் எப்படி வெளையாடறாங்கன்னு பார்க்கவாச்சும் செய்யலாம்னு அப்படியாக்கா டிவி ய திருப்புனா ஆஹா வாலி பாலு பேஸ்கட் பால். டென்னிஸ், சட்டில் கார்க்குன்னு போட்டு தாக்கியெடுக்குராக,

அதுலயும் இந்த அம்மணிகள் ஆடுர ஆட்டம் இருக்கே (நான் வெளையாட்ட தாங்க சொல்றேங்கோ ) அதையப் பார்க்குறதுக்கே கொள்ளேன்னு திருவிழாக்கூட்டம் தான் போங்க.

இந்த பொண்ணுங்க ஆடுற டென்னிஸ் இருக்கே அதுக்கு Refreehயா இருக்குரதுக்கு ரொம்ப அபார திறமையும் நெசமாலுமே சாமியார்த்தனமும் நெறையா வேணுங்க. என்னா கஷ்டம்! என்னா கஷ்டம் !

இவங்க வெளையாடி எதிராளி சர்வீஸை ப்ரேக் பண்றாங்களோ இல்லையோ பாக்குற நம்ம மனசை போட்டுருக்குற ட்ரெஸ்ஸால கண்டிப்பா ப்ரேக் பண்ணிடுவாங்க.

கொஞ்ச காலத்துக்கு மிந்தி இந்த டென்னிஸ் வெளையாடுற அம்மணிக எல்லாம் மொழங்காலுக்கு ஒரு ரெண்டு இஞ்ச் மேலே வரை ஸ்கர்ட்டு போட்டுகிட்டு வெளையாடிட்டு இருந்தாங்க. அப்படியே அது இஞ்சை இஞ்சா உசந்து போயி இப்போ இடுப்புக்கு ரெண்டு இஞ்சுக்கு கீழே வரை ட்ரெஸ் போட்டா போதும்னு ஆகிபோச்சு. இப்படியெல்லாம் பண்ணுனா அப்புறம் எப்படீங்க ஆட்டத்தை கவனிக்கிறது ?

என்னாடா இது பாண்டிக்கு வந்த சோதனைன்னு அப்படியேக்கா கவனைத்தை டென்னிஸ்ல இருந்து வாலிபால் பக்கம் திருப்புனா ஆஹா பீச் வாலிபால்னு போட்டு தாக்கியெடுக்குராங்க. Ball ஐ இல்லீங்கோ நம்ம மனசைதான்.

நீச்சல் உடையிலே நீச்சல் தான் அடிக்கனும்னு ஏதாச்சும் ரூல்ஸ் இருக்கா என்ன ? இவுக அப்படியே பீச்சோரம் காத்தோட்டமா வெளையாடிகிட்டும் இருக்காக. ஆம்பிளைங்க எல்லாம் ஒரு பத்து இருவது வருசமா இன்னும் அதே மாதிரி தானே ப்ரெஸ் போட்டுகிட்டு ஆடிகிட்டு இருக்காங்க. இந்த பொண்ணுகளுக்கு மட்டும் எப்படீங்க சும்மா நாளொரு மேனியும் பொழுதொரு ' மினி ' யுமா ஆகிகிட்டு இருக்கு அவுக டெரெஸ்ஸு ?

வெளையாடி வெளையாடி இவுக உடம்பு இளைக்குதோ இல்லையோ இவுங்களை பார்த்து பார்த்து பலபேரு உடம்பு இளைகாம இருந்த சரிதான்.

ம்ம்ம் ஆனாலும் வெளையாட்டை விட ரசிக்கிரதுக்கு பலது இருக்குங்க வெளையாட்டுலே!

இப்போல்லாம் எங்கம்மா ' இவனுக்கு வெளையாட்டுன்னா உசுரு ! டென்னிஸ் மேட்சுன்னா டிவி வுட்டு நகர மாட்டீங்கரான்னு ' பெருமை பொங்க பக்கத்து வூட்டுகாரங்க கிட்டே சொல்லிகிட்டு இருக்கரதை கேட்கறப்போ எனக்கு ஆனந்தக்கண்ணீரா வருதுங்க !!

*- ஜொள்ளுபாண்டி*

## நான் புலம்பிக் கொண்டே இருப்பேன்...

எல்லாரும் கோயிலுக்குப் போறாங்க. அம்மனைச் சுத்தி சுத்திக் கும்பிடுறாங்க. அவங்களை பாத்து நல்ல பக்தியான ஆக்கள் எண்டு மத்தவங்களும் பெருமையா சொல்லறாங்க. ஆனா நான் மாட்டும் என் அம்மனைச் சுத்தினா ஏளனமாப் பாக்கிறாங்களே? அது ஏங்க.

❖ ❖ ❖

அன்பே எனனைச் சூரியன் என்றாய். மகிழ்ச்சியில் குளிர்ந்து போய் உன்னை நிலா என்றேன். நிலா சூரியனிடம் இருந்து வெளிச்சத்தை இரவலாய் வாங்குவது போல என்னிடமிருநது எப்போதும் இரவலாய் பணம் வாங்கியே பிழைக்கிறாயே. இது நியாயமா?

❖ ❖ ❖

நான் துண்டை கையில் எடுத்தா குளிக்கப் போறன்டு அர்த்தம்.. துண்டைக் கழுத்தில் போட்டால் ஊருக்குப் போறன்டு அர்த்தம்... துண்டை இடுப்பில் கட்டினால் கோயிலுக்குப் போகிறன்டு அர்த்தம்... துண்டை தலையில் போட்டால் கடன் கேக்கிறன்டு அர்த்தம்!

❖ ❖ ❖

நேத்து உன்னையும் உன் தம்பியையும் பார்த்தேன். நிச்சயமா எனக்கு ஏதோ அதிர்ஷ்டம் அடிக்கப் போகுது!...பின்ன! ரெண்டு கழுதைகளைச் சேர்ந்து பார்த்தால் அதிர்ஷ்டம் அடிக்காம என்ன செய்யும்!'

❖ ❖ ❖

நேத்து உன்னைப் பாக்க உன் ரூமுக்கு வந்தேன். நல்ல வெயில்நேரம்... ஃபேன்கூட இல்லாத ரூமில் குப்புறப் படுத்து தூங்கிட்டிருந்தாய். சரி சரி... புரியுது! எருமையால மல்லாக்கப் படுக்க முடியாதே!!'

❖ ❖ ❖

*மிருகக்காட்சி சாலையில் யானை குளிப்பதை அதிசயமாகப் பார்த்தாய்.* குளிப்பது யானை என்பதால் அப்படி பார்க்கிறாயோ என்று நினைத்தேன். ஆனால் பிறகு தான் தெரிந்தது குளிப்பதே உனக்கு அதிசயம் என்று!

❖ ❖ ❖

நீஅகநானூறைக் கரைச்சுக் குடிச்சவனா இருக்கலாம். நீ புறநானூறைப் படிச்சு கிழிச்சவனா இருக்கலாம்.அதுக்காக என்னோட பணம் முழுசா நானூறை முழுங்கி ஏப்பம் விடுட்டியேடா... நீ நல்லா இருப்பியா

## ஞாபகம் வருதே ஞாபகம் வருதே ஞாபகம் வருதே...

என்ன ஆட்டோகிராப் சேரன் மாதிரி புலம்புறேன்னு பாக்கிறீங்களா? அதொண்ணுமில்லிங்க. சும்மா குந்திகிட்டு இருந்தேனா. நம்ம பிளாஸ்பேக் எல்லாம் ஞாபகம் வந்துட்டுது. அதை உங்களோடை பகிர்நது கொள்ளுவோம்னுதான்...

சினிமாவில் ஆசிரியர்களாக நடிக்கும் கதாநாயகர்கள் வகுப்பில் மாணவர்களுக்கு அறிவுரை கூறும்போதோ கெட்ட மாணவனை அடித்து திருத்தும் போதோ விடும் டயலாக் "நானும் ஒரு காலத்துல ஸ்டுடண்ட்" என்பது தான்.

அதே மாதிரி நான் இப்பவும் மனசால குழந்தைதான் என்ற உண்மையை சொன்னா அடிக்க வருவீங்க. என்னை பெத்தவங்களே 'இன்னும் நீ திருந்தலையான்னு பாவமா பார்ப்பாங்க. அதனால அந்த உண்மையை மனசுக்குள்ள பொத்தி வச்சிகிட்டு என் பிஞ்சு மனசுல பதிஞ்ச பசுமரத்தாணிகள் சில:

இரண்டாவது படிக்கும் போது எங்க சி செக்சனுக்கும் ஏ செக்சனுக்கும் லஞ்ச் பிரேக்ல சண்டை நடக்கும். எங்க க்ருப்புக்கு ஞானசம்பந்தம்ன்ற குட்டையன் தான் லீடர். ரெண்டாவது படிக்கும்போது எல்லாருமே குட்டையா தானேடா இருப்பீங்கன்னு கேட்கக்கூடாது. அவன் எங்களை விட குட்டை. ரெண்டு செக்ஷனும் அடிக்கடி அடிச்சிப்போம். அதில்லாம சிமெண்ட் தரையில் ஸ்கேட்டிங் போட்டி வேற நடக்கும்.

மூணாவது படிக்கும்போதே கிரவுண்ட் பக்கம் போனாலும் நாலாவது படிக்கும்போதுதான் எங்க தெரு அண்ணாக்கள் கிரிக்கெட் விளையாட சேர்த்துக் கிட்டாங்க. அதுவும் ஜோக்கராகவோ, ஒப்புக்கு சப்பாணியாகவோதான்.

ஐந்தாம் வகுப்பு கோடை விடுமுறையின்போது தாத்தா இறந்துட்டார். அவர் இறந்த அடுத்த நாள் வீட்டுல இருக்கவங்க எல்லாம் வருத்தத்தோட வரவு செலவு கணக்கு பார்த்திட்டிருக்கும்போது தெருவில் விளையாடிட்டு குதிச்சு குதிச்சு ஓடி வந்து தாழ்வான வாசல்படியில மண்டையை உடைச்சுக்கிட்டேன். ரத்தம் வழியறது கூட தெரியாம ஒன்னும் ஆகலைன்னு சொல்லிகிட்டே எழுந்தா எல்லாரும் ஓடி வந்து தலையை அழுத்திபிடிச்சுட்டு தூக்கிட்டு எங்க ஊர் பேமிலி டாக்டர்கிட்ட போனாங்க. அவர் கைல கிடைச்ச ஊசி, நூல்ல ஒரு ஏழெட்டு தையல் போட்டுவிட்டார். அடுத்தநாள் காஞ்சிபுரத்துக்கு வந்து நல்ல டாக்டர்கிட்ட காமிச்சா 'இந்த நூல்ல இது வரைக்கும் பாலியஸ்டர் துணி தைக்கத் தான் பயன்படுத்திதான் பார்த்திருக்கேன். இதை வச்சு யாரு தையல் போட்டது?'ன்னு கேட்டார்.

சாட் பூட் த்ரீ, இங்கி பிங்கி பாங்கி மாதிரி பிஸ்கட் பிஸ்கட்டும் எல்லாருக்கும் தெரியும்னு நினைக்கறேன். தெரியாத அப்பாவிகளுக்கு

*பிஸ்கட் பிஸ்கட் ஜாம் பிஸ்கட்*
*என்ன ஜாம் கோ ஜாம்*
*என்ன கோ டீ கோ*
*என்ன டீ பன்ருட்டி*
பன்ருட்டி சில சமயம் பொண்டாட்டியாகவும் மாறும்.

நாங்க குடியிருந்த மேட்டுத் தெருதான் காஞ்சிபுரத்துல பட்டு சேலைக் கடைகள் எல்லாம் இருக்கும் தெரு. அந்த தெருவில சாயங்காலம் என்ன டிராபிக் இருந்தாலும், எவ்வளவு கூட்டம் இருந்தாலும் ஐஸ்பாய் விளையாடலைனா எங்களுக்கெல்லாம் தூக்கம் வராது. எல்லா கடைகளுக்குள்ளேயும் போய் ஒளிந்துகொள்ள எங்களுக்கு சிறப்புரிமை உண்டு.

ஐஸ்பாய் மாதிரியே கல்லா மண்ணா, நாடு புடிக்கற ஆட்டம் இதெல்லாமும் இப்போதெல்லாம் பசங்க விளையாடறதில்லையாமே. ரொம்ப வருத்தமா இருக்கு. பல்லாங்குழி, தாயம், நொண்டிக்கெல்லாம் இன்னும் மவுசு இருக்குன்னு நினைக்கறேன்.

மொதமொத தெரு டீம்ல பௌலிங் கொடுத்தப்போ என் பௌலிங் ஸ்டைலை பார்த்துட்டு 'ஏண்டா மாவாட்டற மாதிரி கையை சுத்திட்டு ஓடி வரன்னு கேட்ட அண்ணனால என் பௌலிங் செம்மைபட்டது.

பக்கத்து வீட்டு வாசல்ல காகித பந்தில் கிரிக்கெட் விளையாடும்போது ஏறி வந்து ஷாட் அடிக்க முயற்சி செய்து தாழ்வாரத்துல உட்கார்ந்திருந்த ஒரு பாட்டியின் மண்டையை பட்டால் உடைத்திருக்கிறேன். பாட்டிக்கு 12 தையல். எங்கப்பா எனக்கு கொடுத்த அடி பலம்னாலும் தையல் போடற அளவு சீரியஸ் ஆகலை.

ஒரு கிரிக்கெட் மட்சில கைக்கு வந்த கேட்சை விரல் வழியாக கப்பை விட ஸ்டிச் பால் சுண்டுவிரலுக்கும் மோதிர விரலுக்குமிடையிலுள்ள தசையை கிழித்து விட்டது. ஆழமான காயம். வீட்டிற்கு சென்று கமுக்கமாக உட்கார்ந்திருக்கும்போது அம்மா சமைக்க ஆரம்பிச்சாங்க. கேரட் சீவித்தர்றேன்னு சீவல் மணையை வாங்கி இரண்டு நிமிஷத்தில் சீவல் மணை கையைக் கிழிச்சிடுச்சுன்னு ஒரு ஆக்ட் விட்டு அந்த காயத்தை காண பித்தேன். டாக்டர்கிட்ட கூட்டிட்டு போய் கட்டு போட்டு வெளியே வந்ததும் அம்மா ஒழுங்கா மரியாதையா எப்படி அடிபட்டுச்சுன்னு சொல்லு. விளையாடும்போதா இல்ல எங்கயாவது விழுந்துவாறினயா? என்று கேட்டதும் கையெல்லாம் ரத்தம் முகமெல்லாம் அசடு. அன்றில் இருந்து அம்மாவிடம் பொய் சொல்வதில்லை. அப்பாவிடம் மட்டும் தான்.

பத்தாவது முடிச்சு டிசி வாங்கறதுக்கு எங்கப்பாவை ஸ்கூலுக்கு கூட்டிட்டு போன போது பிரின்சிபால் நல்லா போட்டு குடுத்துட்டார். 'பையன் நல்லாத்தான் படிக்கறான். ஆனா யாரையும் மதிக்க மாட்டேங்கிறான். எதிர்த்து எதிர்த்து பேசறான்னு எங்கப்பா கிட்ட பத்த வச்சிட்டார். இன்னைக்கும் அப்பாகிட்ட ஏதாவது எதிர்த்து பேசினா 'அப்பவே உங்க பிரின்சிபால் சொன்னாரேடா.. நீ திமிர் பிடிச்சவன்னு என்னை ஆஃப் செய்துவிடுவார்.

*- கப்பிபய*

# சுமைகளும் சுகங்களும் பகிர்வதில் சுகமே

சிறுகதை

எழுதியவர்: **கயல்விழி**

அதிகாலை நான்கு மணியில் இருந்து தன்னந் தனியாக சுழன்று கொண்டிருந்த சுமதிக்கு எரிச்சல், கோவம் எல்லாம் ஒன்றாய் கொழுந்து விட்டு எரிந்த கொண்டிருந்தது. இரவு நித்திரை யில்லை குழந்தை உறங்க 1 மணி ஆகிவிட்டது.

'என்ன செய்வது என் கஸ்டம் எப்ப தீருமோ. அப்பவே சொன்னான் பாழாய்ப்போன கலி யாணம் எனக்கு வேண்டாம் என்டு கேட்டு துகளே.. பாரம் இறக்கி வைக்கிறம் என்டு பாழுங் கிணத்துக்கை தள்ளி விட்டிட்டு அவை சந்தோசமாய் இருக்கினம். நான் படுற பாடு எனக்குத்தானே தெரியும்.'

தன் சோகங்களை தனியாகவே புலம்பிக் கொண்டு வேலைகளை செய்தவளிற்கு குழந் தையின் அழுகையை கேட்டதும் கோவம் கொழுந்து விட்டெரிந்தது. .

'சுமதி இங்க கொஞ்சம் வாரும்.. பிள்ளை ஒண்டுக்குப் போட்டுது போல அழுகுது' நித் திரை கலையாத ரவியின் குரல்.

'அதுக்கும் நானே வரோணும் பக்கத்தை எல்லாம் கிடக்கு எடுத்து மாத்துங்கோ'

ரவியின் உடுப்புகளை அயன் பண்ணியபடி பதில் தந்தாள் சுமதி.

'இங்க வந்திட்டுப்போம். என்னால முடியாது' என்ற படி மறுபக்கம் திரும்பி படுத்துக் கொண்டான் ரவி. இதைக்கேட்டதும் சுமதிக்கு அழுகையே வந்தது.

கலியாணத்திற்கு முன்னர் 'உன்ரை அம்மா மாதிரி நான் உன்னை கவனிப்பன்' என்று வாக்குறுதியை வழங்கிய ஆண்மகன் ரவி. பிள்ளைக்கு 'நப்பி' மாத்திறது, பிள்ளை வண்டி தள்ளுறது இதுகளை பெண்கள் வேலையாகவும், வீட்டுவேலைகள் யாவும் பெண்களே செய்யவேண்டும் என்ற சிந்தனை கொண்ட படித்த இளைஞன்.

குழந்தையின் அழுகை நிண்டபாடில்லை அது அழுது கொண்டிருக்க தாய்க்கு வேலை ஓடுமா? அப்படியே போட்டுவிட்டு படுக்கை யறை சென்று குழந்தையை பார்த்து அழுகையை நிறுத்தி பாலும் கொடுத்துவிட்டு வந்தாள்.

ரவியைப் பார்க்கையில் வேதனையாக இருந்தது..

'என்னை ஒரு மிசினாக நினைச்சிட்டாரோ' தனக்குள் கேள்வியை கேட்டுக்கொண்டு மறுபடி புலம்பலை ஆரம்பிக்கிறாள்.

தினமும் தனியனாய் 4 மணிக்கு எழும்பி பள்ளி செல்லும் பிள்ளை, வேலைக்குப் போகும் கணவன், இவைகளின் அன்ற ாட வேலைகளையும் செய்து, தனது வேலைகளும் செய்து. அயன் பண்ணி, சமையல் செய்து, குளிக்கவைத்து, சாப்பாடு பரிமாறி, தான் வேலைக்குச்சென்று மறுபடி வந்து குழந்தைகளை அழைத்து, வீட்டு வேலைகள் பார்த்து நித்திரைக்குப்போக 10-11 ஆகிவிடும்.

அதிகாலை 4 மணிக்கு எழுந்தால் தான் அனைவரையும் சரியாக கவனித்து 8 மணிக்கு தானும் வேலைக்கு போகலாம். கணவனிடம் இருந்து எந்த உதவியும் ஆதரவும் இன்றி தன்னந்தனியாக சுழலும் அவளது மன உளைச்சலையும், சுமையையும் பங்கிட அவன் தயாராக இல்லை.

அவனைப்போலத்தான் அவளும் வேலைக் குச் செல்கிறாள் உழைக்கிறாள்.. ஆனால் அவளுக்கு மட்டும் குடும்பத்தில் சுமை ஏன் அதிகம்? வீட்டு வேலைகள் பெண்கள் வேலை யாம் அதைச்செய்ய வெட்கப்படும் அவன்

'நான் பொட்டையன் இல்லை உதுகள் செய்ய' என்பான். உதவி கேட்டால் தேவையில்லாத பிரச்சனை

' என்ன நீர் தான் பெரிய வேலைக்குப் போற பொம்பிளை மாதிரி தினம் படம் காட்டிறீர்.. உங்க மற்றவை போறதில்லையோ? பிள்ளை யளை கவனிச்சுக்கொண்டு எங்கட அம்மாமார் வீட்டு வேலை செய்யலையோ? உமக்கு வேறை வோசிங் மிசின், காஸ் அடுப்பு இப்படி நிறைய வசதிகள் கிடக்கு அவை எவ்வளவு கஸ்டப்பட்டவை' என்று பேசுவான்.

'ஏனப்பா என்னை மாதிரி அவையும் வேலைக்குப்போனவையோ.. 24 மணிநேரம் வீட்டில இருந்தவை செய்திச்சினம் நான் வேலை க்கும் போய் இங்கையும் மிசினாய் வேலை செய்ய வேண்டியதாய் எல்லோ கிடக்கு. வோசின் மிசினுக்க உடுப்பு போடாமல் தானாய் தோய்க்குமே.. அடுப்பில காய்கறியளை வெட்டி வைக்காமல் தானாய் காய்ச்சுமே? அதுக்கு தான் உதவி வேணும் எண்டிறன்'

'நான் என்ன மிசினே வீட்டிலையும் மாடாய் வேலசெய்து ஒபிசிலையும் வேலை செய்து கஸ்டப்பட' அவளும் கேட்காமல் இல்லை..

அவளது பேச்சிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. அவனை விட அவள் எந்த விதத்தில் உயர்ந்தவள் அல்லது எந்த விதத்தில் தாழ்ந் தவள். 2 வேலை செய்ய அவனால் முடியாத விடத்து அவளால் எப்படி முடியும். குடும்பம் அவளுடையது, குழந்தைகள் அவளுடையது அதற்காக தனியாக கஸ்டப்பட முடியுமா.?

சுகங்களை பகிரும் துணைவன் சுமைக ளையும் பகிரும் போது தானே அவளுக்கும் மகிழ்ச்சி. அவனும் ஒரு கை கொடுத்தால். 4 மணிக்கெழும்பி 8 மணிவரை சுடுதண்ணியாய் கொதிப்பவள். சற்று தாமதமாய் எழுந்து பிள்ளைகளையும் கவனிச்சு சந்தோசமாய் ஆரோக்கியமாய் இருக்கலாம் தானே. இது அவளது கேள்விகள்.

அவன் அதை உணர்ந்ததாய் தெரியவில்லை. எத்தனை நாள் தான் வாய்விட்டுக்கேட்பது அது தான் தனக்குள் புலம்புகிறாள். மணி 7 அடித்து விட்டது. 6.30 க்கே பிள்ளைகளை எழும்பி குளிக்க வைத்து தயார்படுத்திவிட்டாள். தானும் தயாராகிவிட்டாள். 7 அடித்ததும் ரவி படுக்கையை விட்டு எழுந்தான்.

உடுப்புகள் றெடியா'.. எந்த சேட் அயன் பண்ணினீர்'. அதற்குள் ஆயிரம் கேள்விகள்.

ஏன் நீங்களும் பேபியே, அயன்போட்ல கிடக்கு போய்ப் பாருங்கோ.. பிடிக்காட்டால் திரும்ப அயன் பண்ணுங்கோ.. அவள் பதில் சொல்லிவிட்டு பிள்ளைகளை அதட்டி உணவு ஊட்டிக்கொண்டிருந்தாள்.

ரவி குளித்து முடித்து வந்து மேசையில் வைத்திருந்த தேனீர்க் கோப்பையை தூக்கியபடி சென்று தொலைக்காட்சிப் பெட்டிக்குள் தன்னை நுழைத்துக் கொண்டான்.

அழைப்பு மணி அலறியது.

'கதவைத்திறக்கிறியளே' என்று குரல் கொடுத் தாள்

'போய்த்திறவும் உமக்குத்தான் ஆக்கள் வந்திருப்பினம்' என்றான் ரவி. அவனை முறைத்துப்பார்த்தபடி கதவைத்திறந்தாள் சுமதி. வாசலில் நின்றது பக்கத்துவிட்டு சுந்தரி..

'வாங்கோ என்ன சுந்தரியக்கா இந்த நேரம்' ஆச்சர்யமாக கேட்டாள். ஏனெனில் சுந்தரி யும் இப்ப அவசரமாய் வேலைக்கு கிளம்பிக் கொண்டிருக்க வேண்டியவள். 'ஒரு உதவி கேக்க வந்தனான் சுமதி' என்றாள சுந்தரி.

'என்னக்கா சொல்லுங்கோ' கருசனையோடு வினவினாள் சுமதி.

'என்னெண்டால் கண்ணன் நேற்றொரு சின்ன கார் விபத்தில கொஞ்சம் காயப்பட் டிட்டார். இரவு ஒரு பாட்டியால வரேக்க நடந்தி ருக்குது அது தான் நீங்கள் உங்கட பிள் ளையளை பள்ளிக்கூடம் கூட்டீட்டு போகேக்க கபிலனையும் கூட்டீட்டுப்போறியளே?

'எனக்கு கொஞ்சம் வேலை கிடக்கு.. வழ மையா அவர் பிள்யைளை வெளிக்கிடுத்த நான் சமைக்கிறனான்.. அவர் பிள்ளை யளை கொண்டே விட்டிட்டுவர நான் வெளிக்கிட்டிடுவன் போகலாம்'

'இண்டைக்கு இரவு கண் முழிச்சது என்னால வெள்ளெனவும் எழும்ப முடியேல்லை. பாவம் கண்ணன் நான் சமைக்காமல் போனால், பிறகு நாங்கள் வந்து அவசரப்படுவம் எண்டு ஏலாததோட எழும்பி சமைச்சு கஸ்டப்படுவார். அது தான் இவனை உங்களோட விட்டால் நான் சமைச்சு வைச்சிட்டு என்ர நேரத்துக்குப் போவன். உங்களுக்கு ஏலும் என்டால் சரி இல்லாட்டால் நான் கடையில எடுத்து வைச்சிட் டுப்போப்போறன்'

என்று முடித்தாள் சுந்தரி.

'சே பிரச்சனையில்லை அக்கா இவை இரண்டு பேரும் இப்ப தயாராகிட்டினம் நான் போகேக்க கூப்பிடிறன் கொண்டு வந்து ஏத்திவிடுங்கோ. பின்னேரமும் நான் கூட்டீட்டுவாறன். கண்ணன் அண்ணைக்கு நல்லாகும் மட்டும் நான் கூட்டீட்டுப்போறன் அக்கா நீங்கள் கஸ்டப்படாதேங்கோ' என்ற சுமதி பெருமூச்சுத்தான் விட முடிந்தது.

சுமதிக்கு ஒரு விதத்தில் சுந்தரிமேல் பொறாமை தான். இயலாத நேரத்திலும் கண்ணன் அண்ணை அவாக்கு உதவி செய்ய நினைக்கிறார். அவர் கஸ்டப்படக்கூடாது என்று மனைவி எப்படித்துடிக்கிறா இதெல்லோ வாழ்க்கைத்துணை என்ற சொல்லிற்கே அழகு. இனி என்ன செய்வது மௌனமாய் விட்டுவந்த பாதி வேலையை தொடரச்சென்றாள் சுமதி.

ம்... ஒற்றுமையாய் வாழுற அந்த குடும்பத் திற்கு இந்த உதவியை ஆவது செய்வமே என்று புறுபுறுத்த படி பிள்ளைகளை ஏற்றிக்கொண்டு பாடசாலை சென்றுவிட்டாள் சுமதி.

மறுநாள் வழமையை விட சற்று முன்னரே எழும்பிய ரவி. தன் வேலைகளை தானே செய்யலானான். அப்படியே பிள்ளைகளையும் கவனித்தான். அத்தோடு நின்று விடாமல். 'சுமதி நான் வேணும் என்றால் இன்டைக்கு பிள்ளையளை கொண்டே விட்டிறன். நீர் வரேக்க கூட்டீட்டு வாருமன்.' என்றான் ரவி.

சுமதிக்கு ஒரே ஆச்சர்யம். என்ன இண்டைக்கு சந்திர சூரிய கிரகணம் ஏதுமே என்று முழித்தாள்.

'என்ன லூசு மாதிரி முழிக்கிறீர்.. இல்லை நேற்று சுந்தரி கண்ணனுக்கு சுகமில்லை என்ற உடனை வழமை குழம்பி கஸ்டப்பட்டு உன்ன ட்டை உதவிகேட்டு வந்திட்டா. அவனுக்கு ஒன்று என்றதும் அவவின்ர நாளாந்த வாழ்க்கையில இத்தனை மாற்றம். ஆனால் எனக்கு ஒன்டெ ன்றால் உனக்கு எந்த மாற்றமும் இருக்காதே. நான் நல்லாய் இருக்கும் போது கூட.. நலமற்றவன் மாதிரி நடந்திருக்கிறனே, இனி யாவது கொஞ்சம் சுமப்பம் என் குடும்பச் சுமைகளை சுமப்பதில் சுகம்காணுவம்'

என்றபடி கண் சிமிட்டினான்.

அவனது பேச்சைக் கேட்க பாவமாய் இருந்தது சுமதிக்கு.

இருந்தாலும் அது தானே உண்மை. சுகதேகியான அவன் இத்தனை நாளும் அவ ளில் சார்ந்தல்லவோ இருந்தான். குழந்தை களோடு அவனையும் சேர்த்தல்லவோ அவள் சுமந்தாள். 'சரி ரவி நீங்கள் கூட்டிக்கொண்டு போங்கோ நான்.. அடுப்பிலை வைச்சதுகளை இறக்கி வைச்சிட்டு ஆறுதலாய்ப்போறன்'. என்ற அவளின் வார்த்தையில் ஒரு தெளிவும் குளிர்ச்சியும் நிறைந்திருந்தது அதை கவனித்த போது அவனுக்கே உறைத்தது.

இனியாவது விடிய விடிய வீட்டில வெடி விழாமல்.. அமைதியாய் நாட்கள் மலரட்டும் என்று கூறி பிள்ளைகள் கையைப் பிடித்தான்.

Criminal Defence Service
Community Legal Service

S .Satha & Co Solicitors
We are always at your service

PRINCIPAL PARTNER
S .SATHANANTHAN

- Injunction
- Family Law
- Immigration
- Criminal Law
- Conveyancing
- Legal Aid Work

Tel: 020 8471 9484 Fax: 0208471 9485
Emergency No: 07956 288 671 Property Department Fax: 020 8471 1887



376-378 High Stret North, Manor Park, London E12 6PH.
DX:133012 Upton Park2

# சினிமா





விமர்சனம்

## அறை எண் 305ல் கடவுள்

கடவுளை காண அறைகூவல் விடும் நண்பர்களின் அறைக்கு கடவுள் வருவதும், அந்த கடவுளையே கலாய்ப்பதும் என்று கலகலப்பான படமாக உருவாகியிருக்கிறது அறை எண் 305ல் கடவுள்.

வேலைதேடுகிறவேலைசெய்யும் இளைஞர்களான சந்தானமும், கஞ்சா கருப்பும் சென்னை திருவல்லிக்கேணி மேன்ஷன்வாசிகள். வேலை கிடைக்காமல் இவர்கள் படுகிற பாடு சிரிப்பலைகள்.

மேன்ஷன் வாடகையில் இருந்து... வயிற்றை நிரப்பு மெஸ் வரை கடனோ கடன். நாளைக்கு பணத்தோடு வந்தால் மேன்ஷனில் இருக்கலாம். இல்லையேல் பெட்டி படுக்கையெல்லாம் ரோட்டில்தான் என்கிற நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

இந்த ஆதங்கத்தில் இருவரும் மொட்டை மாடியில் நின்று கொண்டு சின்சியராக யோசிக்கிறார்கள். அப்போது, ஏ கடவுளே... நீ ஒரு அப்பனுக்கு பொறந்தவன்னா நேரிலே வாடா... என்று அறைகூவல் எழுப்புகிறார்கள். சட்டென் ஒரு மின்னல் ஒளி... எதிரில் வந்து புன்னகைக்கிறார் கடவுள்.

அதன் பிறகு நடக்கும் கூத்துகளும், கலாய்ப்புகளும், ஆர்ப்பாட்டங்களும், அங்கப்போர்களும் கலகலப்பு. கடவுள் அவதாரம் எடுத்திருப்பவர் பிரகாஷ்ராஜ்.

சந்தானமும், கஞ்சா கருப்பும் அழைத்ததை ஏற்று பூலோகத்தில் தோன்றி படாதபாடு படுகிறார். சந்தானம், கருப்புடன் அவர்கள் செல்லும் இடத்துக்கெல்லாம் செல்கிறார். காதலியிடம் பேசத் துடிக்கும் சந்தானத்தைத காதலியிடம் பேச வைக்கிறார். டூயட் பாட வைக்கிறார். வயிற்று பசியை போக்க சோடுக்கு போடுகிற நேரத்தில் ஒரு பபே விருந்தே நடத்துகிறார்.

இருப்பினும் பணம் தரமாட்டேன் என்று கண்டிஷன் போடுவதால் கடவுள் உருப்படியாக எதுவும் செய்யவில்லை என்ற மனக்குறையே சந்தானத்துக்கும், கருப்புவுக்கும் மேலோங்கி நிற்கிறது. இதனால் ஒன்றுமே செய்யாத கடவுளிடம் இருக்கும் அதிசய கருவியை தூக்கிக் கொண்டு எஸ்கேப் ஆகிறார்கள் இருவரும்.

அதன் பிறகு கடவுளே ரோட்டில் கடலை விற்று பிழைப்பு நடத்தும் சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார். இப்படி படம் முழுக்க காமெடி காட்சிகள் வயிறு வலிக்க சிரிக்க வைக்கிறது.

பிரகாஷ்ராஜின் முகத்திலா இவ்வளவு சாந்தம். நடிப்பில் இன்னொரு மைல்கல்லை அடைந்து விட்டார். தன் பெயரால் நடக்கிற கொடூரங்களை கண்டு பதறுவதும், நாத்திகரான ராஜேஷிடம் கடவுள் பற்றி விளக்கம் கொடுப்பதும் அருமை. கடவுள் பேசுகிற வசனங்கள் நச்.. நறுக்... ரகம்.

ஹீரோ போல மின்னுகிறார் சந்தானம். ரோஜா பூவை வாடகைக்கு எடுக்கிற சந்தானம், காபிடேயில் வேலைக்கு போய், முதலாளியிடம் அவமானப்பட்டு, பிறகு நேரம் வரும்போது அதை கையேந்தி டே ஆக்கிவிட்டு போவதெல்லாம் குபீர் சிரிப்பு.

இன்டர்வியூவில் தன்னை நரி என்று வர்ணித்த முதலாளியை, நரியாகவே கூண்டில் அடைக்கிற சந்தானத்தின் குறும்பு ரசிக்க வைக்கிறது.

கஞ்சா கருப்பு வழக்கமான பாஷையில் கலக்கியிருக்கிறார். மேடையில் முழங்கி கொண்டிருக்க, பக்கெட்டுடன் உள்ளே வந்து, நீ குளிக்க போடா என்று சந்தானம் சொல்லும் காட்சியில் புதுமை.

கனவையும், நிஜத்தையும் முடிச்சு போடும் அந்த காட்சி டைரக்டரின் கற்பனைக்கு கிடைத்த வெற்றி.

இவர்கள் தவிர பிரகாஷ்ராஜை ஒரு தலையாக காதலிக்கும் ஜோதிர்மயி, க்ளைமாக்சில் ஷாக் கொடுக்கிற மதுமிதா என்று பலரும் படத்துக்கு பூஸ்ட்..

தனது வேலைகளை முடிந்து விட்டு மேலோகம் செல்லும் கடவுள், மறுபடியும் மேன்ஷன்வாசிகள் அழைப்பை ஏற்று பூலோகத்திற்கு திரும்பும் போது தனது விசேஷ கருவிக்கு அத்தனை பூட்டுகள் போட்டிருப்பது சிரிப்போ சிரிப்போ.

வித்யாசாகரின் இசையில் நான்கு பாடல்கள் சுமார் ரகம். சில காட்சிகள் அலாவுதீனும் அற்புதவிளக்கும் படத்தை நினைவூட்டுவது மட்டுமே மைனஸ்.

அறை எண் 305ல் கடவுள் - சிரிப்போ சிரிப்பு

- *தினமலர்*

## சினித்துளி

### சர்ச்சையில் பா.விஜய்



தரணி இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படம் 'குருவி'. சமீபத்தில் இப்படத்தின் பாடல்கள் வெளியிடப்பட்டன. வித்தியாசாகர் இசையில் பா.விஜய் எழுதிய பாடல் ஒன்றில் 'தில்லையாடி வள்ளியம்மா தில்லிருந்தா நில்லடிம்மா தில்லாலங்கடி ஆடுவமா திருட்டுத்தனம் பண்ணுவமா குத்தமா ஆத்தா குத்தமா...' என்ற வரிகள் வருகின்றன

இந்த வரிகள் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. காந்தியடிகளுக்கு தமிழ் கற்றுக் கொடுத்த தேசிய வீராங்கனையான தில்லையாடி வள்ளியம்மாவை இழிவுபடுத்துவதாக இந்த பாடல் வரிகள் அமைந்துள்ளன என தமிழ் சங்கங்கள் பல போர்க்கொடி தூக்க ஆரம்பித்துள்ளன. ஆடியோ கேசட்டிலிருந்தும், படத்திலிருந்தும் இந்தப் பாடலை நீக்காவிட்டால் நீதிமன்றத்தை நாடுவோம் என தமிழ் விரும்பிகள் பலர் குரலெழுப்பியுள்ளனர்.

*எதிர்ப்பிலிருந்து மீள்வாரா கவிஞர்?*

### கண்கொடுத்த விக்ரம்



கட்டவுட்டுக்கு ரசிகர்களைப் பால் வார்க்கச் செய்து விட்டு சத்தமே இல்லாமல் தம் பணியைச் செய்து கொண்டிருக்கும்சினிமா வட்டாரத்தில் நடிகர் விக்ரம் ஒரு வித்தியாசமான காரியத்தைச் செய்திருக்கிறார்

தனது கண்களைத் தானம் செய்வதற்கு பதிவு செய்திருப்பதுடன் தனது ரசிகர்கள் 1300 பேரையும் தன்னை போலவே கண்தானம் செய்ய வைத்திருக்கிறார்.

*மற்றைய நடிகர்கள் பின்பற்ற நல்லதொரு முன்மாதிரி. சபாஸ் விக்ரம்*

### வேண்டாம் விஜய்



விஜய்யை படத்தில் நடிக்க வைக்க இயக்குநர்கள் தவமாய் தவமிருந்து கொண்டிருக்க இயக்குநர் ஹரி மட்டும் விஜய்யை விட்டு விலகிச் செல்கிறார் என்பது ஆச்சரியமான செய்தியல்லவா?

இயக்குநர் ஹரியின் படத்தில் நடிக்கும் விருப்பத்தை விஜய் வெளிப்படுத்தியும் ஹரி பெரிதாகக் காது கொடுத்ததாகத் தெரியவில்லை

காரணம் 'வேல்' படத்தில் விஜய்யை நடிக்க வைக்க முயன்றிருக்கிறார் ஹரி. அவர் 'அழகிய தமிழ்மகன்' படத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து, வேலை புறக்கணித்ததால் சூர்யாவை 'வேல்' படத்தில் நடிக்க வைத்தார்.

விஜய்யின் இரட்டைவேடப் படம் தோல்வியை தழுவ, சூர்யாவின் இரட்டை வேடப் படம் வெற்றி பெற்றது. இதனைத் தொடர்ந்து மீண்டும் ஹரியை அணுகியிருக்கிறார் விஜய். இப்போது ஹரியின் முறை.

விஜய்யை நிராகரித்து விட்டு பரத்தை நாயகனாக்கி 'சேவல்' படத்தை தொடங்கியிருக்கிறார். தனது படத்துக்கு விஜய் 'சேவல்' தலைப்பை கேட்டதாகவும், ஹரி மறுத்ததாகவும் தகவல்கள் கூறுகிறார்கள்.

*இதுதான் நேரம் என்பதோ?*

அரங்கேற்ற மலர்கள் | விழா மலர்கள் |
அழைப்பிதழ்கள் | நினைவு மலர்கள்
விளம்பர பிரசுரங்கள் | தமிழ் தட்டச்சு மற்றும்
அனைத்து அச்சு வேலைகளுக்கும்....



**seven** | zero
graphic designers
**020 7043 4319**
45B Crusoe Road | Mitcham | Surrey CR4 3LJ

creative artwork from **concept to design**

# Edutec
TRAINING CENTRE

*"If excellence is what you are craving for, we are here to make it happen. Come and join our classes and see for yourselves."*

E-mail: info@edutec.org.uk
Web : www.edutec.org.uk



Week-end classes commence on Saturday 5th July 08 at 9.00am
Week-day evening classes commence on Monday 7th July 08 at 6.00pm

Transport
Bus: 101,104,238 & 147
Train & Underground
East Ham, Manor Park

# AAT
Courses for December 2008 examinations

- **ertificate Level** (Foundation)
- **Advanced Certificate Level** (Intermediate)
- **Diploma Course** (Technician)
- **Computerised Accounts City & Guilds** Level 1,2 &3
- **Computerised Payroll** (IAB)
- **International Association of Book-Keepers** Level 2 & 3

## UNIQUE OPPORTUNITY FOR AAT STUDENTS

AAT - Certificate to Diploma Levels in 12 Months

Combined Certificate & Advanced Certificate Courses for December 2008 examinations Followed by Diploma course for June 2009 examination.

The achievements of our learners for the last 3 years are

| | |
|---|---|
| **AAT Certificate** (Foundation) | 100% |
| **AAT Advance certificate** (Intermediate) | 85% |
| **AAT Diploma** (Technician) | 95% |
| **Pitmans Computerised Accounts** Levels 1, 2 & 3. | 95% |
| **IAB Payroll** Levels 1, 2 & 3 | 100% |

7, Station Chambers
High Street North, East Ham,
London.
Tel: 0203200 1006
Mob: 07950 343 181

Edutec
TRAINING CENTRE



| | | | | | |
|---|---|---|---|---|---|
| Cochin £260 + taxes | Trivandrum £245 + taxes | Chennai £225 + taxes | Trichy £345 + taxes | Bangalore £265 + taxes | Colombo £310 +taxes |

# COMPLETE WORLDWIDE TRAVEL SERVICE

Call for Last Minute DEALS and tour packages

Call us on
**020 8665 0206**

தமிழில் தொடர்புகளுக்கு
**020 8665 8997**

**Our phone lines are now open 7am-11pm All 7 days**

Lowest Price and Seats Guaranteed

Terms & Conditions apply

IATA

**LinkAir Travels Limited.**
361 London Road, Croydon, CR0 3PB
www.linkair.co.uk

# BEST FOODS SUPERMARKET



## சொப்பிங் செய்வது உடம்புக்கு நல்லது

**BEST FOODS ல் செய்தால் இன்னும் நல்லது**

**GROCERIES** – Asian, African, Caribbean, English & East European.

**OFF-LICENCE** – All brands of Beers, Wines & Sprits, complete with all popular brands of soft-drinks.

**NEWS** - All popular News Papers, Magazines and Periodicals.

**HALAL MEAT** – Fresh & Frozen.

**FISH** – Fresh & Frozen.

**FRUITS & VEGETABLES** – Fresh ones in abundance with a wide choice, exotic types too.








ABOUT OUR BRANCHES.

**CROYDON.**

"The First one to arrive. The most popular one in the town. It is a complete shop for all your daily needs. The customers simply walk in again, again and again".

**HOUNSLOW.**

An attractive spacious convenient store. A treat to the customers.

**SOUTH HARROW.**

*"Well displayed grand store, gives full satisfaction to* the enthusiastic regular customers and an element of surprise to the fist timers".

**WEMBLEY.**

"The latest to appear, and is already a hit. Customers enter with their eye borrows raised and walk out with a broad smile of satisfaction".

That is 'The Best Foods Magic'. "Come on let us do some shopping.....where else!"

We always have large stocks of Sri Lankan, Indian, African, Carrabean, English and East European food items, groceries, and many more, for you to choose from!

**தரமான பொருட்கள், நியாயமான விலை, அன்பான உபசரிப்பு**

**CROYDON**
259 - 261 London Road,
West Croydon, CR0 2RL
T: 020 8684 6269
F: 020 8686 4577

**HOUNSLOW**
364 - 366 Bath Road,
Hounslow, TW4 7HT
T: 020 8572 2323

**SOUTH HARROW**
249 Northolt Road,
South Harrow, HA2 8HR
T: 020 8423 9933
F: 020 8684 4677

**WEMBLEY**
11A - 13 Ealing Road,
Wembley, HA0 4AA
T: 020 8900 0100